MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS 41

பரமபதிதுணை.

சீவகசிந்தாமணி.

சீவகனது (சரித்திரத்தையுணர்த்தும்) காவியம். சிந்தாமணிகருதியது கொடுக்கும் ஒருவகைநிதி. இப்பொருட்பெயர் இரப்போர்குறையை யொழித்துப் பெருஞ்செல்வந்தருதல்போலக், கற்போர் அறியாமைக் குறையையொழித்துச் சொற்சுவை, பொருட்சுவையென்னும் இவற்றையுணரு முணர்ச்சிச் செல்வத்தைத்தரும் இக்காவியத்தின் மேல்நின்று உவமையாகுபெயராய் இந்நூற்குக்காரணக்குறியாயிற்று. சீவகனது எனவிரிதலால் சீவகசிந்தாமணியென்னுந்தொடர் செய்யுட்கிழமையென்னும் பொருட்பிறிதின் கிழமைப்பொருளில்வந்த ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். னகரக்கேடு "உயிரீறாகிய வுயர்திணைப்பெயரும்—புள்ளியிறுதியுயர்திணைப்பெயரும் — எல்லாவழியுமியல் பெனமொழிப" எனத்தொல்காப்பியம் எழுத்ததிகாரம் தொகைமரபில்வருஞ் சூத்திரத்தில் "உயிரீறுபுள்ளியிறுதி" என்றமிகையால், நன்னூலில் "சிலவிகாரமாமுயர்திணை" என்றவிதியால். சொற்சுவை—குணம், அலங்காரம் எனவிருவகைப்படும். சீவனது சரித்திரம் என்றது "மீனேறுயர்த்த கொடிவேந்தனை வென்றபொற்பிற்—றானேறனையானுளன் சீவகசாமியென்பான்—வானேறநீண்ட புகழான் சரிதம்மிதனைத்—தேனூறநின்று தெருண்டாரவை செப்பலுற்றேன்" எனவருஞ் செய்யுளால் உணர்க.

கோவிந்தையார் இலம்பகம்.

கோவிந்தையார் நந்தகோன்புத்திரி. இலம்பகம் நூன்முடிபு. இலம்பகம் அசைவு. அதுதொழிலாகுபெயராய்ப் பலமலராற்றொடுத்த மாலைமேல் நிற்றலால் தொழிலாகுபெயர், அது உவமிக்கப்படு பொருளாகிய பலசொல்லாற்றொடுத்த செய்யுள்மேல் நிற்றலால் உவமையாகுபெயராய்ப் (பிண்டமும் பிண்டித்தபொருளும் வேறன்மையால்) சிறுபாகமாகிய நூன்முடிபுக்குக்காரணக்குறியாய்வந்தது. கோவிந்தையாரை மணம்புரிந்த இலம்பகம் எனவிரிதலால் எய்தப்படுபொருளில்வந்த உருபும்பயனுந்தொக்கஇரண்டாம்வேற்றுமைத்தொகைநிலைத்தொடராகக்கொள்க. இலம்பகம் வடசொல். நூன்முடிபு படலம். பிண்டம் நூன்முடிபு. பிண்டித்தபொருள் செய்யுள். கோவிந்தையார். கோவிந்தையென்னும் இயற்பெயர் முன்வந்த பலர்பால் முடிபாகிய ஆர் என்னும் இடைச்சொல் உயர்த்தற்பொருள் மேல்நின்றது. இவ்விலம்பகம் வீரமகளைப் புணர்ந்தமையையுணர்த்தி நிற்றலால் வாகைத்துறையிலமையும்.

(1) ஆர்வவேரரிந்தச்சணந்திபோய்
வீரன்றாணிழல்விளங்கநோற்றபின்
மாரிமொக்குளின்மாய்ந்துவிண்டொழச்
சோர்வில்கொள்கையான்றோற்றநீங்கினான்.

இ - ள். அச்சணந்திபோய்—ஆரியநந்தி இவ்விடத்தினின்றும் போய், வீரன்தாள் நிழல்விளங்க—ஸ்ரீவர்த்தமாநஸ்வாமிகள் சமவசரணத்தில் விளங்கும்படி, ஆர்வம்வேர் அரிந்து (பிறப்பிற்குக் காரணமாகிய) ஆசையென்கிற வேரினைமுற்றுங் களைந்து, நோற்றபின் — தவஞ்செய்தபின்பு, சோர்வுஇல் கொள்கையான் (நோற்றலில்) தளர்ச்சியில்லாத அக்கொள்கையை யுடையவன், விண்தொழ—தேவர்கள்வணங்க, மாரிமொக்குள் இன்மாய்ந்து—நீரிற்றோன்றியகுமிழிபோலமறைந்து, தோற்றம் நீங்கினான்—பிறவியினின்று நீங்கினான்.

(நச்சினார்க்கினியர்உரை) அச்சணந்தி இவ்விடத்து நின்றும்போய், தாணிழலிலேவிளங்கும்படி வேரையரிந்து நோற்றபின்பு, அக்கொள்கையான், விண்டொழமொக்குளின்மாய்ந்து பிறவிநீங்கினான் என்க.

நீரிற்றோன்றிய நீர்க்குமிழி அந்நீரிலொடுங்கிப் புலப்படாமைபோல, முத்தியடையுங்காலத்தில் அவர்திருமேனியி லொடுங்கிப் புலப்படாது மறைதலின் மாரிமொக்குளின் மாய்ந்தென்றார். நோற்ற இறந்தகாலப்பெயரெச்சம் நோல்பகுதி, தகரமெய் இடைநிலை, லகரமுந் தகரமும் றகரமாகத் திரிதல் சந்தி, அ எச்சவிகுதி. இதுபிறபெயர்கொண்டது. இன் உருபு ஒப்புப்பொருட்டு. விண் இடவாகுபெயராய்த் தேவர்கள்மேல் நின்றது. கொள்கையான் என்பதின் முதலில் அகரச்சுட்டுத் தொகுத்தல். மாய்ந்து இறந்தகால வினையெச்சம், மாய் (மறைவு) பகுதி, நகரமெய்சந்தி, தகரமெய் இடைநிலை, உ எச்சவிகுதி. தோற்றம்நீங்கினான் நீக்கப்பொருளில்வந்த ஐந்தாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். ஸ்ரீவர்த்தமாநஸ்வாமிகள் இருபத்துநான்காந் தீர்த்தங்கரர். சமவசரணம் பூமிக்கு, ஐயாயிரம்வில்லு யரத்தின்மேல் பன்னிரண்டுயோசனை யளவுள்ளதாய்ச்சௌதருமேந்திராதிதேவர்களால் நிருமிக்கப்பட்ட சினாலயம். இதற்குப் பூமியிலிருந்து இருபதினாயிரம்சோபானமுள்ளதென்பார். இதனால் சீவகனாசிரியனாகிய அச்சணந்திமுத்தியடைந்தது கூறப்பட்டது. (க)

(2) நம்பனித்தலைநாகநன்னகர்ப்
பைம்பொனோடைசூழ்பருமயானையுஞ்
செம்பொனீள்கொடித்தேரும்வாசியும்
வெம்பவூர்ந்துலாம்வேனிலானினே.

இ - ள். நம்பன்—சீவகன், இதலை—இவ்வுலகில், நாகம்நல்நகர்—தேவருலகுபோலப்பொலிவுவாய்ந்த இராசமாபுரத்தில், பைம்பொன் ஓடைசூழ்—பசியபொன்னாற்செய்த நெற்றிப்பட்டத்தையணிந்த, பருமம் யானைஉம்—கவசத்தையுடைய யானையையும், செம்பொன் நீள்கொடி தேர்உம் வாசிஉம்—செவந்தபொன்னாலமைந்த நீண்டகொடிகட்டிய தேரையுங் குதிரையையும்

வெம்ப ஊர்ந்து (கண்டோர்) விரும்பஏறி, வேனிலான்இன் உலாவும்—மன்மதனைப்போல (பெண்களுக்கு விருப்பத்தைத்தந்து) நடப்பானாயினன்.

ந - ரை. நம்பன், இவ்வுலகில் நாகம்போலு மிராசமாபுரத்தே, யானை முதலியவற்றைக்கண்டார் விரும்பவேறி, வேனிலான்போல மகளிர்க்குவேட்கைவிளைத்துநடக்கும் என்க.

வெம்ப எதிர்கால வினையெச்சம் வெம்புபகுதி, உகரக்கேடுசந்தி, அ எச்சவிகுதி. உலாம் ஈற்றுயிர் மெய்கெட்டுநின்ற திணைபால்கட்குப் பொதுவாகிய செய்யும் என்னும் வினைமுற்று நம்பன் என்னுஞ் சிறப்புப்பெயரால்பொதுமைநீங்கி உயர்திணை யாண்பால்மேல் நின்றது. ஈற்றுயிர் மெய்கெடுதல் "செய்யுமெனெச்சம்" என்னுஞ் சூ—இல் "முற்றேல்" என்பதனுல். பொதுமையைச்சிறப்புப் பெயர்வந்துநீக்கல் " பொதுப்பெயர்வினைகளின்" என்ற சூ—ஆல். (உ)

வேறு.

(3) கலையினதகலமுங்காட்சிக்கின்பமுஞ்
சிலையினதகலமும்வீணைச்செல்வமும்
மலையினிலகலியமார்பனல்லதிவ்
வுலகினிலிலையெனவொருவனுயினன்.

இ - ள். கலையினது அகலம் உம்—கல்விகாரணமாகப் பிறக்கும் ஞானமும், காட்சிக்கு இன்பம்உம்—அப்பருவத்திலே பிறப்பதோரழகும், சிலையின்அது அகலம்உம்—வில்முதலிய ஆயுதங்களைப் பழகியவகையால் அப்பருவத்திலேபிறக்கும்வீரமும், வீணைச்செல்வம்உம்—நாளத்திறேடேகண்டத்திலும் வீணையிலும் பிறக்கும்பாட்டும் ஆகிய இந்நான்கும், மலையின்இல் அகலியமார்பன் அல்லது—மலையைப்போல அகன்ற மார்பையுடைய சீவகனையல்லாமல், இஉலகுஇன்இல் இல்லைஎன்ன-இவ்வுலகிலவைஇல்லையென்னும்படி, ஒருவன் ஆயினன்—தானொருவனேயானன்.

ந - ரை. ஞானமும் அழகும் வீரமும் காமமுமாகின்றன்சீவகன், இவனல்லாது இவ்வுலகில்ஞானமுதலியன இல்லையென்னும்படி தானொருவனேயாயினன் என்க.

சீவகனுக்குப் பதினைந்துவருடஞ்சென்றபின் நல்வினையாற் பிறக்கின்ற குணங்களைச் சொல்லுகின்றமையால் அப்பருவத்திலேஎன உரைகாரர்கூறினர். இசையும் நாடகமும் காமத்தைத்தருதலால் அவைகளாற்பிறக்குங் காமத்தை வீணைச்செல்வம்என நூலாசிரியர் கூறினர். அரசனுக்குச் சிறந்தன இந்நான்கும் என்றர். இன்னுருபிற்கு இன்சாரியை வருதலில்லாமையால், மலையினினகலிய என்னும் பாடத்தை மலையினிலகலிய எனப்பாடங்கொண்டாம் "இன்னெனவரூஉம் வேற்றுமையுருபிற் — கின்னென்சாரியையின்மைவேண்டும்" என்பது தொல்காப்பியம். அகலம் பண்பாகுபெயராய் ஞானத்தின்மேலும் வீரத்தின்மேலும் நின்றது. கலையினதகலம், சிலையினதகலம் ஏதுப்பொருளில்வந்த ஆறும்வேற்றுமைத்தொகாநிலைத்தொடர். அகலிய இறந்தகாலப்பெயரெச்சம் அகல்பகுதி, கடைக்குறையாய்நின்றஇன் இறந்த

காலவிடைநிலை, யகரத்தோற்றம்சந்தி, அவிகுதி. கலையினதகலம் என்பதற்குக் கலைமகள் எனவும், காட்சிக்கின்பம் என்பதற்குவீற்றுத்தெய்வம் எனவும், சிலையினதகலம் என்பதற்கு வீரமகள் எனவும், வீணைச்செல்வம் என்பதற்கு மாதங்கியெனவும் பொருள்கொண்டு, இவர்கள்தாம் இச்சீவகனல்லாது வேறியாங்களென்றில்லையென்னும்படியானன் எனப்பொருள்கொள்ளுதலும் ஒன்று. வீற்றுத்தெய்வம் அப்பருவத்திற்குரிய தெய்வம். (௩)

வேறு.

(4) நாமவென்றிவேனகைகொண்மார்பனைக்
காமனேயெனக்கன்னிமங்கையர்
தாமரைக்கணாற்பருகத்தாழ்ந்துலாங்
கோமகன்றிறத்துற்றகூறுவாம்.

இ - ள். நாமம்வென்றிவேல்—அச்சத்தைத்தரும் வெற்றிவாய்ந்த வேலினையேந்திய, நகைகொள் மார்பனை—முத்துவடமணிந்த மார்பையுடைய சீவகனை, கன்னிமங்கையர் காமனே என்னதாழ்ந்து — கன்னிப்பெண்கள் இவன் மன்மதனேயென்று தாழ்ந்து, தாமரைகண்ணால் பருக—தாமரைமலர் போன்றகண்களால் பருகும்படி, உலாவும் கோமகன் திறத்து உற்றகூறுவாம்—நடக்கும் அவ்வரசகுமாரனிடத்துப்பொருந்தியகாரியங்களை இனிச்சொல்லுவாம்.

க - ரை. அங்ஙனமொருவனாகிய மார்பனை மங்கையர் காமனேயென்று கண்ணாற்பருகும்படி நடக்கும் இவனிடத்துப்பிறந்த காரியங்களைக் கூறுவாம் என்றார் என்க.

நாமம் உரிச்சொல்லடியாகப்பிறந்த பண்புபெயர்ச்சொல்நாம்பகுதி, அம் பண்புப்பெயர் விகுதி. நகைபல் இது உவமையாகுபெயராய் முத்துவடத்தின்மேல்நின்றது. உற்றசெயப்படுபொருள்மேல்நிற்றலால் உரிச்சொல்லடியாகப்பிறந்த அஃறிணைப்பலவின்பாற்படர்க்கைவினைமுற்றுப்பெயர். உறுபகுதி, முதனிலையெழுத்தாய்த்தோன்றிய றகரமெய் இடைநிலை, உகரக்கேடுசந்தி, அவிகுதி. (௪)

(5) சில்லம்போதின்மேற்றிரைந்துதேனுலாம்
முல்லைகாரெனப்பூப்பமொய்ந்நிரை
புல்லுகன்றுளிப்பொழிந்துபால்படும்
கல்லென்சும்மையோர்கடலின்மிக்கதே.

இ - ள். சில் அம்போது இன்மேல் (பின்பனிக்காலத்திற்கு அழிகின்றமையால்) சில ஆனஅழகிய போதின்மேல், தேன் திரைந்து உலாவும்முல்லை—வண்டுகள்சாய்ந்துலவு முல்லைச்செடிகள், கார் என்னபூப்ப — இப்பொழுது மேகமென்றுமலர, மொய்நிரை புல்லுகன்று உள்ளிபால்பொழிந்து—நெருங்கியபசுக்கள் தம்மைத் தழுவியகன்றுகளை நினைத்துப் பாலைப்பொழிதலால், படும்கல்லென்சும்மை—(கறக்குமிடத்து) உண்டாகுங் கல்லென்னும் ஒலியானது, ஓர்கடல் இன்மிக்கது—ஒருகடலைப்பார்க்கிலுமேம்பட்டொலித்தது.

ந - ரை. நிரைதான்புல்லுங் கன்றைநினைத்து, முல்லைகாரெனப் பூப்பத்தானே பாலைப்பொழிதலால் படுமொலி ஒருகடலினுமிக்கதென்க.

பின்பனிக்காலத்துக்கு முல்லையரும்புகளழிதலால் சிலஎன்றார். போது கிண்கிணிவாய்க்கொள்ளுமலர். என் என்னுமிடைச்சொல் இசைப்பொருள் மேல்நின்றது. கல் ஒலிக்குறிப்பு. நிரைந்து இறந்தகாலவினையெச்சம் நிரை பகுதி. புல்லுமுதனிலைத்தொழிற்பெயர். உள்ளி இறந்தகாலவினையெச்சம். உள்பகுதி, ளகரமெய்சந்தி, இவிகுதி. பொழிந்து காரணப் பொருளில்வந்த இறந்தகால வினையெச்சம். பொழிபகுதி. இன்உருபு உயர்வு குறித்தலின் மேல்நின்ற எல்லைப்பொருளில்வந்த ஐந்தனுருபு. பூப்ப நிகழ்காலத்தில்வந்த வினையெச்சம் பூபகுதி, பகரமெய்விரித்தல்விகாரம், பகரமெய்சந்தி, அவிகுதி. பால்கறக்கும் ஒலியைமேகமெனக்கருதிப்பூத்தன என்றமையால்மயக்கவணி. இதனை வடநூலார் பிராந்திமதலங்காரம் என்பார். பின்பனிக்கால நிகழ்கின்றமையால் எனவும் உரையுண்டு. (ரு)

(6) மிக்கநாளினால்வேழமும்மதம்
உக்கதேனினோடூறிவார்சுனை
ஒக்கவாய்நிறைந்தொழுகுகுன்றின்மேல்
மக்களீண்டினார்மடங்கன்மொய்ம்பினார்.

இ - ள். மிக்கநாளின்ஆல் (இவ்விதமான) ஒலிமிகுந்தநாளில், உக்கதேனின் ஓடு—மலர்களினின்றுஞ் சிந்தியதேனினோடு, வேழம்மும் மதம்ஊறி—யானையின் மூன்றுமதங்களு மூறுதலால், வார்சுனை — நீண்டசுனைகள், ஒக்கவாய்நிறைந்து—தம்முளொக்கவாயளவுநிறைந்து, ஒழுகுகுன்று இன்மேல்—வழிந்துபாயுமலையின்மேல், மடங்கல் மொய்மபினார்—சிங்கத்தையொத்த வலிமையுடையவராகிய, மக்கள் ஈண்டினார்—வேடர்கள் நெருங்கினார்கள்.

ந - ரை. இங்ஙனம் ஒலிமிக்கநாளிலே குன்றின்மேல் மொய்ம்பினராகிய வேடரெல்லாரும்வந்து தங்களிலேதிரண்டார் என்க.

மும்மதம் இரண்டுகபோலத்திலும்துதிக்கையிலுநின்று ஒழுகும்மதம். ஒக்க உவமவுருபிடைச் சொல்லடியாகப்பிறந்த நிகழ்காலவினையெச்சம் ஒ இடைச்சொற்பகுதி, குசாரியை, ககரத்தோற்றமும் உகரக்கேடுஞ்சந்தி, அ எச்சவிகுதி. மக்கள்பலர்பாற்படர்க்கைப்பெயர்ச்சொல் மகபகுதி, கள்விகுதி, அகரந்தொகுத்தல். மொய்ம்பினார் பண்படியாகப்பிறந்த குறிப்புமுற்றெச்சம். ஊறி காரணப்பொருளில்வந்த இறந்தகாலவினையெச்சம் ஊறுபகுதி. ஈண்டினார் பலர்பாற்படர்க்கை யிறந்தகாலவினைமுற்று ஈண்டுபகுதி. ஆல் ஏழனுருபுநிற்குமிடத்து மூன்றனுருபுநிற்றல் உருபுமயக்கம். இதுமிகுதிநவிற்சியணி. இதனைவடநூலார் அதியுக்தியலங்காரம் என்பார். (சு)

(7) மன்னவன்னிரைவந்துகண்ணுறும்
இன்னநாளினாற்கோடுநாமெனச்
சொன்னவாயுளேயொருவன்புட்குரன்
முன்னங்கூறினன்முழுதுணர்வினன்.

இ - ள். இன்னநாளின் ஆல்—இத்தன்மைத்தாகியநாளில், மன்னவன்

நிரைவந்து கன்னுறும்—(வேடர்கள்) அரசனுடைய பசுக்கள்வந்துசேரும், நாம்கோடும் என்ன (அவற்றை) நாம்கொள்வோமென்று, சொன்னஆயுள்ஏ-சொன்ன அப்பொழுதே, புள்குரல்முன்னம் — பறவைக் குரலின்குறிப்பை, முழுது உணர்வினன் ஒருவன்கூறினன்—நிமித்தங்களெல்லாவற்றிலும் அறிவுடைய வொருவன்சொன்னன்.

ந - ரை. அங்ஙனம் ஈண்டினவர்கள், இத்தன்மைத் தாகியநாளிலே நிரைவந்துசேரும், அதனை நாம்கொள்ளுதுமெனக்கூறிய அப்பொழுதே, புட்கூறிய குரலின்குறிப்பை, நிமித்தமெல்லாவற்றிலும் அறிவுடையானொருவன் கூறினன் என்க.

இன்னநாள் இளவேனிற்குரியநாள். இன்னபண்பின்மேல்நின்ற சுட்டடியாகப்பிறந்தகுறிப்பு வினைப்பெயரொச்சம் இ சுட்டிடைச்சொற்பகுதி, னகரமெய்விரித்தல் விகாரம், னகரமெய்சந்தி, அ எச்சவிகுதி. கோடும்தன்மைப்பன்மை யெதிர்காலவினைமுற்று கொள்பகுதி. முதல் நீளல்விகாரம், தும் தன்மைப்பன்மைவிகுதி, எகரக்கேடும் தகரத்திரிபுஞ்சந்தி. (எ)

(8) அடைதுநாநிரையடைந்தகாலையே
குடையும்பிச்சமுமொழியக்கோன்படை
யுடையும்பின்னரேயொருவன்றேரினல்
உடைதுஞ்சுடுவிற்றேனுடைந்தவொப்பவே.

இ - ள். நாம்நிரை அடைதும்—நாம்பசுவையடிப்போம், அடைந்தகாலை—அடித்தகாலத்தில், கோன்படை—அரசன்சேனை (வந்து போர்செய்து) குடைஉம் பிச்சம்உம் ஒழிய—குடையுமயிலிறகாற்கட்டிய குஞ்சமும் அவ்விடத்தேகிடக்க, உடையும்—பின்னிட்டுத்தோற்கும், பின்னர்—தோற்றபின்பு, சுடுஇல்—சுடுதலால், தேன்உடைந்தது ஒப்ப — வண்டுகள் கெட்டாற்போல, ஒருவன்தேர்இன்ஆல் உடைதும்—ஒருவன்தேரால்கெடுவோம்.

ந - ரை. நாம்நிரையையடிப்போம், அடித்தபொழுதே அரசன்படைவந்துபொருதுகுடையும் பிச்சமும் அவ்விடத்தேகிடக்கத்தானேகெடும், அது கெட்டபின்பு சுடுதலால் தேனினம் கெட்டாற்போல ஒருவன்தேராற் கெடுவோம்.

சுடு என்பது "கெடுவாக" என்பதுபோல முதனிலையே தொழிற்பெயராய் ஏதுப்பொருளில்வந்த ஐந்தனுருபு ஏற்றது என்பார்; வினைமேல்நின்ற வினைப்பெயரன்றிவினைமாத்திரை உணர்த்திநின்று உருபேற்றது என்றூர், அடைதும், உடைதும் தன்மைப்பன்மை யெதிர்காலவினைமுற்றுகள் அடை, உடைபகுதிகள், தும்விகுதி. பின்னர் காலப்பொருள்மேல்நின்ற இடைச்சொல்பின்பகுதி, னகரமெய்சந்தி, அர்விகுதி.

(9) என்றுகூறலுமேழைவேட்டுவீர்
ஒன்றுதேரினுமொருவன்கூற்றமே
என்றுகூறினுமொருவனென்செயும்
இன்றுகோடுநாமெழுகென்றேகினர்.

இ - ள். என்று கூறலும்—என்று நிமித்திகன்கூற, ஏழைவேட்டுவீர்—

அறியாமையையுடையவேடரே, ஒருவன்கூற்றமென என்றுகூறினும்—ஒருவன் இயமனேயென்று உலகம்சொன்னாலும், ஒருவன் ஒன்றுநேரின்ஆல் என்செய்யும்—அவ்வொருவன் ஒருநேரினால் நம்மையென்னசெய்வான், நாம் இன்றுகோடும்—நாம்பசுவைஇன்றுகொள்வோம், எழுக என்று ஏகினார்—எழுந்திருக்கக்கடவீரென்று பசுநிற்குமிடத்திற்குச் சென்றார்கள்.

ந - ணை. அவன்கூறின வளவிலே அவனைவேட்டுவீரென விகழ்ந்து, ஒருவன்கூற்றமேயென்று உலகங்கூறினும், அவ்வொருவன் ஒருநேரால் ஒன்றுஞ் செய்யமாட்டானாகலின் இன்றுகொள்ளக்கடவேம், எழுந்திருப்பீராக வென்றுகூறி நிரைநிற்கிற இடநோக்கிப்போனார் என்க.

கூறலும் நிகழ்காலவினையெச்சம் கூறுபகுதி, அல்சாரியை, உகரக்கேடு சந்தி, உம்விகுதி. பின்நின்ற ஒருவன் என்னும் பெயர்ச்சொல்முன் அகரச் சுட்டுத் தொகுத்தல். வேடுவர் வேட்டுவீர் விளியுருபேற்றுநின்றது "ரவ் வீற்றுயர் பெயர்க்கு" என்னுஞ் சூ—இல் "அ இ ஈ யாதல்" என்றவிதியால். எழுக என்னும் வியங்கோள் வினைமுற்றின் ஈறுகெட்டது. ஒன்று நேரினோ டொருவன் எனவும் பாடம். (௯)

(10) வண்டுமூசருநறவமார்ந்தவர்
தொண்டகப்பறைதுடியொடார்த்தெழ
விண்டுதெய்வதம்வணங்கிவெல்கென
மண்டினார்நிரைமணந்தகாலையே.

இ - ள். வண்டுமூசு அரு நறவம் ஆர்ந்தவர்—வண்டுகள்மொய்த்தல் நீங்காத மதுவினைப்பருகி, தொண்டகப்பறை—ஆகோட்பறை, துடிஒடு ஆர்த்து எழ—குறிஞ்சிநிலப்பறையோடொலித்தெழாநிற்க, தெய்வதம்வணங்கி—முருகக்கடவுளைவணங்கி, விண்டு (கட்டியங்காரனோடு) பகைத்து, நிரைமணந்த காலை—பசுக்கள்வந்து கூடியகாலத்தில், வெல்க எனமண்டினார்—வெல்லக் கடவீரென்று நெருங்கி வேடர்கள் சென்றார்கள்.

ந - ணை. அங்ஙனமேகினவர் நறவம்ஆர்ந்து பறைதுடி யோடார்த்தெழ, முருகனைவணங்கி விண்டுநிரைவந்துகூடினவளவிலேவெல்கவெனக்கூறி, மிக்குச்சென்றார் என்க.

அருஎன ஈறுகெட்டுநின்றதை விகாரம் என்றார். ஆர்ந்தவர் முற்றெச்சம். மூசுமுதனிலைத்தொழிற்பெயர். தொண்டகம் ஆகோட்பறை. தொண்டகப்பறை தொண்டகமாகிய பறையெனவிரிதலால் தொண்டகமாகிய சிறப்புப் பெயர் பறையென்னும் பொதுப்பெயரை விசேடித்துவந்த இருபெயரொட்டுப் பண்புத்தொகை. விண்டு இறந்தகால வினையெச்சம் விள்பகுதி, ளகரம்ணகரமாகத்திரிதல் சந்தி, டகரமெய் இடைநிலை, உ எச்சவிகுதி. மணந்த இறந்தகாலப்பெயரெச்சம் மணபகுதி. வெல்கவியங்கோள் வினைமுற்றினீறு தொக்கது. தெய்வதம் வடசொல். (௧௦)

(11) பூத்தகோங்குபோற்பொன்சுமந்துளார்
ஆய்ச்சியர்நலக்காசெறூணனான்

கோத்தநித்திலக்கோதைமார்பினான்
வாய்த்தவந்நிரைவள்ளுவன்சொன்னான்.

இ - ள். பூத்தகோங்குபோல் பொன்சுமந்துள்ளார் — மலர்ந்தகோங்கமலரைப்போல தேமல்பூப்பப்பெற்ற, ஆய்ச்சியர் நலத்துக்கு—இடைப்பெண்கள்தருமின்பத்துக்கு. ஆசெல்தூண் அன்னான்—ஆதீண்டு குற்றியையொத்தவனாகிய, கோத்தநித்திலக்கோதைமார்பினான்—கோவைசெய்தமுத்துமாலையையணிந்தமார்பையுடையவனாகிய நந்தகோனுடைய, அந்நிரைவாய்த்த வள்ளுவன்—அப்பசுக்கூட்டத்தில் தப்பாத ஒருநிமித்திகன்.

ந - ரை. ஆய்ச்சியர் நலஞ்சேர்தற்கு ஆதீண்டுகுற்றியையொப்பானாகிய நந்தகோனுடைய அந்நிரையிலே வாய்த்த நிமித்திகன்.

இதுகுளகமாய் அடியில்வரும் பாட்டோடு, சொன்னான் என்பதுமுடிய நிற்றலால்பொருள்கூறாதுவிட்டனம். பூத்த இறந்தகாலப்பெயரெச்சம்பூபகுதி. கோங்குமலர்மேல்நிற்றலால் முதலாகுபெயர். பொன்தேமல்மேல்நிற்றலால் உவமையாகுபெயர். சுமந்துளார் முற்றெச்சம். நலக்கு அத்துச்சாரியை தொகுத்தல். சுமந்துளார் தெரிநிலை வினைமுற்றெச்சம். மார்பினான் குறிப்புவினைமுற்றெச்சம். கோத்த இறந்தகாலப் பெயரெச்சம் கோபகுதி, இது நித்திலம் என்னுஞ் செயப்படுபொருள்கொண்டது. ஆதீண்டுகுற்றி பசுக்களின்தினவுபோக்குதற்கு மந்தையில் நாட்டியகட்டை. ஆய்த்தியர் எனவும் பாடம். (கக)

(12) பிள்ளையுள்புகுந்தழித்ததாதலால்
எள்ளன்மின்னிரையின்றுநீரென
வெள்ளிவள்ளியின்விளங்குதோணலார்
முள்குமாயரும்மொய்ம்பொடேகினார்.

இ - ள். உள்பிள்ளைபுகுந்து—பசுக்கூட்டத்தில் கரிக்குருவிபுகுந்து, அழித்தது ஆதலால்—அழித்ததாகையால், நீர்இன்று — நீங்களிப்பொழுது, நிரை எள்ளன்மின் என்னசொன்னான்...பசுவைக்காத்தலைக் கைக்கொள்ளுங்களென்றுகூறினான், வெள்ளிவள்ளியின்—வெள்ளியாற்செய்தவளைகளால், விளங்குதோள் நல்லார்—விளங்காநின்ற கைகளையுடைய இடைப்பெண்களை, முள்கும் ஆயர்உம்—நீங்காத புதுமணவாளப் பிள்ளைகளும், மொய்ம்புஒடு ஏகினார் (அதுகேட்டு) வலிமையோடு காத்தற்குச்சென்றார்கள்.

ந - ரை. நிரைக்குள்ளேபுகுந்து காரியழித்ததாகலால் இன்று நீர்நிரையைக்காவலிகழாதொழிமினெனச்சொன்னான், அதுகேட்டுப் புதுமணவாளப்பிள்ளைகளுமொய்ம்புடனே காத்தற்கு ஏகினார் என்க.

சொன்னான் என்பதை என்ன என்பதனோடுகூட்டிப் பொருள்கொள்க. முள்கல் பிரியாதிருத்தல் "முசுப்போல முள்காந்திருப்பர்" என்பதனால் உணர்க. எள்ளன்மின் எதிர்மறை முன்னிலைப்பன்மையே வல்வினைமுற்று எள்பகுதி, ளகரத்தோற்றம்சந்தி, அல் எதிர்மறைவிகுதி, அனைத்தும் ஒருபகுதி, மின்விகுதி. உடன்பாட்டில் எண்மின் எனவரும். முள்கும் பெயரெச்சம் முள்குபகுதி. இது இறந்தகாலத்தின்மேல்நின்றது. (கஉ)

(13) காயமீனெனக்கலந்துகானிரை
மேயவெந்தொழில்வேடரார்த்துடன்
பாயுமாரிபோற்பகழிசிந்தினார்
ஆயர்மத்தெறிதயிரினாயினார்.

இ - ள். காயம் மீன்என்ன—ஆகாயமுமீனு மென்னும்படி, கான்கலந்து நிரைமேய—காட்டிற்கலந்து பசுமேய, வெந்தொழில்வேடர் ஆர்த்து—கொடுந்தொழிலையுடைய வேடர்கள்கோஷித்து, பாயும்மாரிபோல் உடன்பகழிசிந்தினார்—பரந்தமழைபோல அப்பொழுது அம்புகளைச்சிந்த, ஆயர்—இடையர்கள், மத்துஎறிதயிரின் ஆயினார்—மத்தாற்கடைந்த தயிரைப்போல (அப்போருக்கு) ஆற்றாதுசிதறினார்.

ந - ரை. ஆகாயமுமீனுமென்னும்படி காட்டிலேகலந்துநிரைமேய்கிற அளவிலே, வேடரார்த்துப்பரந்தமழையைப்போலப்பகழியையுடனேசிந்தினாராக, ஆயர்மத்தாற்கடைந்த தயிர்போலச் சிதறினாரென்க.

சிந்தினார்முற்றெச்சம். ஆகாயத்திலேமீன்கலந்திருத்தல்போலக்காட்டில் பசுக்கலந்திருத்தலால் இதுதொழில்பற்றி வந்தவுவமையணி.

(14) குழலுநவியமுமொழியக்கோவலர்
கழலக்காடுபோய்க்கன்றுதாம்பழித்
துழலைபாய்ந்துலாமுன்றிற்பள்ளியுண்
மழலைத்தீஞ்சொலார்மறுகலாய்விட்டார்.

இ - ள். குழல்உம்நவியம்உம் ஒழிய—வேய்ங்குழலுங்கோடரியும் அங்கேகிடக்க, கோவலர்காடு கழலபோய் — (சிதறிய) இடையர்காட்டினின்று நீங்கப்போய், கன்றுதாம்பு அழித்து உழலைபாய்ந்து உலாம் — கன்றுகள்கட்டியதாம்பினையழித்து உழலைபோலப் பாய்ந்துலாவும், முன்றில்பள்ளிஉள்—முன்றிலையுடைய இடைச்சேரியில், தீம்மழலை சொல்லார்மறுக—இனியமழலைச்சொல்லையுடைய ஆய்ச்சியர்சுழலும்படி.

ந - ரை. அங்ஙனஞ்சிதறியகோவலர் குழலுங்கோடாலியுமங்கேகிடக்கக் காட்டைக்கழலப்போய், இடைச்சேரியில் மகளிர்நின்று சுழலும்படி.

இதுகுளகம் ஆதலால் அடியில்வரும் பாட்டோடுபொருந்தலால் வாய்விட்டார் என்பதற்குப்பொருள் கூறாதுவிட்டனம். உழலைகுதித்தாடும் ஒருவிளையாட்டு. கோவலர் பசுக்கள்காத்தலில்வல்லோர். இல்முன்முன்றில் இலக்கணப்போலி. கழலநிகழ்காலவினையெச்சம் கழல்பகுதி. உலாம் ஈற்றயலுயிர்மெய்கெட்டு நின்றபெயரெச்சம் முன்றில்என்னும் நிலப்பொருள்கொண்டது. மறுகஎதிர்காலவினையெச்சம் மறுகுபகுதி. கச.

(15) மத்தம்புல்லியகயிற்றின்மற்றவர்
அத்தலைவிடினித்தலைவிடார்
உய்த்தனரெனவுடைதயிர்ப்புளி
மொய்த்ததோணலார்முழுதும்விண்டனர்

இ - ள். அவர்-அவ்வேடர்கள், மத்தம்புல்லியகயிற்றின்—பசுவின்றலையிற் பொருந்தியகயிற்றி னெகிழ்ச்சிபோல [illegible]

கிழவிட்டாராயினும், இதலைவிடார்—இவ்விடத்துப்பசுக்களை நெகிழவிடாது, உய்த்தனர் எனவாய்விட்டார் — கொண்டுபோனார்களென்று வாய்திறந்து சொன்னார்கள், உடைதயிர்புள்ளி மொய்த்ததோள் நல்லார்முழுதும் ஈண்டினார். கடையும்போதுடைந்து சிதறியதயிரின் புள்ளிகள் நெருங்கிய தோள்களையுடைய ஆய்ச்சியரெல்லாம் நெருங்கினார்கள்.

ந - ரை. அவ்வேடர்க யிறுபோல அத்தலையை நெகிழவிட்டாராயின், இத்தலையைநெகிழவிடார் ஆதலால், இனிஅந்நிரையைக்கொண்டேபோயினாரெனவாய்விட்டார், அதுகேட்டுத் தோள்முழுதுந் தயிர்ப்புள்ளி செறிந்தநல்லார் திரண்டார் என்க.

மத்தகம் இடைக்குறை. இன்உருபு ஒப்புப்பொருட்டு. விடார்எதிர்மறைமுற்றெச்சம். உய்ப்பரென்பது உய்த்தனர் என இறந்தகாலம் படக்கூறியது தெளிவுபற்றி வந்தகாலவழுவமைதி "வினைவினு மிகவினும்" என்றசூ-ஆல். கயிற்றின் விடின்என்றது தொழில்பற்றிவந்த வுவமையணியாதலால் நெகிழ்ச்சியெனக்கொண்டாம். அத்தலையென்றது போர்செய்யுமிடத்துஎனவும், இத்தலைஎன்றது வென்றிகொண்ட விடத்துஎனவுங்கொள்க.

வேறு

(16) வலைப்படுமான்னைமஞ்ஞையெனத்தம்
முலைப்படுமுத்தொடுமொய்குழல்வேய்ந்த
தலைப்படுதண்மலர்மாலைபிணங்க
அலைத்தவயிற்றினராயழுதிட்டார்.

இ - ள். தம்முலைபடு முத்தொடு — (ஆய்ச்சியர்) தமதுமுலையிற்பொருந்திய முத்தமாலையோடு, மொய்குழல்வேய்ந்த தலைப்படுதண் மலர்மாலைபிணங்க —நெருங்கிய கூந்தலிற்சூடிய தலைமைவாய்ந்த குளிர்ந்தமலராற்றொடுத்தமாலை பிணங்கும்படி அக்கூந்தல்சோர, அலைத்தவயிற்றினர் ஆய்—வயிற்றினையதுக்கி, வலைப்படுமான் என்னமஞ்ஞைஎன்ன—வலையிலகப்பட்ட மானைப்போலவும மயிலைப்போலவும், அழுதிட்டார்—அழுதார்கள்.

ந - ரை. அவர்முத்தோடே, குழலிலேவேய்ந்த தலையானமாலை பிணங்கும்படி மயிர்குலைய, அலைத்தவயிற்றினராய், வலைப்படுமானென மயிலென வருந்தினார்என்க.

வேய்ந்த இறந்தகாலப் பெயரெச்சம் வேய்பகுதி. இதுமாலையென்னுஞ் செயப்படுபொருள்கொண்டது "செய்தவேள்வியர்" என்றாற்போல அலைத்த வயிற்றினர் எனவருந்தொடரிலுள்ள அலைத்தஎன்னும்பதத்தோடு விகுதியைக்கூட்டிப் பொருத்தமில் புணர்ச்சியாகக்கொள்க. வலைப்படுமானென மஞ்ஞையெனநின்றது பலபொருளுவமையணி.

(17) எம்மனைமாரினியெங்ஙனம்வாழ்குவிர்
நும்மனைமார்களைநோவவதுக்கி
வெம்முனைவேட்டுவருய்த்தனரோவெனத்
தம்மனைக்கன்றொடுதாம்புலம்புற்றார்.

இ - ள். தாம்—ஆய்ச்சியர்கள், வெம்முனைவேட்டுவர்—கொடியபோ

ர்த்தொழிலையுடையவேடர்கள், நும்அன்னைமார்களை—உங்களுடைய தாய்மார்களை, நோவஅதுக்கி—வருந்தும்படியடித்து, உய்த்தனர்—கொண்டுபோனார்கள், எம்அன்னைமார்இனி எங்ஙனம்வாழ்குவிர் என்ன-எமதுதாய்மாரே எவ்வாறுயிர் வாழ்வீரோவென்று, தம்மனைகன்று ஓடுபுலம்புற்றார்— தமதுவீட்டிலுள்ள கன்றினோடு புலம்பினார்கள்.

ந - ரை. அவர், பின்பும் வேட்டுவர் நும்முடையதாய்மாரை நோம்படியடித்துக்கொண்டு போயினார், இனிஎம்முடையதாய்மார் எங்ஙனமுயிர்வாழ்வீரோ வெனக்கூப்பிட்டுக் கன்றோடுபுலம்புற்றார் என்க.

அன்னைமார் மார்பன்மைப்பொருளில்வந்த பலர்பால்விகுதி. நோவ எதிர்காலவினையெச்சம்நோபகுதி, முதல்நீளல்விகாரம், வகரமெய்சந்தி, அவிகுதி. அதுக்கி இறந்தகாலவினையெச்சம் அதுக்குபகுதி. உய்த்தனர் உயர்திணைப்பலர்பாற்படர்க்கை யிறந்தகாலப் பிறவினைவினைமுற்று உய்பகுதி, பிறவினைப்படுத்தலில்வந்த தகரமெய்சந்தி, தகரமெய்இடைநிலை, அன்சாரியை, அர்விகுதி. தன்வினையில் உய்ந்தனர் எனவரும். பகுதிசெயப்படுபொருள் குன்றாமைக்கும் குன்றிவருதலுக்கும்பொது. அன்னைமார் என அஃறிணையை உயர்திணையாகக்கூறுதல் திணைவழுவமைதி "உவப்பினு முயர்வினும்" என்றகு—ஆல்.

(18) பாறைபடுதயிர்பாலொடுநெய்பொரு
தாறுபடப்பள்ளியாகுலமாக
மாறுபடமலைந்தாய்படைநெக்கது
சேறுபடுமலர்சிந்தவிரைந்தே.

இ - ள். பாறை படுதயிர்பால் — பாறைபோலத் தோய்ந்ததயிரும் பாலும், நெய்ஒடுபொருது ஆறுபட-நெய்யுடனேகலந்து ஆறாகும்படி, பள்ளிஆகுலம்ஆக—படுக்கையிலே (ஆய்ச்சியர்க்கு) வருத்தமுண்டாக, ஆய்படை மாறுபடமலைந்து —ஆயரதுசேனை மாறுபாடுண்டாகப் போர்செய்து, நெக்கது—கெட்டது, சேறுபடுமலர் சிந்தவிரைந்து — (கெட்டபின்பு) தேனொழுகுமுல்லைமலர்மாலை சிந்தும்படிவிரைந்துசென்று.

ந - ரை. கற்போற்றோய்ந்ததயிரும்பாலும் நெய்யுடனேகலந்து ஆறுண்டாம்படிபள்ளியிலேவருத்தநிகழாநிற்க, கெடாதுநின்றஆய்ப்படை மாறுபாடுண்டாகப் பொருதுகெட்டது, கெட்டபின்பு அவர்மலர்சிந்தும்படி விரைந்து.

பொருது, மலைந்து, விரைந்து இறந்தகாலவினையெச்சங்கள்பொரு, மலை விரைபகுதிகள். மயக்கப்பொருளில்வந்த ஒடுஉருபைப்பிரித்து நெய்யொடு கூட்டுக. ஆய், வேடுஎன்றாற்போலச் சாதிமேல்நின்றது. இதுபண்பாகுபெயர். நெக்கது இறந்தகால ஒன்றன்பாற்படர்க்கை வினைமுற்று நெகுபகுதி, முதனிலையெழுத்தாய்த் தோன்றிய ககரமெய் இடைநிலை. உகரக்கேடுசந்தி, அசாரியை, துவிகுதி, ஆய்படை ஒன்றனீட்டத்தற்கிழமைப் பொருளில்வந்த ஆறாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். ஆய்சொல்லால் அஃறிணையாயினும்பொருளால் உயர்திணைப் பெயராதலால் வருமொழி வல்லெழுத்தியல்பாயிற்று.

(19) புறவணிபூவிரிபுன்புலம்போகி
நறவணிதாமரைநாடகநீந்திச்
சுறவணிசூழ்கிடங்காரெயின்மூதூர்
இறையணிகேட்கவுய்த்திட்டனர்பூசல்.

இ - ள். புறவணி பூவிரி புன்புலம்போகி—முல்லைநிலமாகிய மலர்விரிந்தபுன் புலத்தைக்கடந்து, நறவு அணிதாமரைநாடு அகம்நீந்தி—தேன்மிக்கதாமரைமலர்நிறைந்த நாட்டினிடத்தைக்கடந்து, சுறவுஅணிகிடங்கு— சுறாமீன் கணிறைந்த அகழ்சூழ்ந்த, எயில்ஆர் மூதூர்— மதிலுடுத்ததொன்றுதொட்டுள்ளஊரில், இறைஅணிகேட்க — அரசனுக்குச் சமீபமாகக் கேட்கும்படி, பூசல் (வேடர்கள் பசுக்களையடித்த) ஆரவாரத்தை, உய்த்து இட்டனர்—கொண்டுபோய்ப்போட்டனர்.

ந - ரை. புன்புலத்தைப்போய் நாடகத்தைநீந்தி மூதூரில் இறையணித்தாகக்கேட்கும்படி நிரையையடித்த பூசலைக்கொண்டுபோய்ப் போகட்டார் என்க.

இந்தப்பழியை யரசன் தலையில்போடுதலால் உய்த்தனர் என்றார். உய்த்திட்டனர் என்றதைப்போட்டனர் எனப்பொருள்கொண்டு ஒருசொல்லாகக் கொள்ளினுமமையும். இச்செய்யுளால் வாயில்காப்போனுக்குச்சொன்னமை கூறினார். புறவணிமுல்லைநிலம், போகி, நீந்தி, உய்த்து என்னும்வினையெச்சங்கள் ஒன்றனையொன்றுகொண்டு இட்டனர் என்னும் வினைமுற்றின் முதனிலையைக்கொண்டன. உய்பகுதி. நாடகம் வேற்றுமையில் டகரவொற்றிரட்டாமை "நெடிலோடுயிர்த்தொடர்" என்னுஞ் சூ—இல் "மிக" என்றமையால்.

வேறு.

(20) கொடுமரவெயினரீண்டிக்கோட்டிமிலேறுசூழ்ந்த
படுமணிநிரையைவாரிப்பைந்துகிலருவிநெற்றி
நெடுமலையத்தஞ்சென்றொன்றுநெய்பொதிந்தபித்தை
வடிமலராயர்பூசல்வளநகர்பரப்பினாரே.

இ - ள். நெய்பொதிந்த பித்தைவடிமலர்ஆயர்—நெய்பூசியமயிரில் தேனொழுகுமுல்லை மலரைச்சூடிய இடையர், கொடுமரம் எயினர் ஈண்டி—வில்லையேந்திய வேடர்கள்நெருங்கி, கோள்திமில் ஏறுசூழ்ந்த — கொலையமைந்த திமில்வாய்ந்த எருதுகள்சூழ்ந்த, மணிபடு நிரையைவாரி—மணிகட்டிய பசுக்களைக்கொள்ளைகொண்டு, பைந்துகில் அருவி நெற்றிநெடுமலை அத்தம் — பசிய ஆடைபோல அருவிவீழும் நெற்றியையுடைய நீண்ட மலையின்கொடுவழியே, சென்றார் என்று—போயினாரென்று, பூசல் வளம் நகர்பரப்பினார்—ஆரவாரத்தைவளமிகுந்த நகரிற்பரப்பினார்கள்.

க - ரை. மறவர்திரண்டு நிரையைச்சேரக் கைக்கொண்டுமலையில் அருஞ்சுரத்தைப்போயினாரென்று பூசலைப்பரப்பினார் என்க.

"பல்லாக்கொண்டா ரொல்லார் என்னும் — பூசல்கேட்டுக் கையதுமாற்றி "நிரைகோட்கேட்டுச்செய்தொழிலொழிய" இவை இரண்டும் பசுமீட்டற்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS

குரியதுறை ஆதலால், இந்த இடையர்களும் கேட்டோரெல்லாஞ்சென்று மீட்பாரென நினைத்து நகரிலுள்ளோர்க்கு உணர்த்தினர் என்பார் வளநகர் பரப்பினர் என்றார். பல்லாக்கொண்டார், மாற்றி. ஒல்லார்பல் ஆகொண்டார்—பகைவர்கள் பலபசுக்களையுங் கைகொண்டார்கள், என்னும் பூசல்கேட்டுகை அதுமாற்றி—என்று கூறும் ஆரவாரத்தைக்கேட்டு அவர்சிறுமையைப்போக்கி. நிரைகோள், ஒழிய. நிரைகோள்கேட்டு — பகைவர்கள் பசுக்களைக் கவர்ந்ததைக் கேள்வியுற்று, செய்தொழில் ஒழிய—அவர்கள்செய்த செய்கையொழிய. என்பதுபொருள். இத்துறைகள் பன்னிருபடலத்திலிருக்கலாம்—பொதிந்த இறந்தகாலப்பெயரெச்சம் பொதி பகுதி. (உ0)

வேறு.

(21) காசின்மாமணிச்சாமரைகன்னியர்
வீசமாமகரக்குழைவில்விட
வாசவான்கழுநீர்பிடித்தாங்கரி
ஆசனத்திருந்தானடன்மொய்ம்பினான்.

இ - ள். அடல்மொய்ம்பினான் — வலியதோளையுடைய கட்டியங்காரன், காசுஇல்மாமணிசாமரை—குற்றமில்லாத முழுமணியிழைத்த சாமரையை, கன்னியர்வீச—கன்னிப்பெண்கள் வீசுந்தோறும், மாமகரம்குழைவில்இட—பெருமையமைந்தமகரகுண்டலம் ஒளிவீச, வாசம்வான்கழுநீர்பிடித்து—வாசமமைந்த பெரியகழுநீர்மலரையேந்தி, ஆங்கு—சச்சந்தனிருந்தமண்டபத்தே. அரி ஆசனத்து இருந்தான் (அவனிருந்த) சிங்காதனத்திலிருந்தான்.

ந - ரை. மொய்ம்பினான், கன்னியர் வீசுந்தோறுங் குழைவில்லிடக்கழுநீரைப்பிடித்து, சச்சந்தனிருந்த மண்டபத்தே, அவனிருந்தசிங்காதனத்தேயிருந்தான் என்க.

இகழ்ச்சிக்குறிப்புத்தோன்ற அடல்மொய்ம்பினானென அரசனுக்குக்கூறுஞ்சிறப்பைக் கட்டியங்காரன்மேலேற்றிக்கூறினார். (உக)

(22) கொண்டவாளொடுங்கோலொடுங்கூப்புபு
சண்டமன்னனைத்தாடொழுதாயிடை
உண்டோர்பூசலென்றற்குரையாயெனக்
கொண்டனர்நிரைபோற்றெனக்கூறினான்.

இ - ள். கொண்டவாள்ஒடும் கோல்ஒடும் — எடுத்தவாளோடும் பிரம்போடும், கூப்புபு (கையை) குவித்து, சண்டமன்னன்ஐ தாள்தொழுது—கொடிய அரசனைப்பாதம்வணங்கி, ஆயிடைஓர் பூசல்உண்டு என்றற்கு—அக்காட்டில்ஒரு ஆரவாரம் உண்டென்றுசொன்ன ஆசாரவாசிக்கு, உரையாய்என்ன (அது என்ன) சொல்லாயென்று அரசன்வினவ, போற்று (நான் சொல்வதை) திருஉளம்பற்று, நிரைகொண்டனர் என்னகூறினான் — பசுக்களை இவரடித்துக்கொண்டாரென்று வாயில்காப்போன் சொன்னான்.

ந - ரை. எடுத்தவாளோடும் பிரம்போடுங்கையைக்குவித்துக் கொடிய அரசனைத்தாளைத்தொழுது, அக்காட்டிலே யொருபூசலுண்டென்றுகூறிய ஆ

சாரவாசிக்கு அதுயாதுகூறுயென்றரசன்கூற, அவனும்யான்கூறுகின்றதனைத்திருவுளம்பற்று நிரையையடித்துக்கொண்டாரென்று கூறினான் என்க.

கூப்புபு செய்பு என்னும் வாய்பாட் டிறந்தகால வினையெச்சம் கூப்புபகுதி, புவிகுதி. ஆயிடைசுட்டு நீண்டு இடையில்யகரமெய்தோன்றல் "எகரவினாமுச்சுட்டின் முன்னர்" என்ற சூ—இல் " தூக்கிற்சுட்டு நீளின்யகரமுந்தோன்றுதல்" என்றவிதியால். (உஉ)

(23) செங்கட்புன்மயிர்த்தோறிரைசெம்முக
வெங்கணோக்கிற்குப்பாயமிலேச்சனைச்
செங்கட்டீவிழித்தான்றெழித்தான்கையுள்
அங்கட்போதுபிசைந்தடுகூற்றனான்.

இ - ள். அடுகூற்று அன்னான்—கொல்லும் இயமனையொத்தகட்டியங்காரன், கைஉள் அம்கள்போது பிசைந்து—கையிலேந்திய அழகிய கள்நிறைந்தமலரைப் பிசைந்து, செம்கண்—செவந்தகண்ணையும், புல்மயிர்தோல்திரைசெம்முகம்—புல்லியமயிர்நிறைந்த தோல்திரைந்தசெவந்தமுகத்தையும், வெம்கண்நோக்கின் குப்பாயம் மிலேச்சனை—கொடியகட் பார்வையினையுஞ் சட்டையுமுடைய மிலேச்சனை, செம்கண் தீவிழியா தெழித்தான்—செவந்தகண்ணால் தீப்புறப்படவிழித்துக் கோபித்தான்,

ந-ரை. அடுகூற்றனான், அதைக்கேட்டுப்பூவைப்பிசைந்துகண்முதலியவற்றையுடையமிலேச்சனைக்கண்ணால்தீப்புறப்படவிழித்துக்கோபித்தான் என்க.

விழியாசெய்யா என்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம். தெழித்தான் இறந்தகால வினைமுற்று தெழிபகுதி. இவன் அரசனல்லாமையால் எளியவர்மேல் கோபம்கொண்டனன் என்பார் அங்கட்போது பிசைந்து தெழித்தான் என்றார். வேறு. (உங)

(24) கூற்றின்னிடிக்குங்கொலைவேலவன்கோவலர்வாய்
மாற்றம்முணர்ந்துமறங்கூர்கடற்றானைநோக்கிக்
காற்றின்விரைந்துதொறுமீட்கெனக்காவன்மன்னன்
ஏற்றையரிமானிடிபோலவியம்பினானே.

இ - ள். கூற்றின் இடிக்கும் கொலைவேலவன் காவல் மன்னன்—இயமனைப்போல வொலிக்குங் கொலைத்தொழிலையுடைய வேலையேந்தினவனாகிய காவற்றொழில்பூண்ட கட்டியங்காரன், கோவலர் வாய்மாற்றம் உணர்ந்து—இடையர்வாய்மொழியையறிந்து, மறம் கூர்கடல்தானைநோக்கி — கொலைத்தொழிலமைந்த கடல்போன்ற சேனையைநோக்கி, காற்றின் விரைந்துதொறு மீட்க என்ன—காற்றைப்போலவிரைந்து சென்றுபசுக்களை மீட்கக்கடவாயென்று, அரிமான் ஏற்றை இடி போல இயம்பினான்—சிம்மேற்றையு மிடியையும்போலக் கூறினான்.

ந - ரை. கூற்றுப்போற் கோபியாநின்ற வேலவனாகிய காவல்மன்னன், அக்கோபஞ்சிறிது தணிந்து கோவலரையழைத்து அவர்கூறிய கூற்றின்பொருளுணர்ந்து, தனதுதானையைப்பார்த்துக் காற்றினும்விரைந்து சென்றுநிரையை மீட்பீராகவென்று அரிமானேறு மிடியும்போல இயம்பினானென்க.

இன் ஒப்புப்பொருளில்வந்தஐந்தனுருபு. வேலவன் குறிப்புவினைமுற்று ப்பெயரொச்சமாய்க் காவல்மன்னன் என்னும்பெயர்கொண்டது. "எறும்எற் றையும்" என்பது தொல்காப்பியச் சூத்திரம் ஆதலால் எற்றை யரிமான் என் றார்.

வேறு.

(25) கார்விளைமேகமன்னகவுளழிகடாத்தவேழம்
போர்விளையிவுளித்திண்டேர்புனைமயிர்ப்புரவிகாலாள்
வார்விளைமுரசம்விம்மவானுலாப்போந்ததேபோல்
நீர்விளைசுரிசங்கார்ப்பநிலனெளிபரந்தவன்றே.

இ - ள். கார்விளைமேகம்அன்ன—கார்காலத்துண்டானமேகத்தையொ த்த, கவுள்அழிகடாத்த வேழம்—கவுளில்மறைந்த மதத்தையுடையயானையும், போர்விளை இவுளிதிண்தேர்—போர்விளைதற்குக் காரணமான குதிரைபூட்டிய திண்ணியதேரும், புனைமயிர் புரவிகாலாள்—அலங்கரித்த புறமயிரையுடைய குதிரையும், காலாளும், வார்விளைமுரசம் விம்ம — வாரால்கட்டிய முரசொ லிக்கவும், நீர்விளைசுரிசங்கு ஆர்ப்ப — கடலிற்றோன்றிய முகஞ்சுரிந்த சங்க மொலிக்கவும், வான்உலாபோந்தது ஏபோல் — மேகம் உலாவந்ததுபோல, நிலன்நெளிபரந்த—நிலநெளியப்பரந்தன.

ந - ரை. வேழமுந்தேரும் புரவியுங் காலாளு முரசம் விம்மச்சங்கமார் பப வானுலாப்போந்ததேபோல நிலநெளியப்பரந்தனவ்க.

மேகம்பவனி வந்ததுபோலச் சங்கமொலிக்க எனப்பொருள்கொள்ளு தலும் ஒன்று. கடாத்த பொருளடியாகப்பிறந்த உடைமைப் பொருளில்வந்த குறிப்புவினைப்பெயரொச்சம் கடாம்பகுதி, அத்துசாரியை, ஈற்றெழுத்தும்சாரி யையினகரமும் ஈற்றுகரமுங் கெடுதல்சந்தி, அ எச்சவிகுதி. புரவிகாலாள் உம்மைத்தொகையாதலால் வருமொழிமுதல் வல்லெழுத்து இயல்பாயிற்று. யானையுங்கேடகமு முழக்கமுமிருத்தலால் வானுலாப்போந்ததேபோல் என் றார். இதுபண்புந்தொழிலும் பற்றிவந்தவுவமையணி.

(26) காலகம்புடைப்பமுந்நீர்க்கடல்கிளர்ந்தெழுந்ததொப்ப
வேலகமிடைந்ததானைவெஞ்சினவெயினர்தாக்க
வால்வளையலறவாய்விட்டிரலையுந்துடியுமார்ப்பப்
பால்வளைந்திரவுசெற்றுப்பகலொடுமலைந்தொத்தார்

இ - ள். கால்அகம்புடைப்ப—காற்று உள்ளேயடித்தலாலே, முந்நீர்க டல் கிளர்ந்து எழுந்தது ஒப்ப— மூன்றுதன்மையையுடையகடல் பொங்கிமே லெழுந்ததுபோல, வேல்அகம்மிடைந்ததானை—வேல்தம்முள்நெருங்கிய அர சர்சேனையும், வெம்சினம் எயினர் — கொடியகோபத்தையுடைய வேடரும், வால்வளை அலற—வெள்ளியசங்குகள் கோஷிக்கவும், இரலைஉம் துடிஉம் வாய் விட்டுஆர்ப்ப — துத்தரிக்கொம்பும் குறிஞ்சிநிலப்பறையும் ஒலிக்கவும், தாக் க—தம்முள் போர்செய்தலால், இரவுபகல்—இரவும்பகலும், செற்றுபால்வளை ந்து—கோபித்து ஒருபக்கத்தில் வந்துவளைந்து, மலைந்துஒத்தார்—போர்செ ய்தலையொத்திருந்தார்கள்.

ந - ரை. காற்றுஉள்ளேயடித்தலாலே கடலெழுந்ததே போலக்கிளர்ந்து வேல்மிடைந்ததானையும் எயினரும் வளையலற இரலையுந் துடியும்வாய்விட்டார்ப் பத்தம்மிற்ருக்குதலாலே கோபித்து ஒருபக்கத்திலே வந்துவளைந்து இரவும்பகலு மலைவதொத்தாரென்க.

மூன்றுதன்மையாவன ஆக்கலும் காத்தலும் அழித்தலுமாம். தாக்ககாரணப்பொருள்மேல் நிற்றலால் இறந்தகாலவினையெச்சம் தாக்குபகுதி, உகரக்கேடுசந்தி, அஎச்சவிகுதி. செற்றுஇறந்தகாலவினையெச்சம் செறுபகுதி, முதனிலையெழுத்தாய்த் தோன்றிய றகரமெய் இறந்தகாலவிடைநிலை, உகரக்கேடுசந்தி, உஎச்சவிகுதி, அலற, ஆர்ப்ப நிகழ்காலத்தில்வந்த வினையெச்சங்கள். ஓடுஎண்ணிடைச்சொல். அரசர்தானைக்குவளையும் வேடர்சேனைக்கு இரலையுந்துடியும் எனப்பெயர்ச்சொற்களும் பெயர்ப்பயனிலைகளுமாய் நிற்றலால் முறைநிரனிறைப்பொருள்கோள். இரவும்பகலும் மலைவதுபோல அரசன்சேனையும்வேடர்சேனையுமலைந்தனவெனநிற்றலால் ஒப்புமைக்கூட்டவுவமையணி.

(27) விற்பழுத்துமிழ்ந்தவெய்யவெந்நுனைப்பகழிமைந்தர்
மற்பழுத்தகன்றமார்பத்திடங்கொண்டுவைகச்செந்நாச்
சொற்பழுத்தவர்க்குமாண்மைசொல்லலாந்தன்மைத்தன்றிக்
கொற்பழுத்தெரியும்வேலார்கொடுஞ்சிலைகுழைவித்தாரே

இ - ள். வில்பழுத்து உமிழ்ந்த — (வேடர்கள்) வில்வளைந்துகக்கிய, வெய்யவெம்நுனைபகழி—கொலைத்தொழிலைவிரும்பும் கொடியநுனியையுடையபாணங்கள், மைந்தர் மல்பழுத்து அகன்றமார்பத்து இடம்கொண்டுவைக— (அரசன்சேனையிலுள்ள) வீரர்களது மல்யுத்தத்திற்கை தேர்ந்துபரந்த மார்பில்தங்குதலால், செம்நாசொல்பழுத்தவர்க்குஉம்— செவ்வந்தநாவில் சொல்லுகளெல்லாம் கைவந்தகவிஞர்களும், ஆண்மைசொல்லல்ஆம் தன்மைத்துஅன்றி—ஆண்தன்மையை யெடுத்துக் கூறுந்தன்மைத்தல்லாமல், கொல்பழுத்து எரியும்வேலார்—கொல்லன் தொழிலிலே யடிப்பட்டுவந்து எரியாநின்றவேலையேந்திய அவ்வீரர்கள், கொடும்சிலைகுழைவித்தார்—வேடர்களது வளைந்தவில்லினைக்கெடுத்தார்கள்.

ந - ரை. வேடர்கையில்வில் வளைந்துகான்றபகழி. மைந்தர்மார்பத்தே தங்குதலாலே கவிஞர்களுக்கும் ஆண்மை கூறலாந் தன்மைத்தன்ருக, எரியும்வேலார் அவ்வேடர் வில்லைக்கெடுத்தாரென்க.

இவ்வாறன்றி வேலார்தமது வில்லைவளைத்தார், அவ்வளவிலே வேடர்மைந்தராகிய அவ்வேலார் மார்பில் அம்பினை யழுந்தச்செய்தார் என்றுபொருள்கொள்ளுதலும் ஒன்று. சொல்லுகள்பெயர், வினை, இடை, உரிமுதலிய சொற்கள். இவையன்றிச்செஞ்சொல், இலக்கணச்சொல், குறிப்புச்சொல்எனக்கொள்ளினு மமையும். பழுத்துஎன்றதற்கு வளைந்துஎனவும், கைதேர்ந்து எனவும், கைவந்தஎனவும், அடிப்பட்டு எனவும்பொருள்கொள்ளுதல் "உண்டற்குரியவல்லாப்பொருளை— உண்டனபோலக் கூறலுமரபே" என்னுந்தொல்காப்பியச்சூ—இல் "கூறலும்" என்றதில்வந்த உம்மையால். வெய்யபண்படியாகப்பிறந்த குறிப்புவினைபெயரெச்சம்வெம்மை ஈறுகெடுதலும் ஈற்றுமெ

ய்யகரமாகத்திரிதலும் யகரத்தோற்றமுஞ்சந்தி, அளச்சவிகுதி. குழைவித்தார்பலர்பாற்படர்க்கை யிறந்தகாலப்பிறவினைவினைமுற்று குழைபகுதி, வி பிறவினைவிகுதி, அனைத்தும் ஒருபகுதி, தகரமெய் இடைநிலை, தகரமெய்சந்தி, ஆர் விகுதி. அடிப்பட்டுதொன்றுதொட்டு.

(28) வாட்படையனுங்கவேடர்வண்சிலைவணங்கவாங்கிக்
கோட்புலியினத்தின்மொய்த்தார்கொன்னுனைப்பகழிதம்மால்
வீட்டினார்மைந்தர்தம்மைவிளிந்தமாகவிழ்ந்ததிண்டேர்
பாட்டரும்பகடுவீழ்ந்தபனிவரைகுனிவதொத்தே.

இ - ள். வாள்படை அனுங்க (தம்மைக்கெடுத்த) வாளாயுதங்கெடும்படி, வேடர்வண் சிலைவணங்கவாங்கி— வேடர்கள்வென்றி வளமமைந்தவில்லைவளைத்து, கோள்புலிஇனத்து இன்மொய்த்தார்—கொல்லுந்தொழிலையுடையபுலியின்கூட்டம்போலநெருங்கிய அவ்வேடர்கள், கொன்நுனைபகழிதம்ஆல் மைந்தர்தம்ஐ வீட்டினார்—அச்சத்தைத்தரும் முனையையுடைய அம்பினால் வீரர்களைக்கொன்றார்கள், மாவிளிந்த திண்டேர்கவிழ்ந்த—குதிரைகளிறந்தன, திண்ணியதேர்கள் குப்புற்றன, பனிவரைகுனிவது ஒத்து—இமபருவதங்கால் சாய்தலையொத்து, அரும்பகடுபட்டு வீழ்ந்த—வலியயானைகள்பட்டுவீழ்ந்தன.

ந - ரை. தம்மைக்கெடுத்த வாட்படைகெடும்படி வேடர்வில்லைவளைத்துப்புலியினம்போல் எதிர்சென்று மொய்த்தவர்கள், தம்பகழியாலே வீரரானவர்களை வீட்டினார், அவ்வளவிலேமாவீழ்ந்தன, தேர்கவிழ்ந்தன, வரைகுனிவதனையொத்துப்பகடுவீழ்ந்தனவென்க.

படைகருவிப் பொருளில்வந்த தொழிற்பெயர் படு (கொலை) உகரக்கேடு சந்தி, ஐவிகுதி. அனுங்க வணங்க எதிர்காலத்தில்வந்த அகரவீற்றுவினையெச்சம். அனுங்கு, வணங்குபகுதிகள். இதனடியாக அனுங்கல், அனுங்கிய, அனுங்கி, அனுங்கினனெனவினைவிகற்பங்கள்வரும். வாங்கி என்னும் இறந்தகாலவினையெச்சம் மொய்த்தார் என்னும் வினைமுற்றுப்பெயரின் முதனிலைகொண்டது. வாங்குபகுதி. வீட்டினார் இறந்தகாலப்பலர் பாற்படர்க்கைவினைமுற்று வீட்டுபகுதி. பட்டு இறந்தகால வினையெச்சம் படுபகுதி. இது நீட்டல்விகாரம். விளிந்த, கவிழ்ந்த, வீழ்ந்த அஃறிணைப்பலவின்பாற்படர்க்கையிறந்தகால வினைமுற்றுகள். விளி, கவிழ், வீழ்பகுதிகள். மா, தேர், பகடுபோல்பகா அஃறிணைப்பெயர்கள். மா என்னும் பலபொருளொருசொல் இனத்தால் குதிரைமேல்நின்றது "வினைசார்பினமிடமேவி" என்னுஞ்சூ-ஆல். கொதிநுனைப்பகழி என்றும் பாடம். வாட்படை என்றதற்கு வாளையேந்திய சேனை எனலும் அமையும். (உஅ)

(29) வென்றிநாங்கோடுமின்னேவெள்ளிடைப்படுத்தென்றெண்ணி
ஒன்றியுள்வாங்குகென்னவொலிகடலுடைந்ததேபோல்
பொன்றவழ்களிறுபாய்மாபுனைமயிர்க்குஞ்சிபிச்சம்
மின்றவழ்கொடியோடிட்டுவேற்படையுடைந்தவன்றே.

இ - ள். வெள்ளிடைப்படுத்து—வேடரைவெளியிலே புறப்படவிட்டு,

நாம் இன்னேவென்றிகோடும் என்று எண்ணி—நாம் இப்பொழுதே வெற்றிகொள்வோமென்று இறவாதவீரர்களெல்லாம்கருதி, ஒன்றி (அவ்வேடர்சேனையோடு) பொருந்தி. உள்வாங்குகஎனனை—தள்ளிச்சிறிது குறைக்கக்கடவீரென்று தமதுசேனைக்குச்சொல்ல, பொன்தவழ்களிறுபாய்மா—பொலிவுமிக்கயானையுங்குதிரையும், வேல்படை—வேலையேந்தியகாலாட்படையும், மயிர்புனைகுஞ்சிபிச்சம் — மயிரால்வேய்ந்த குச்சத்தையும், வெண்குடையையும், மின்தவழ்கொடிஒடு இட்டு — ஒளிபரந்த கொடியோடுபோட்டு, ஒலிகடல் உடைந்ததுபோல் உடைந்த—ஒலிக்குங்கடலுடைந்ததுபோல வுடைந்தன.

க - ரை. படாதமைந்தர், வெளியிலே வேடரைப் புறப்படவிட்டுயாம் இப்பொழுதே வெற்றிகொள்ளுதுமென்று எல்லாருமெண்ணி, அப்படையுடனேபொருந்தித்தள்ளிச் சிறிதுகுறைப்பீராகவென்று தம்படைக்குச் சொல்ல, களிறும்மாவும் வேற்படையும் குச்சத்தையும் பிச்சத்தையும் கொடியுடனே போகட்டுக் கடலுடைந்தது போலுடைந்த என்க.

வெற்றிகொள்ளுதலாவது தாம் உயிரோடுவாழ்தல், இதுமங்கலவழக்கு. வேடர்சேனையோடு பொருந்துதலாவது சிறிதுநின்று போர்செய்தல். குஞ்சிஈயோட்டி. களிறு, பாய்மா வீரர்களைவிடாது நிற்றலால் விடாத ஆகுபெயர்கள். கடலுடைந்ததுபோல் உடைந்தன எனப்பன்மைப்பாலுக்கு ஒருமைப்பால் உவமையாதல் பால்மயக்குறழ்ச்சி. இனிஎன்னும் இடைச்சொல் இன்னெனவந்தது கடைக்குறை. கோடும் தன்மைப்பன்மை யெதிர்கால வினைமுற்று. கொள்பகுதி, முதனீளுதல் விகாரம், தும்விகுதி, ளகரக்கேடுந்தகரத்திரிபுஞ்சந்தி. (உக)

(30) பல்லினாற்சுகிர்ந்தநாரிற்பனிமலர்பயிலப்பெய்த
முல்லையங்கண்ணிசிந்தக்கால்விசைமுறுக்கியாயர்
ஒல்லெனவொலிப்பவோடிப்படையுடைந்திட்டதென்ன
அல்லலுற்றழுங்கிநெஞ்சிற்கட்டியங்காரனாழ்ந்தான்.

இ - ள். ஆயர்—இடையர்கள், பல்இன்ஆல் சுகிர்ந்தநார்இல்—பல்லாற்கிழித்தநாரினால், பனிமலர்பயில்பெய்த அம்முல்லைகண்ணிசிந்தகால் விசைமுறுக்கிஒடி—குளிர்ந்தமலரை நெருங்கவைத்துக்கட்டிய அழகிய முல்லைமாலைசிந்தும்படி கால்விசையாக முறுக்கியோடி, ஒல்லென ஒலிப்பபடை உடைந்திட்டது என்ன—ஒல்லென்றொலிக்கச்சேனைபுறங்கொடுத்ததென்றுகூற, கட்டியங்காரன்—கட்டியங்காரனென்பவன், நெஞ்சுஇல் அல்லல்உற்று அழுங்கிஆழ்ந்தான்—மனத்தில்வருத்தமுற்றிரங்கி அதிலழுந்தினன்.

ந - ரை. படைகெட்டவளவிலே ஆயர், கண்ணிசிந்தும்படி, கால்விசையுண்டாகமுறுக்கியோடியொல்லெனவொலிப்பப்படை யுடைந்ததென்றுகூற, அதுகேட்டுக் கட்டியங்காரன் நெஞ்சிலே யொருவருத்தமுற்றிரங்கி அதிலேயழுந்தினன் என்க.

என்றூர்க்கு அல்லலுற்றறழுங்கி எனப்பாடங்கொண்டால் என்றுவருந்தினார்க்குத்தானும் எதிரேவருந்தி எனப்பொருள்கொள்க. சுகிர்ந்த இறந்தகாலப்பெயரெச்சம் சுகிர்பகுதி. அழுங்கி இறந்தகாலவினையெச்சம் அழுங்குபகு

தி. அழுங்கியென்னும் வினையெச்சத்தினின்றுபிரிந்த அழுங்கல் என்னுந்தொழிற்பெயர் ஏழனுருபேற்று அதில் எனநின்றது. (௫௦)

(31) வம்புகொண்டிருந்தமாதர்வநமுலைமாலைத்தேன்சோர்
கொம்புகொண்டன்னநல்லார்கொழுங்கயற்றடங்கண்போலும்
அம்புகொண்டரசர்மீண்டாராக்கொண்டுமறவர்போனார்
செம்புகொண்டன்னவிஞ்சித்திருநகர்ச்செல்வவென்றார்.

இ - ள். செம்புகொண்டால் அன்னஇஞ்சி—செம்பின்தன்மைகொண்டாலொத்த மதில்சூழ்ந்த, திருநகர்செல்வ—செல்வமிக்க இராசமாபுரத்திற்கு அரசனாகிய சீமானே, மாலைதேன்சோர் கொம்பு—மாலையினது தேனொழுகுமொருபூங்கொம்பு, வம்புகொண்டு இருந்தமாதர்—கச்சைத்தன்னிடத்தேகொண்டு அடிபரந்த விருப்பத்தைத்தரும், வநம் முலைகொண்டால் அன்னநல்லார்—சந்தனக்கோலமமைந்த தனங்களைக்கொண்டாலொத்த பெண்களுடைய, கொழுங்கயல் தடகண்போலும் அம்புகொண்டு அரசர்மீண்டார்—கொழுவிய கயல்போன்ற பரந்தகண்களையொத்த அம்பினையேந்தி யரசர்திரும்பினார்கள், மறவர் ஆகொண்டுபோனார் என்றார்—வேடர்கள் பசுக்களைக்கொண்டு போயினார் என்று இடையர்கள் கூறினார்கள்.

ந - ரை. நிரைபோனபின்வந்த ஆயர், செல்வனே, மாலையினது தேனொழுகுவதோர் கொம்புகச்சைத்தன்னிடத்தேகொண்டு அடிபரந்த காதலையுடைய முலையைத்தனக்கு உறுப்பாகக்கொண்டாற்போலு நல்லாருடையகண்போலத் தப்பாத அம்பையேதாங்கொண்டு அரசர்மீண்டார், மறவர் ஆவைக்கொண்டே போயினார் என்க,

உலகிற்கு அரசனாகிய கட்டியங்காரனைநகரிற்கு அரசனேயென்றது மருட்சி. அரசர் என்றது கட்டியங்காரன் புத்திரர் நூற்றுவரையும், அவன் மைத்துனன் மதனனையும். கொண்டன்னதொர்குத்தல் விகாரம். வம்புகொண்டிருந்தமாதர் வநமுலைமாலைத்தேன்சோர் கொம்புகொண்டன்ன நல்லார் என்றது இல்பொருளுவமையணி. தடஎன்னும் உரிச்சொல் முன்வருமொழிமுதல் வல்லெழுத்துமிகாமல் இனவெழுத்துமிகுதல், "இடையுரிவடசொலின்" என்ற சூ—ஆல். (௫௧)

(32) மன்னிரைபெயர்த்துமைந்தர்வந்தனர்கொள்கவாட்கட்
பொன்னிழைசுடருமேனிப்பூங்கொடியனையபொற்பிற்
கன்னியைத்தருதுமென்றுகடிமுரசியம்பக்கொட்டி
நன்னகர்வீதிதோறுநந்தகோனறைவித்தானே.

இ - ள். நந்தகோன்—நந்தகோனுனவன் (அரசன்சும்மாவிருத்தலால்) வாள்கண்—வாள்போன்றகண்களையும், பொன் இழைசுடரும்மேனி—பொன்னாற்செய்த ஆபரணம் விளங்குமேனியையும், பூங்கொடி அனையபொற்புஇன் கன்னிஐ—பூங்கொடியையொத்த பொலிவினையுமுடைய கன்னியை, மன்நிரைபெயர்த்துமைந்தர்வந்தனர்கொள்க—பெரியபசுக்கள்கூட்டத்தை மீட்டுவந்தவீரர்கள்கொள்ளக்கடவர்கள், தருதும்என்று—யாமுங்கொடுப்போமென்று, நல்நகர் வீதிதோறும்—நல்ல இராசமாபுரத்தின்வீதிகள்தோறும், கடிமுரசு

இயம்பகொட்டி அறைவித்தான்—விளக்கமமைந்த முரசுமுழங்கக்கொட்டித் தெரிவித்தான்.

ந - ரை. அதுகேட்டு அரசன் வாளாவிருத்தலின் நந்தகோன், கண்முதலியவற்றையுடைய கன்னியை மைந்தர்நிரைமீட்டுவந்தவர் கொள்வாராக, யாமுந்தருவேமென நகர்வீதிதோறுமிக்க முரசைமுழங்கக் கொட்டிச் சாற்றுவித்தான் என்க.

கொள்வோருங் கொடுப்போருந் தாழ்வுயுரங்கருதாதிருத்தற்குக் கொள்கவென்றும், தருதும் என்றும், தேர்முதலிய நான்குசேனைகளையு மிகவும்பெற்றுப்பலவுயிர்களுக்குங் கருணைசெய்தவரிருத்தலாலும்' கன்னியைவிரும்புவோரிருத்தலாலும்சாற்றினான் என்றுங்கூறினார். வந்தனர் என்னுமுற்றுப்பெயரொச்சமாய் மைந்தர் என்னும் பெயர்கொண்டது. மைந்து (வலிமை) பகுதி, உகரக்கேடுசந்தி, அர்விகுதி. பெயர்த்து இறந்தகால வினையெச்சம் பெயர்பகுதி, தகரமெய்சந்தி, தகரமெய் இடைநிலை, உ எச்சவிகுதி. தருதும் தன்மைப் பன்மையெதிர்காலவினைமுற்று. தாபகுதி, முதல்குறுகலும் ரகரவுகரம் விரிதலும் விகாரம், தும்விகுதி. (௩உ)

(33) வெதிர்ங்குதைச்சாபங்கான்றவெந்நுனைப்பகழிமூழ்க
உதிர்ந்ததுசேனையீட்டங்கூற்றொடுபொருதுகொள்ளுங்
கருந்தடங்கண்ணியன்றிக்காயமாறுகவேகும்
அரும்பெறலவளுமாமென்றாடவர்தொழுதுவிட்டார்.

இ - ள். ஆடவர்—வீரர்கள், சேனைஈட்டம்— அரசனது சேனைகூட்டம், வெதிர்குதைசாபம்கான்ற— மூங்கிலாலமைந்த குதையையுடையவேடர் வில் உமிழ்ந்த, வெம்நுனைபகழிமூழ்க உதிர்ந்தது— கொடியமுனையையுடையபாண மூழ்குதலாற் கெட்டது, கருந்தடகண்ணிஅன்றி—கரியபெரியகண்களையுடைய இவளேயல்லாமல்,காயம்ஆறுஆகஏகும் அரும்பெறலவள்உம்ஆக—ஆகாயமேவழியாகச்செல்லும் பெறுதற்கரிய தெய்வப்பெண்ணுமாக, கூற்றொடுபொருதுகொள்ளும்என்று— இயமனையொத்த அவ்வேடரோடு போர்செய்துபசுக்களை மீட்குங்கொலை வல்லாரில்லையென்று, தொழுதுவிட்டார்—கைகூப்பிப் போர்த்தொழிலைவிட்டனர்.

ந - ரை. ஆடவர், சேனைத்திரள்வேடரது சாபங்கான்ற பகழிமூழ்குதலாலே கெட்டது ஆதலால், இவளேயன்றி ஆகாயமே வழியாகச் செல்வாள் ஒருபெறுதற்கரிய தெய்வ மகளுமாக, அவ்வேடராகிய கூற்றோடுபொருது கொள்ளுங்கொலை வல்லாரில்லையென்று தொழுதுவிட்டாரென்க.

பகழிமூழ்கி எனவும்பாடம். கான்ற இறந்தகாலப்பெயரொச்சம் கால்பகுதி, மூழ்க காரணத்தின்மேல் நிற்றலால் இறந்தகாலத்தில்வந்த செயவெனெச்சம் மூழ்குபகுதி. கண்ணி என்பதனிறுதியில் பிரிநிலைஏகாரந்தொகுத்தல். சேனையீட்டம் பலவினீட்டத்தற்கிழமைப்பொருளில்வந்த ஆறும்வேற்றுமைத்தொகைநிலைத்தொடர். கூற்றுஉவமையாகுபெயர். வெதிர்ங்குதைதமூன்றும் வேற்றுமையுருபும்பயனுந்தொக்க தொடராதலால் வருமொழிமுதல் வல்

லெழுத்திற்கு இனவெழுத்துமிகுதல் "யரழமுன்னர்க்கசதப" என்னுஞ்சூ—இல் "வேற்றுமைமிகலு மினத்தோடுறழ்தலும்" என்றவிதியால். கொலைத்தொழில் வல்லாரென்பது எஞ்சிநிற்றலால் சொல்லெச்சம்.

(34) கார்விரிமின்னனார் மேற்காமுகர்நெஞ்சிறோடும்
தேர்பரிகடாவித்தேந்தார்ச்சீவகனருளிற்போகித்
தார்பொலிபுரவிவட்டந்தான்புகக்காட்டுகின்றாற்
கூர்பரிவுற்றதெல்லாமொருமகனுணர்த்தினானே.

இ - ள். கார்விரிமின் அன்னார்மேல்— மேகத்தில்தோன்று மின்னலையொத்த பெண்கள்மேல், காமுகர்நெஞ்சு இன் ஓடும்— காமிகள்மனம் ஓடுதல்போலச்செல்லும், பரிதேர்கடாவி— குதிரைபூண்ட தேரைச்செலுத்தி, தார்பொலிபுரவி—கிண்கிணிமாலையால்விளங்கும் குதிரை, வட்டம்தான்புக காட்டுகின்றாற்கு—வாளியாயோடுதலிற்செல்லக்காட்டுஞ் சீவகனுக்கு, தேம்தார்சீவகன் அருள்இல் ஒருமகன்போகி-தேன்சிந்துமாலையையணிந்த அச்சீவகனருள்வழியே ஒருமகன்போய்வந்து, ஊர்பரிவுற்றது எல்லாம் உணர்த்தினான்—ஊரிலுள்ளார் துன்பமடைந்ததெல்லாம்கூறினான்.

ந - ரை. சீவகன், மின்னையொக்கு மகளிர்மேலே காமுகர்நெஞ்சு ஓடுமாறுபோல ஓடுந்தேரைச் செலவிலே கடாவிப்பின்பு, புரவியைவட்டத்தேசெல்லக்காட்டுகின்றவனுக்கு, அவனருளாலேயொருமகன் போய்வந்து ஊர்பரிவுற்றதெல்லா முணர்த்தினான்.

ஒருமகன்சீவகனருளில்தேர்பரிகடாவிப்போகி உணர்த்தினானெனக்கொண்டு கூட்டிப்பொருள் கொள்ளினும் அமையும். உற்றதுஎல்லாம் ஒருமைபன்மைமயக்கம். கடாவி இறந்தகாலவினையெச்சம் கடாவுபகுதி. இன்உருபு ஒப்புப்பொருட்டு.

என்றவனுரைப்பக்கேட்டேயெரிமணிக்கடகக்கையால்
ஒன்றியதோழர்கைம்மேலெறிந்துநக்குணர்வின்மிக்கான்
சென்றவற்கோகையாகச்சிறப்பொடுசெம்பொன்சிந்தி
நன்றிதேபோல்வதில்லைநாந்தொறுமீண்டுமென்றான்.

இ - ள். என்றுஅவன்உரைப்ப உணர்வின்மிக்கான் கேட்டு—என்றுஅவன்கூற அறிவின்மேம்பட்டசீவகன்கேட்டு, எரிமணிகடகம் கைஆல்—தீப்போலவிளங்குஞ் செந்நிறமமைந்த இரத்தினமழுத்திய கடகத்தையணிந்த தனதுகையால், ஒன்றிய தோழர்கைமேல்எறிந்து—இடைவிடாததனது தோழரதுகையிலடித்து (சபதங்கூறினென்றபடி) நக்கு—சிரித்து, நாம்சென்று—நாம்போய், அவற்குஓகையாகதொறுமீண்டும்—அந்நந்த கோனுக்கு மகிழ்ச்சியுண்டாகப்பசுக்களைமீட்போம், சிறப்புஓடுசெம்பொன் சிந்திநன்று — நன்குமதிப்போடு செம்பான்சிந்துதலால்வரும்பேறு, இதுபோல்வதுஏ இல்லைஎன்றான்-பசுமீட்டலாகிய இத்தொழிலையேயொத்த வேறுசெயல் அந்நந்தகோனுக்கு இல்லையென்றுகூறினான்.

மீட்டும்எனவாராமையால்மீண்டும் எனப்பாடங்கொண்டாம். இதுகாலவழுவமைதி.

சேட்டிளம்பரிதிபோலுந்திருமகிழ்மாலைமார்பன்
கேட்டலுங்கனன்றுவல்லேகிளரொளிநந்தத்திண்டேர்
நீட்டமில்செய்கைதம்மாற்பண்ணெனநினைந்துசொன்னான்
நீட்டரும்பரிதியன்னசீவகசாமியன்றே.

இ - ள். திருமகிழ்மாலை மார்பன்—வீரலட்சுமிவிரும்பு மாலையையணித்த மார்பையுடையசீவகன், கேட்டலும்கனன்று— அதுகேட்ட அப்பொழுதேகோபித்து, வல்லே—விரைந்து, சேடுஇளம்பரிதிபோலும்கிளர்ஒளிநந்த—பெருமைவாய்ந்த இளஞ்சூரினுதயம்போலும் விளங்கும்கிரணம் அதிகரிக்க, திண்தேர்—திண்ணியதேரை, நீட்டம்இல்செய்கைதம்ஆல் பண்என்ன—தாமதியாமல் அலங்கரியாயென்று, நீட்டுஅரும்பரிதி அன்ன—(ஒளியால்) எழுதுதற்கரிய சூரியனையொத்த, சீவகசாமி நினைந்துசொன்னான்— அச்சீவகன்கருதிக்கூறினான்.

இந்தஇரண்டுசெய்யுள்களும்நச்சினார்க்கினியர் காலத்தேயருகிவழங்கினமையால் அவைகளுக்குஉரையெழுதாமல் பயிலவழங்காஎன்றுவிட்டனர்.

வேறு.

(35) *தன்பான்மனையாளயலான்றலைக்கண்டுபின்னும்*
இன்பாலடிசிற்கிவர்கின்றகைப்பேடிபோலா
நன்பால்பசுவேதுறந்தார்பெண்டிர்பாலர்பார்ப்பார்
என்பாரையோம்பேனெனின்யானவனாவனென்றான்.

இ - ள். நன்பால்பசுதுறந்தார்—நல்லொழுக்கமும்பசுவும்துறவினரும். பெண்டிர்பாலர்பார்ப்பார் என்பாரை—பெண்களும்பாலரும் பார்ப்பாரும் என்றுசொல்லப்பட்டவர்களை, யான்ஓம்பேன் என்னின்—யான்பாதுகாவேனானால், தன்பால்மனையாள்—தன்பகுதியிலுள்ள வீரமகள், அயலான்தலைகண்டு—அயலானிடத்தேபார்த்து (பொறுத்தவன் ஆண்மகனல்லாமையால்) பேடிபோலா—பேடியையொத்து, பின்உம் இன்பால் அடிசிற்கு—பின்னும் அவனிடத்து இனியபாற் சோற்றையுண்ணுதற்கு, இவர்கின்றகை அவன்ஆவன் என்றான்—மேற்கொள்ளுகின்ற ஒழுககத்தையுடையகட்டியங்காரனாவேனென்று கூறினான்.

ந - ரை. நல்லொழுக்கம், பசு, துறந்தார், பெண்டிர், பாலர், பார்ப்பார் என்பாரை ஓம்பேனெனின்யான், தன்வீரத்தை அயலாரிடத்தேகண்டு பொறுத்தான், ஆண்மகன் அன்மையிற் பேடியையொத்துப் பின்னும்பாலடிசிலுண்டற்கு மேற்கொள்கின்ற ஒழுக்கத்தையுடைய கட்டியங்காரனாவேனென்றானென்க.

இது அவனதுஉட்கோள். இதுசொல்லாலறியப்படுதலால் மெய்ப்பாட்டுளடங்கும். இனிப்பேடிபோலாம் எனப்பாடமாயின்பேடிபோலாம் அவனாவன் எனக்கொண்டு கூட்டிப்பொருள்கொள்க. அடிசில்தொழிலாகுபெயராய் உணவின்மேல்நின்றது. அடு (சமைத்தல்) பகுதி, உகரக்கேடுசந்தி, சகரமெய்விரித்தல்விகாரம், இல்தொழிற்பெயர் விகுதி, போலாபோன்று என்னும்பொருள்மேல் நிற்றலால் இடைச்சொல்லடியாகப்பிறந்த செய்யாஎன்னு

ம்வாய்பாட்டிறந்தகாலவினையெச்சம். இவர்கின்றநிகழ்கால வினைப்பெயரெச்சம் இவர்பகுதி. திணைவிரவியெண்ணி உயர்திணையால்முடிதல் "பலவயினானும்" எனத்தொல்காப்பியம் கிளவியாக்கத்தில் வருஞ்சூ—இன் உம்மையால் "சிலவயினான்" எனநச்சினார்க்கினியர்கொண்டதனால். ஓம்பேன் எதிர்மறைத்தன்மை யொருமைவினைமுற்று. ஓம்புபகுதி, உகரக்கேடுசந்தி, ஏஎதிர்மறைவிகுதி, அனைத்தும்ஒருபகுதி, முதற்குறையாய்நின்ற ஏன்விகுதி. தன்கோற்கீழ்வாழும் வேடரிடத்து வீரமிருக்கக்கண்டுங் கட்டியங்காரனுயிர் ஓடுவாழ்தலால் இவ்வாறுகூறினான்.

(36) போர்ப்பண்ணமைத்துநுகம்பூட்டிப்புரவிபண்ணித்
தேர்ப்பண்ணமைத்துச்சிலைகோலிப்பகழியாய்ந்து
கார்க்கொண்மூமின்னினிமிர்ந்தான்கலிமான்குளம்பிற்
பார்க்கண்ணெழுந்ததுகளாற்பகன்மாய்ந்ததன்றே.

இ - ள். புரவி பண்ணிநுகம்பூட்டி — குதிரைகளையலங்கரித்து நுகத்தேபூட்டி, தேர்பண்ணமைத்து— தேரையலங்கரித்து, போர்பண்ணமைத்து—தான்போர்க்கோலஞ்சமைந்து, சிலைகோலிபகழி ஆய்ந்து— வில்லினைவளைத்து அம்பினையாராய்ந்து, கார்கொண்மூமின் இன்நிமிர்ந்தான் — கரியமேகத்தில் தோன்றியமின்னலைப்போலத் தேரைச்செலுத்தினான், கலிமான்குளம்பில்—மனமிக்ககுதிரையின் குளம்பால், பார்கண் எழுந்ததுகள்ஆல்—(அப்பொழுது) பூமியிலெழுந்த புழுதியால், பகல்மாய்ந்தது — பகற்பொழுதுகெட்டது.

க - ரை. புரவியைப்பண்ணி நுகத்தேபூட்டித் தேரைப்பண்ணமைத்துப், பின்தன்னைப் போருக்கீடாகப் பண்ணமைத்துக்கோலி ஆய்ந்து மின்போலத் தேரைச்செலுத்தினான், அப்பொழுது குதிரைக்குரத்தால் பாரிடத்தெழுந்த புழுதியாலே பகற்பொழுதுகெட்டதுஎன்க.

பூட்டி, பண்ணமைத்து, கோலி, ஆய்ந்துஎனவரும் வேறுபலவடுக்கிய வினையெச்சங்கள் நிமிர்ந்தான்என்னும் வினைமுற்றின் முதனிலையைத்தனித்தனிகொண்டன "உருபுபலவடுக்கினும் வினைவேறடுக்கினும்" என்றசூ—ஆல். கொண்மூ குறுக்கல்விகாரம்.

(37) இழுதொன்றுவாட்கணிளையாரிளையார்கணோக்கிற்
பழுதின்றிமூழ்கும்பகழித்தொழில்வல்லகாளை
முழுதொன்றுதிண்டேர்முகஞ்செய்தவன்றன்னொடேற்கும்
பொழுதன்றுபோதுமெனப்புள்மொழிந்தான்மொழிந்தான்.

இ - ள். புள்மொழிந்தான்—நிமித்தங்கூறினவன், இழுது ஒன்றுவாள்கண் இளையார்—நெய்பூசிய வாளையொத்த கண்களையுடைய பெண்கள், இளையார்கள் நோக்குஇன்— காமுகரிடத்தில் பார்க்கின்ற பார்வையைப்போல, பழுதுஇன்றி மூழ்கும்பகழி தொழில்வல்லகாளை— தப்பாதுதைக்கும் பாணத்தில்வல்ல ஒருகாளைப்பருவமுடையவன், ஒன்றுதிண்தேர் முழுதுமுகம் செய்தவன்தன்ஒடு— ஒருதிண்ணியதேரோ திசைமுழுதுஞ்செல்லுதற்குக்காரணமானவனோடு, ஏற்கும்பொழுது அன்று— போர்செய்தற்கு எதிர்கொள்ளுங்கா

லம் இப்பொழுதல்ல, போதும் என்னமொழிந்தான்—நாம்போகக்கடவேமெ ன்றுகூறினன்.

ந - ரை. முன்பு நிமித்தங்கூறினவன் அத்தேரைக்கண்டு, ...ன்றின அவன் மகளிர்காமுகரிடத்து நோக்குகின்ற நோக்குப்போலத் தப்பின்முகத் தைக்கும் அம்பாற்செய்யுந்தொழிலே வல்லகாளை, தேரொன்றேதிசைமுழுது முகஞ்செய்தற்குக் காரணமான வன்றன்னுடனே யாம் இப்பொழுது போ ரையெதிர்கொள்ளும் பருவமன்று, போகக்கடவேமென்றுகூறினன்.

பகழித்தொழில்வல்லகாளை, திண்டேர் முகஞ்செய்தவன் ஒருபொருள் மேல்வந்த பலபெயர். போதும் தன்மைப்பன்மை யெதிர்காலவினைமுற்று. போபகுதி, தும்தன்மைப்பன்மைவிகுதி.

(38) மோட்டும்முதுநீர் முதலைக்குவலிய துண்டேல்
காட்டுண்ணமக்குவலியானையுங்காண்டுமென்றே
எட்டைப்பசியினிரைகவ்வியநாகமேபோல்
வேட்டந்நிரையைவிடலின்றிவிரைந்ததன்றே.

இ - ள். மோடுமுது நீர்முதலைக்கு — ஆழ்ந்தபெரிய நீரிற்கிடக்கு முத லைக்கு, வலியதுஉண்டேல்—வலியபொருளொன்றுண்டானல், காடுஉள்நமக் குவலியானைஉம்காண்டும்என்று—காட்டில்நம்மினும்வலியவரைநாம்பார்போ மென்று, எட்டைப்பசிஇன்—துன்பமிகுந்தபசியினல், இரைகவ்வியநாகம்ஏ போல்—இரையைக்கவ்வியபாம்பைப்போல—வேட்டஅநிரைஐ—தாம்விருப் பிக்கைக்கொண்ட அப்பசுக்களை, விடல்இன்றி விரைந்தது — கைவிடாது போர் செய்யவிரைந்தது.

ந - ரை. அப்பெழுதுவேட்டுவச்சாதி, முதுநீரிடத்துப்பெரிய முதலைக் குவலியது ஒன்றுண்டாயின், நமக்குக்காட்டிடத்து வலியானையுங் காண்டு மென்றுகூறி, இரைக்குஇடைந்தபசியால் இரையைக்கவ்விய நாகம்போல் அந்நிரையைக்கைவிடுதலின்றாய்ப் போரிற்குவிரைந்ததுஎன்க.

நீரிற்கிடக்கு முதலைக்குத் தம்மிலும் வலியபொருள் வேறில்லாமையால் முதலைக்குவலிய துண்டேல் வலியானையும் காண்டுமென்றார். தாமேவலிமை யுடையன எனப்பொருள்தோன்ற நிற்றலால்குறிப்பணி. எட்டைதளர்வு. கவ்வல்விடாதுபற்றல். வேட்ட என்னும் இ...ந்தகாலப் பெயரெச்சத்தி னீறு தொக்கது. வேள்பகுதி, தகரமெய்இடைநிலை, ளகரமுந்தகரமும் டகரமா கத்திரிதல்சந்தி, அஎச்சவிகுதி. வலியது ஒன்றன்பாற்படர்க்கைக் குறிப்பு வினைமுற்றுப்பெயர். காண்டும் தன்மைப்பன்மை எதிர்கால வினைமுற்று. காண்பகுதி, தும்விகுதி, தகரம்டகரமாகத்திரிதல் சந்தி. இறந்தகாலத்தில்வ ரில்கண்டும் என டும்விகுதி வரும்.

வேறு.

(39) கடற்படையனுங்கவென்றகானவரொன்னுங்கூற்றத்
திடைப்படாதோடிப்போமினுய்யவென்றிரலைவாய்வைத்
தெடுத்தனர்விளியுஞ்சங்கும்வீளையும்பறையுங்கோடும்
கடத்திடைமுழங்கக்காருங்கட லுமொத்தெழுந்தவன்றே.

இ - ள். கடல்படை அனுங்கவென்ற — (அரசனது) கடல்போன்ற சேனைகெடும்படிவென்ற, கானவர்என்னும் கூற்றத்துஇடை—வேடசாதியென்னும் இயமனிடத்தில், படாதுஉய்ய ஓடிபோமின்என்று— அகப்படாமல் பிழைக்கும்படி யோடிப்போங்களென்றுகூறி, இரலைவாய்வைத்து— துத்தரிக்கொம்பையூதி, விளிஉம் வீளைஉம்எடுத்தனர் — கொக்கரிப்பையும் சீழ்க்கையும் எழுப்பினார்கள், சங்குஉம்பறைஉம் கோடுஉம் கடத்துஇடைமுழங்க— (அதற்கெதிரே சீவகனுடைய) சங்கும்பறையுங் கொம்புங்காட்டிலே கோஷிக்க, கார்உம் கடல்உம் ஒத்துஎழுந்த (இரண்டுசேனையினொலியும்) மேகத்தையுங் கடலையுமொத்தெழுந்தன.

ந - ளை. அங்ஙனம்விரைந்தவர், அரசன்படைகெடும்படிவென்ற வேடரென்னுங் கூற்றத்திடையில் அகப்படாதேபிழைக்க ஓடிப்போங்களென்று வார்த்தைகூறித்துத் தரிக்கொம்பையூதிக் கொக்கரிப்பையுஞ் சீழ்ப்பையு மெழுப்பினர், அதிற்கெதிரேபிள்ளையாருடைய சங்கும்பறையுங் கொம்புங்காட்டிலேமுழங்க,(இரண்டுபடையினொலியும்) காரையுங்கடலையுமொத்தெழுந்தன.

செய்யுளாதலால் விளியுஞ்சங்கும் வீளையும் எனப்பின் வருவதைமுன்னர்க்கூறினார். அனுங்கஎதிர்காலத்தில்வந்த செயஎன்னும் வாய்பாட்டெச்சம் அனுங்கு பகுதி, உகரக்கேடுசந்தி, அவிகுதி.

(40) கைவிசைமுறுக்கிவீசுங்கொள்ளியுங்கறங்குமெய்ப்பச்
செய்கழற்குரிசிற்றிண்டேர்விசையொடுதிசைகளெல்லாம்
ஐயெனவளைப்பவீரரார்த்தனரவருமார்த்தார்
மொய்யமர்நாட்செய்தையன்முதல்விளையாடினானே.

இ - ள். செய்கழல் குரிசில்திண்தேர்—பொன்னாற்செய்த வீரகண்டையையணிந்த சீவகனதுதிண்ணியதேர், விசைகைமுறுக்கி வீசும்கொள்ளிஉம்—விசையுண்டாகக்கையால் முறுக்கிவீசுங்கொள்ளி வட்டத்தையும், கறங்குஉம் எய்ப்ப—காற்றாடியையுமொப்ப, விசையொடு ஐயெனதிசைகள் எல்லாம்வளைப்ப—விசையோடுவிரைந்து எல்லாத்திசைகளையும் வளைக்க, வீரர்ஆர்த்தனர்— அவன்வீரர்கள் கோஷித்தார்கள், அவர்உம் ஆர்த்தார்—அவ்வேடர்களுமொலித்தார்கள், ஐயன்மொய் அமர்முதல் நாள்செய்து விளையாடினான்— அச்சீவகன் போர்த்தொழில் தொடங்குதற்குமுன்பே அந்தப்போரைத் தொடங்கினான்.

ந - ளை. அவர் எதிர்த்தலிற் குரிசில்தேர் கொள்ளிவட்டத்தையுங்காற்றாடியையுமொப்ப விசையோடே வளையாநிற்க, வீரரார்த்தார், அதுகேட்டுவேடரும் ஆர்த்தார். அப்பொழுதுஐயன் நாட்செய்து விளையாடினான்.

தான்பின்னேகட்டியங்காரனோடுபோர்த்தொழில்தொடங்குதற்குப்போர்த்தொழில்தொடங்கினான் என்பார் ஐயன்மொய்யமர்முதல்நாட்செய்து என்வும், தம்முள்தாமேசேனைவகுத்துவிளையாடுந்தன்மைபோல விளையாடினானென்பார் விளையாடினானெனவுங்கூறினார். இதனால் தனதருளும் வீரமுமேம்படுதற்குச்சென்றான் என்பதும் அவரையஞ்சச்செய்து பசுக்களைமீட்டான்

என்பதுந்தேவர்கருத்து எனக்கொள்க ஐயென குறிப்புப்பொருளில்வந்த இடைச்சொல்லடியாகப்பிறந்தவினையெச்சம். எய்ப்ப உவமஉருபிடைச்சொல்லடியாகப்பிறந்த நிகழ்காலவினையெச்சம் எய்பகுதி, பகரமெய்விரித்தல்விகாரம், பகரமெய்சந்தி, அஎச்சவிகுதி.

(41) ஆழியானூர்திப்புள்ளினஞ்சிறகொலியினாகம்
மாழ்கிப்பையவிந்தவண்ணம்வள்ளற்றேர்முழக்கினானும்
சூழ்துகண்மயக்கத்தானும்புளிஞருள்சுருங்கிச்சேக்கைக்
கோழிபோற்குறைந்துநெஞ்சினறமெனமறமும்விட்டார்.

இ - ள். ஆழியான் ஊர்திபுள்ளின் அம்சிறகு ஒலியின்—சக்கரமேந்திய திருமாலேறப்படுவதாகிய கருடனது அழகியசிறகினொலியால், நாகம்மாழ்கி பை அவிந்தவண்ணம்— பாம்புமயங்கிப படமொடுங்கினவகைபோல, வள்ளல்தேர் முழக்கின் ஆன்உம்—சீவகனது தேர்முழக்கத்தாலும், சூழ்துகள்மயக்கத்தான்உம் — தம்மைச்சூழ்ந்ததுகளின் மயக்கத்தாலும், புளிஞர்உள்சுருங்கி—வேடர்கள் போரின்மேலெழுந்த மனவெழுச்சிசுருங்கி, சேக்கைகோழிபோல்குறைந்து—வலையிலகப்பட்ட கோழியைப்போல அச்செயல்குறைந்து, நெஞ்சின்அறம்என்ன — தமதுமனத்தில் தருமம்குடிபுகுதாமற்கை விட்டாற்போல, மறம்உம்விட்டார்—தமதுவீரத்தையுங்கைவிட்டார்கள்.

ந - ரை. திருமாலேறப்படுவதாகிய கருடனதுசிற கொலியினாலே பாம்புமயங்கிப்படம் ஒதுங்கினாற்போல, வள்ளல்தேரொலியாலுந் தம்மைச்சூழ்ந்ததுகளின் மயக்கத்தாலும்வேடர், மனவெழுச்சிசுருங்கி வலைப்பட்டகோழிபோலச்செயல்குறைந்துதமதுநெஞ்சின் அறம்புகுதாமற்கைவிட்டாற்போல, ஈண்டுமறத்தையுங்கைவிட்டார்.

ஊர்திசெயப்படு பொருளில்வந்த தொழிற்பெயர் ஆதலால் ஊர்திப்புள் ஊர்தியென்னுஞ்சிறப்புப்பெயர்புள் என்னும்பொதுப்பெயரை விசேடித்துவந்த இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத்தொடர். ஊர்பகுதி, துசாரியை, உகரக்கேடுசந்தி, இவிகுதி. சேக்கை செயப்படுபொருளில்வந்த தொழிற்பெயர்சே (படுத்தல்) பகுதி, குசாரியை, ககரத்தோற்றமும் உகரக்கேடும் சந்தி, ஐவிகுதி. மாழ்கி இறந்தகாலவினையெச்சம் மாழ்குபகுதி.

(42) புள்ளொன்றேசொல்லுமென்றிப்புருத்தலைவேடன்பொய்த்தான்
வெள்ளந்தேர்வளைந்தநம்மைவென்றியீங்கரிதுவெய்தா
உள்ளம்போற்போதுநாமோரொடுப்பெடுத்துய்யவென்று
வள்ளன்மேலப்புமாரியார்ப்பொடுசிதறினாரே.

இ - ள். புள்ஒன்று எசொல்லும் என்று— (வேடர்கள்) ஆந்தையொருதேர் வருமென்று சொல்லாநின்றதென்று, இபுருத்தலைவேடன் பொய்த்தான்—இந்தப்புருவின்தலைபோலச் சிறியதலையையுடையவேடன் நிமித்தத்தைத்தப்பினான், தேர்வெள்ளம் நம்ஐவளைந்த— தேர்வெள்ளமாக நம்மைவளைந்தன; ஈங்குவென்றி அரிது— இவ்விடத்துப் பசுக்களைக் கொள்ளுதலரிது, நாம் வெய்துஆக ஓர் எடுப்புஎடுத்து—நாம்கடிதாக ஒருகாற்போர்செய்து, உய்ய—பிழைக்கும்படி, உள்ளம்போல் போதும்என்று—ஒருவர்மனம்போல எல்லா

ருஞ் செல்லக்கடவேமென்றுசொல்லி, வள்ளல்மேல் அப்புமாரி ஆர்ப்பு ஓடுசிதறினார்—சீவகன்மேல் சரவருஷத்தையார வாரத்தோடுசிந்தினார்கள்.

ந - ரை. இங்ஙனம் மறம்விட்டவேடர், ஆந்தையொரு தேர்வருமென்று சொல்லாநின்றதென்று நமக்குச்சொல்லி இந்தப்புன்றலைவேடன் நிமித்தத்தைத்தப்பினான், நம்மைத்தேர் வெள்ளமாக வளைந்தன ஆகலான் இவ்விடத்து நிரைகோடலரிது, இனிநாம்கடிதாக ஒருகாலுற்றுப்பொருது தள்ளியுய்யப்போம்படி, ஒருவருள்ளம்போலே யெல்லாருஞ் செல்லக்கடவேமென்று கூறிச்சென்று, வள்ளல்மேலேயம் புமாரியைச்சிதறினார் என்க.

உள்ளம்போல்போதும்—நீநினைந்ததுபோல எல்லாரும்போவேம் எனக்கொள்ளுதலும் ஒன்று. வள்ளல்காரணப்பெயர் வண்மைபகுதி, ஈறுகெடுதலும் ளகரத்தோற்றமும் சந்தி, அல்பண்புப்பெயர்விகுதி. பொய்த்தான், இறந்தகாலவினைமுற்று பொய்பகுதி.

(43) மால்வரைதொடுத்துவீழ்ந்தமணிநிறமாரிதன்னைக்
காலிரைத்தெழுந்துபாறக்கல்லெனப்புடைத்ததேபோன்
மேனிரைத்தெழுந்தவேடர்வெந்நுனையப்புமாரி
கோனிரைத்துமிழும்வில்லாற்கோமகன்விலக்கினானே.

இ - ள். மால்வரைதொடுத்து வீழ்ந்தமணிநிறம் மாரிதன்னை — பெரியமலையினுச்சியினின்று தொடுத்து விழுந்தமுத்தைப்போலும் வெள்ளியநிறமமைந்த காலமழையை, கால்கல்லென இரைத்துஎழுந்து — காற்றுக்கல்லென்று கோஷித்தெழுந்து, பாறபுடைத்ததுபோல் — சிதற அடித்ததன்மைபோல, மேல்நிரைத்துஎழுந்த—தன்மேல் பந்தியாய் எழுந்த, வேடர்வெம்நுனை அப்புமாரி—வேடருடைய கொடியமுனைவாய்ந்த அம்பாகியமழையை, கோமகன்வில்ஆல் உமிழும்கோல் நிரைத்துவிலக்கினான்—சீவகன் தன்வில்லால் சொரிகின்ற அம்புகளையெதிரே வரிசையாகநிரைத்து விலக்கினான்.

ந - ரை. மாரிதன்னை; காற்றுக்கல்லென இரைத்தெழுந்துசிதற அடித்ததன்மைபோல, தன்மேல்நிரைத்தெழுந்த வேடருடைய அம்பாகிய மழையை, கோமகன்தன் கைவில்லால்தான் சொரிகின்ற கோலையெதிரே நிரைத்து விலக்கினான் என்க.

காற்றுவேண்டிய திசையில் மழையைப்போக்கும்விதம்போல இவனம்புதனது விசையினால் வேடரெய்த அம்புகளைத் திசைகளிற்போக்கியது என்பார் பாறப்புடைத்ததேபோல் என்றார் "நாமுறக்கணைக்காற்றெடுத்த கன்னகன்பாசறை" என்றார் பிறரும். நாம்உற—அச்சமிக, கணைகாற்று எடுத்தகன் அகன்பாசறை—அம்பாகிய காற்றெழுந்த இடம்பரந்த படைவீடு. என்பது பொருள். இரைத்து, நிரைத்து இறந்தகால வினையெச்சங்கள். இரை, நிரை பகுதிகள். பாற நிகழ்காலவினையெச்சம் பாறுபகுதி. (௪௩)

(44) கானவரிரியவில்வாய்க்கடுங்கணைதொடுத்தலோடும்
ஆநிரைபெயர்ந்தவாயரார்த்தனரணிந்துநின்றோன்
தானென்றுமுடங்கிற்றென்றுநிமிர்ந்ததுசரம்பெய்மாரி
போனின்றவென்பமற்றப்பொருவருஞ்சிலையினார்க்கே.

இ - ள். வில்வாய் கடுங்கணைதொடுத்தலோடும்—சீவகன் தனதுவில்லினின்று அச்சத்தைத்தரும் அம்பினைத்தொடுத்த தொடையோடும், ஆநிரை பெயர்ந்த—பசுக்கூட்டங்கள் பெயர்ந்தன, ஆயர் ஆர்த்தனர் — இடையர்கள் மகிழ்ச்சியாற் கோஷித்தார்கள், கானவர் இரிய—(பசுக்களைவிட்டுக் குவிந்த) வேடர்கள் உடைந்தோட, அணிந்ததிண் தோள்தான் ஒன்றுமுடங்கிற்று—வாகுவலயமணிந்த தனதுதிண்ணியதோளொன்று முடங்கியது; ஒன்றுநிமிர்ந்தது—ஒருதோள்நிமிர்ந்தது. அப்பொருவருசிலையினோர்க்கு — போர்த்தொழில் கைவந்தவில்லையேந்திய அவ்வேடர்க்கு, பெய்சரம் மாரிபோல்நின்ற — பிரயோகித்த அம்புகள் மழைத்தாரைபோல நின்றன.

ந - ரை. தனது வில்வாய்க்கடுங்கணையை அங்ஙனந்தொடுத்த தொடையுடனே நிரைமீண்டன, அதுகண்டு ஆயரார்த்தனர், அதன்பின்பு, நிரையை விட்டுக் குவிந்தகானவரிரியும்படியாகத் தனது திண்டோள்தானொன்று முடங்கிற்று, ஒன்று நிமிர்ந்தது; அப்பொழுது அவ்வேடர்க்கு அம்புகள் மழைத்தாரைபோலநின்றன.

இவ்வகையாய்ச் சீவகன் பாணந்தொடுத்ததொடை விசேடத்தைக்கண்டு இனியிவனோடு போர்செய்தலரிதென்று வேடர்கள் பசுக்களைக் கைவிட்டனர் என்பார் தொடுத்தலோடும் ஆநிரைபெயர்ந்தவெனவும், பசுக்களைமீட்டு அவ்வேடர் உயிர்வாங்காது நிலைகுலைந்தோட எய்தனன் என்பார் கானவரிரியத் திண்டோள்தானொன்று முடங்கிற்றொன்று நிமிர்ந்தது சரம்மாரிபோல்நின்ற எனவுங்கூறினார். கடுகடியென்னும் உரிச்சொற்றிரிபு. கடுங்கணையென இனவெழுத்துமிகுதல் "இடையுரிவடசொலின்" என்ற சூ - ஆல். என்ப அசைநிலை. நின்ற, பெயர்ந்த சாரியைபெறாதுவந்த பலவின்பாற்படர்க்கை வினைமுற்றுகள். (சச)

வேறு.

(45) ஐந்நூறுநூறுதலையிட்டவாறாயிரவர்
மெய்ந்நூறுநூறுநுதிவெங்கணைதூவிவேடர்
கைந்நூறுவில்லுங்கணையுமறுத்தான்கணத்தின்
மைந்நூறுவேற்கண்மடவார்மனம்போலமாய்ந்தார்.

இ - ள். ஐந்நூறுநூறுதலைஇட்ட—ஐம்பதினாயிரத்தைமுதலிலேயிட்ட, ஆறாயிரவர்—ஐம்பத்தாறாயிரவர்களாயுள்ளார், மெய்நூறுநூறுநுதிவெங்கணை தூவி—அவர்கள்தேகநூற்றையும் ஒருகாலத்தே யழிக்கவல்லநுனியையுடைய கொடிய அம்பினை யவ்வாறழிக்காதபடி சொரிந்து, வேடர்கை நூறுவில் உம் கணைஉம் அறுத்தான்—அவ்வேடர்கள், கையிலேந்தியபிறரையழிக்கும் வில்லையுமம்பையு மஞ்சிப்போடச்செய்தான், மைநூறுவேல்கண்மடவார் மனம் போல — அஞ்சனமெழுதிய வேல்போன்ற கண்களையுடைய பெண்களது மனம்போல, கணத்துஇல் மாய்ந்தார்—கணப்பொழுதி லவ்வேடர்கள் காட்டில் மறைந்தார்கள்.

ந - ரை. அங்ஙனம் பெய்மாரிபோல் நிற்கும்படிகணையைத்தூவி, வேடர்கையிற் பிறரைநூறுகின்ற வில்லையும் அம்பையும் அஞ்சிப்போகடப் பண்

ணினன், பின்பு மடவார் மனம்போலே யொருகணத்திற்காட்டிலே மறைந்தார்கள்.

மைநூறுவேல் என்றதற்கு மையையழித்தற்குக் காரணமானவேல் என்றுபொருள்கொள்ளுதலுமொன்று. தமதுயிர்க்குத் துன்பஞ்செய்யாமைகண்டு வேடர்வில்லைப்போடுதலால் தூவியறுத்தான் எனவும், பெண்கள் மனம்நிலை நில்லாது கெடுதலால் மடவார் மனம்போலவெனவுங் கூறினர் "களிறுமாய்க்குங் கதிர்க்கழனி" என்றாற்போல மாய்ந்தார் என்றார். களிறுமாய்க்கும்—யானையைமறைக்கும், கதிர்கழனி — நெற்கதிரையுடையவயல். மைந்நூறு மையாகிய நூறெனவிரிதலால் மையாகிய சிறப்புப்பெயர் நூறென்னும் பொதுப்பெயரை விசேடித்துவந்த இருபெயரொட்டுப் பண்புத்தொகை. ஐந்நூறுநூறு ஐந்நூறாகிய நூறெனவிரிதலால் பண்புத்தொகை நிலைத்தொடர்.(சரு)

(46) வாள்வாயுமின்றிவடிவெங்கணைவாயுமின்றிக்
கோள்வாய்மதியநெடியான்விடுத்தாங்குமைந்தன்
தோள்வாய்சிலையினொலியாற்றொறுமீட்டுமீள்வான்
நாள்வாய்நிறைந்தநகைவெண்மதிசெல்வதொத்தான்.

இ - ள். கோள்வாய்மதியம் நெடியான்விடுத்தால் ஆங்கு—இராகுவின் வாயிலகப்பட்ட சந்திரனைத் திருமால்விடுத்தாற்போல, மைந்தன் — சீவகன், வாள்வாய்உம் இன்றி—வாளின் தழும்புமில்லாமல், வடிவெங்கணை வாய்உம் இன்றி — வடித்தகொடிய அம்பின்தழும்புமில்லாமல், தோள்வாய்சிலையின் ஒலியால்—தோளிற்சாத்திய வில்லின் குணத்தொனியால், தொறுமீட்டு மீள்வான்—(வேடர்கொண்ட) பசுக்களைமீட்டுத்திரும்பிச்செல்லு மச்சீவகன், நாள்வாய்நிறைந்த — நாள்தோறுநிறைந்த, நகைவெள்மதிசெல்வது ஒத்தான்— ஒளியமைந்த வெள்ளியசந்திரன் செல்வதை யொத்திருந்தான்.

ந - ரை. கோள்வாய் மதியத்தைத்திருமால்விடுத்தாற்போல, மைந்தன், அவ்வேடர்மேல் வாட்டழும்பு மின்றாக அம்புத்தழும்புமின்றாகச் சிலையினொலியால் நிரைமீட்டு மீள்வான், மதிபோவதனையொத்தான் என்க.

திருமால் விடுத்தாங்கு எனவும் பாடம். வாயுமின்றி வாய்வைத்தலுமின்றியென்னும் பொருள்மேல் நிற்றலால் தழும்பின்றியென்றார். நாள்வாய் வாய்தொழிற்பயில்வு பொருளில்வந்த இடைச்சொல். உலகறியக் கலைநிரம்பினசந்திரன்போலப் போர்க்கலைபுணர்ச்சி நிரம்பினவனென்பார் நாள்வாய்நிறைந்த நகைவெண்மதிசெல்வது எனவும்,வேடர் எவ்வகையாலுங் கொல்லத் தகாதவராதலால் கொலையில்லையென்பது தோன்றக் களத்துப்போகினானென்று கூறாது செல்வதொத்தான் எனவுங்கூறினர். மதியநெடியான் விடுத்தாங்கு. மதிசெல்வதொத்தான் இதுதொழிலுவமையணி. நாள்வாய்நிறைந்த மதிசெல்வது என்றதற்குப் பதினாறு வயதுடைமைபற்றியெனக் கொள்ளலுமொன்று. (சகூ)

(47) ஆளற்றமின்றியலர்தாரவன்றோழரோடுங்
கோளுற்றகோவனிரைமீட்டனனென்றுகூற

வாளூற்றபுண்ணுள்வடிவேலெறிந்திற்றதேபோல்
நாளூற்றுலந்தான்வெகுண்டானகரார்த்ததன்றே.

இ - ள். அலர்தாரவன் — மலர்ந்தமாலையை யணிந்த சீவகன், தோழ ரோடெும்—தனது தோழர்களோடும், ஆள் அற்றம் இன்றி (இரண்டுசேனை யாலும்) ஓராளுக்கும் குற்றமில்லாமல், கோவன்—நந்தகோபனுடைய, கோ ளுற்ற நிரைமீட்டனன் என்றுகூற (வேடரால்) கொள்ளப்பட்ட பசுக்களை மீட்டானென்று கண்டோர்கூற, வாள்உற்ற புண்உள்—(அதுகேட்டு) வாளா ற்பட்ட புண்ணில், வடிவேல் எறிந்து இற்றதுஏபோல்—வடித்தவேலாலெறி யப்பட்டு அதுமுறிந்துநின்றதுபோல, நாள்உற்று உலந்தான் வெகுண்டான் (தனக்குநியமித்த) ஆயுள் நாளூற்றுக்கெட்ட கட்டியங்காரன் கோபித்தான் நகர்ஆர்த்தது—நகரிலுள்ளார் மகிழ்கூர்ந்து கோஷித்தார்கள்.

ந - ரை. தாரவன், தோழருடனே இரண்டுபடையிலும் ஓராளுக்குங் குற்றமின்றாக நிரைமீட்டானென்றுகூற, அதுகேட்டு நாளூற்றுலந்தான் இற் றதுபோல வெகுண்டான், நகர் உவந்தார்த்தார் என்க.

தோழர்க்குப் போரில்லை யாறுலும் கூடநிற்றலால் வினையிலுடனிகழ்ச் சிப்பொருளில்வந்த ஒடுருபுதந்து தோழரோடுமெனவும், பசுமீட்டதற்குக் கோபித்தமையால் நாளூற்றுலந்தானெனக் கட்டியங்காரனுக்கு ஒருபெயர்க் காரணந்தோன்றவும், சீவகனரசுரிமையெய்து நாள்வந்துறுதலில் தனக்கு நிய மித்த நாளூற்றுலந்தவன் என்பதுதோன்றவும் நாளூற்றுலந்தானெனவுங்கூறி னார். உலந்தான் வினைமுதற் பொருள்மேல்நிற்றலால் வினைமுதற்பெயர் உல பகுதி. கோவன் நந்தகோவன் என்னும்பொருள்மேல் நிற்றலால் முன்மொ ழிகெட்ட பின்மொழிநிலையல். இதனை வடநூலார் நாமைகதேச நாமக்கிரக ணமென்பர். வேறு. (சஎ)

(48) இரவிதோய்கொடிகொண்மாடத்திடுபுகைதவழச்சுண்ணம்
விரவிப்பூந்தாமநாற்றிவிரைதெளித்தாரந்தாங்கி
அரவுயர்கொடியினுன்றனகன்படையனுங்கவென்ற
புரவித்தேர்க்காளையன்னகாளையைப்பொலிகவென்றார்.

இ - ள். இரவிதோய் கொடிகொள்மாடத்து — சூரியமண்டிலத்தைதய ளாவிய கொடிகட்டிய மாடத்தில், இடுசுண்ணம் புகைவழ—இட்ட சுண்ணத் தோடு கலந்தபுகை தவழாநிற்க, பூதாமம் விரவிநாற்றி—மலராற்றொடுத்த மா லையைக் கலந்துதொங்கவிட்டு. விரைதெளித்து—வாசனைத்திரவியங்களை யெ ங்குந்தெளித்து அலங்கரித்து, ஆரம்தாங்கி — தாமு முத்தமாலையையணிந்து, அரவுஉயர் கொடியினுன்தன் அகன்படை அனுங்கவென்ற—சர்ப்பக்கொடி யையுயர்த்திய துரியோதனனுடைய இடம்பரந்த சேனைகெடவென்ற, புரவி தேர்காளை அன்னகாளையை—குதிரைபூட்டிய தேரையுடைய அருச்சுனனை யொத்த சீவகனை, பொலிக என்றார்—என்றும் விளங்கக்கடவனென்று கற்பு டைமகளிர் வாழ்த்தினார்கள்.

ந - ரை. சீவகன் செல்லுகின்ற தெருவிலே கற்புடைமகளிர், மாடத் தே சுண்ணத்தோடே கலந்து புகைதவழாநிற்கத் தாமத்தைநாலப் பண்ணிவி

ளையையெங்குத்தெளித்து அதனையிங்ஙனங்கோடித்து. தாமுமங்கலமாக ஆரத்தையணிந்து, துரியோதனன்படை கெடும்படியென்ற அருச்சுநனையொத்த காளையைப்பொலிகவென்றார் என்க.

அஞ்ஞாதவாசஞ்செய்த பாண்டவர்கள் விராடனகரத்தில் கரந்து வாசஞ்செய்கின்றமை துரியோதனன்தெரிந்து,மீட்டும் அவர்க்குக்கேடுசூழப்படையெடுத்துச்சென்று பசுக்களைக்கவர அருச்சுநன் அவர்களைவென்று பசுக்களைமீட்டமையால் காளையன்ன காளையென்றார். நாற்றிவிரவி இறந்தகால வினையெச்சங்கள் நாற்று விரவுபகுதி. வில்லும் தேரும் பசுமீட்டலும் உவமையாதலால் ஒப்புமைக்கூட்ட வுவமையணி. (௪௮)

(49) இன்னமிர்தனையசெவ்வாயிளங்கிளிமழலையஞ்சொற்
பொன்னவிர்சுணங்குபூத்தபொங்கிளமுலையினார்தம்
மின்னவிர்நுசுப்புநோவவிடலையைக்காணவோடி
அன்னமுமயிலும்போல வணிநகர்வீதிகொண்டார்.

இ - ள். செவ்வாய்—செவந்தவாயினையும், இன்அமிர்து இளங்கிளி அனைய—இனிய அமிர்தத்தையும் இளங்கிளியையுமொத்த, மழலைஅம் சொல் பொன் அவிர்சுணங்குபூத்த—அழகிய மழலைச்சொல்லையும் பொற்பிதிர்போல விளங்கும் தேமல்பூத்த, பொங்கு இளமுலையினார்—விளங்கு மிளமைபொருந்திய தனங்களையுமுடைய மற்றைப்பெண்கள், தம்மின் அவிர்நுசுப்புநோவ விடலைஐகாணஓடி—தமது மின்னலையொத்த இடைவருந்தச் சீவகனைக்காணும்படியோடி, அன்னம்உம் மயில்உம்போல—அன்னமும் மயிலும்நிற்றல்போல அணிநகர் வீதிகொண்டார்—அலங்கரித்த இராசமாபுரத்தின் றெருவைக்கைக்கொண்டு நின்றார்கள்.

ந - ரை. செவ்வாயினையுஞ் சொல்லினையுமுடைய வளர்கின்ற இளையமுலையினார், விடலையைக்காண்பதாக நுசுப்புநோவவோடி, அன்னமுமயிலுநின்றாற்போல நகரிற்றெருவைக் கைக்கொண்டுநின்றார் என்க.

இங்கேகூறிய பெண்கள்கற்புடைமகளிரொழிந்தோராதலால் அணிநகர்வீதிகொண்டார் என்றார். விடலைபுருடர்பருவத்தின் மேல்நின்றது. அன்னமுமயிலும்போலக்கொண்டார் என்றது பலபொருளுவமையணி. (௪௯)

(50) நூல்பொரவரியநுண்மைநுசிப்பினையொசியவீங்கிக்
கால்பரந்திருந்தவெங்கட்கதிர்முலைகச்சின்வீக்கிக்
கோல்பொரச்செவந்தகோலமணிவிரற்கோதைதாங்கி
மேல்வரல்கருதிநின்றார்விண்ணவர்மகளிரொத்தார்.

இ - ள். நூல்பொரஅரிய—நூலெதிர்த்துப் போர்செய்தற்கரிய, நுண்மைநுசுப்பின்ஐ ஒசியவீங்கி — நுண்ணிய இடைதளரும்படி பருத்து, கால்பரந்து இருந்தவெம்கண்கதிர்முலை—அடிபரந்திருந்தவிரும்புஞ்சூசுகத்தையுடைய முத்தின்வடத்தி னொளிவாய்ந்ததனத்தை, கச்சுஇன்வீக்கி (அவ்விடைதளராதிருக்க) கச்சினாற்கட்டி, கோல்பொரசெவந்த கோலம்மணிவிரல்—நரம்பைத்தடவுதலால் செவப்பேறியஅழகிய விரலில், கோதைதாங்கி — மாலையையேந்தி, மேல்—மாடத்தின்மேல், வரல்கருதிநின்றார்—சீவகன்வரவைக்

கருதிநின்றபெண்கள், விண்ணவர் மகளிர்ஒத்தார்—தெய்வப்பெண்களை யொத்திருந்தனர்.

ந - ரை. இடைதளரும்படி வீங்கி அடிபரந்துதளராதிருந்த முலையைக்கச்சாற்கட்டி, விரலாற்கோதையைத்தாங்கிச் சீவகன்வரவைக்கருதி, இமையாதேபார்த்து மேனிலத்துநின்றவர் தெய்வமகளிரை யொத்தாரென்க.

பொர, ஒசிய காரியத்தின்மேல்நிற்றலால் எதிர்காலத்தில்வந்த செயவென்னும் வாய்பாட்டெச்சங்கள் பொரு, ஒசிபகுதிகள். செவந்த இறந்தகாலப் பெயரெச்சம் செவபகுதி. மகளிர் ஒருமைப்பாலில் பன்மைப்பால் வந்தவழுவமைதி மகபகுதி, ளகரமெய்பெண்பால்விகுதி, அனைத்தும்ஒருபகுதி, இர்புதியன புகுதலால்வந்த பலர்பால்விகுதி. இன்ஐ வேண்டாவழிச்சாரியை.

(51) வாளரந்துடைத்தவைவேலிரண்டுடன்மலைந்தவேபோல்
ஆள்வழக்கொழியநீண்டவணிமலர்த்தடங்கணெல்லாம்
நீள்சுடர்நெறியைநோக்குநிரையிதழ்நெருஞ்சிப்பூப்போல்
காளைதன்றேர்செல்வீதிகலந்துடன்றொக்கவன்றே.

இ - ள். வாள் அரம் துடைத்தவை வேல் இரண்டுஉடன் மலைந்தபோல்—வாளாகிய அரத்தாலராவினகூரிய இரண்டுவேல்கள்தம்முள்போர்செய்தனபோல, ஆள்வழக்கு ஒழியநீண்ட— ஆள்வழங்குதலறப் போர்செய்து நீண்ட, அணிமலர்தடகண்எல்லாம்—அழகிய தாமரை மலர்போலப்பரந்த கண்களெல்லாம், நீள்சுடர்நெறிஐ நோக்கும்— மிக்ககிரணத்தை யுடையசூரியன் செல்லு நெறியைநோக்காநின்ற, நிரைஇதழ்நெருஞ்சி பூபோல்—பத்தியாயுள்ளஇதழையுடைய நெருஞ்சிமலரைப்போல, காளைதன்தேர்செல்வீதி — சீவகனது தேர்செல்லும் வீதியில், கலந்துஉடன்தொக்க—தம்மிற்கலந்து சேரநெருங்கின.

ந - ரை. அராவின வேலிரண்டு தம்மில்மலைந்தனபோல ஆள்வழக்கமறமலைந்து நீண்டகண்ணெல்லாம் கொடுமைசெய்யமாட்டாது தம்மிற்கலந்து, ஞாயிறுபோநெறியை நோக்கும்பூப்போலே காளைதேர்செல்கின்ற வீதியிலே சேரநெருங்கின.

நெருஞ்சி முள்நெருங்குதலையுடைய தெனநிற்றலால் வினைமுதற்பொருளில்வந்த தொழிற்பெயர் நெருங்குபகுதி, உகரக்கேடுசந்தி, இவிகுதி. நெருங்கிநெருஞ்சியெனவந்தது மரூஉ. நெருஞ்சில் எனவரில், இல்புடைபெயர்ச்சிவிகுதியாகக்கொண்டுதொழிலாகு பெயரெனக்கொள்க. மலைந்த, தொக்க அஃறிணைப் பலவின்பாற்படர்க்கை யிறந்தகாலவினைமுற்றுகள் மலைபகுதி. தொகுபகுதி, முதனிலையெழுத்தாய்த்தோன்றி யககரமெய்இடைநிலை, உகரக்கேடுசந்தி, அவிகுதி. பூவினைமுதற்பொருளில்வந்த இகரவிகுதியொடு புணர்ந்துகுன்றிய தொழிற்பெயர். இதுஎடுத்துக் காட்டுவமையணி. அரம் வாளில் ஒருவகையதாதலால் அரம் விசேடம் என்றார். நெருஞ்சிமலரைப் போலப் பெண்கள் கண்கள் சீவகன்தேர் போதல்மேல் நின்றது என்பது கருத்து.

(52) வடகமுந் துகிலுந் தோடுமாலையுமணியுமுத்தும்
கடகமுங்குழையும்பூணுங்கதிரொளிகலந்துமூதூர்
இடவகையெல்லையெல்லாமின்னிரைத்திட்டதேபோல்
படவரவல்குலாரைப்பயந்தனமாடமெல்லாம்.

இ - ள். வடகம்உம் துகில்உம்— மேற்போர்வையும் ஆடையும், தோடுஉம் மாலைஉம் மணிஉம் முத்துஉம்—காதணியுமலர்மாலையும் இரத்தினாபரணமும்முத்தவடமும், கடகம்உம் குழைஉம் பூண்உம்—கடகங்களுங்குண்டலங்களும் ஆபரணங்களும், கதிர் ஒளிகலந்து — சந்திரசூரியர்களையொத்த ஒளிதம்மிற்கலக்கும்படி, மின்நிரைத் திட்டதுபோல்—மின்னலைநிரைத்தாற்போல, மூதூர்இடம்வகைஎல்லைஎல்லாம் — தொன்றுதொட்டுள்ள இராசமாபுரத்தினிடத்தின் கூறுபாட்டினெல்லையெல்லாவற்றிலுமுள்ள, மாடம்எல்லாம் — மாடங்களெல்லாம், அரவுபடம் அல்குலாரைபயந்தன — பாம்பின்படத்தையொத்த அல்குலையுடைய பெண்களைப்பெற்றன.

க - ரை. வடகமுதலியன ஒளிதம்மிற்கலக்கும்படி சிலமின்னைநிரைத்தாற்போல, மூதூரிடத்தினது கூறுபாட்டினெல்லையெல்லா வற்றினுமுள்ள மாடமெல்லாம் அல்குலாரைப் பெற்றனவென்க.

வடகம் அத்தவாளம். வகைகூறுந்தெருவு. கலந்து செயவெனெச்சத்திரிபு. வடகமுதலியன ஒளிவீச மின்னலை வரிசைப்படுத்தியதுபோல மாடங்கள்மேற் பெண்கள்நின்றார் என்பதுகருத்து.

(53) மாதுகுமயிலினல்லார்மங்கலமரபுகூறிப்
போதகநம்பியென்பார்பூமியும்புணர்கவென்பார்
தோதகமாகவெங்குஞ்சுண்ணமேற்சொரிந்துதண்ணெண்
தாதுகுபிணையல்வீசிச்சாந்துகொண்டெறிந்துநிற்பார்.

இ - ள். மாதுஉகு மயிலின்நல்லார்—ஆசைமிக்க மயிலைப்பார்க்கிலும் பொலிவுவாய்ந்தபெண்கள், மங்கலமரபுகூறி— மங்கலவாழ்த்துக்கூறி, நம்பி போதகஎன்பார் — ஆணிற்சிறந்தவனே வருகவென்பாரும், பூமிஉம் புணர்க என்பார்— (அரசனென்றறியாதிருந்தும்) நிலமாதினையும் சேரக்கடவாயென்பாரும், தோதகம்ஆக—வருத்தமிக, எங்கும் மேல்—எவ்விடத்து மாடத்தின் மேல்நின்று, சுண்ணம்சொரிந்து—சுண்ணப்பொடியைச்சிந்தி, தண்ணென்தாது உகுபிணையல்வீசி—குளிர்ந்தமகரந்தத்தைச் சிந்துமலர்மாலையைவீசி, சாந்துகொண்டு எறிந்துநிற்பார் — கலவையைக்கொண்டு தெளித்து நிற்பவரும்.

போதக "திருவேபுகுதக" என்றார்போலவந்தது. போதுகஎன்பது பொருள்.

(54) கொடையுளுமொருவன்கொல்லுங்கூற்றினுங்கொடியவாட்போர்ப்
படையுளுமொருவனென்றுபயங்கெழுபனுவனுண்ணூல்
நடையுளார்சொல்லிற்றெல்லாநம்பிச்சீவகன்கட்கண்டாந்
தொடையலங்கோதையென்றுசொல்லுபுதொழுதுநிற்பார்.

இ - ள். அம்தொடையல்கோதை—அழகியமாலையையணிந்த கூந்தலையுடையாய், கொடையுள்உம் ஒருவன் — கொடுத்தற்றொழிலிலும் ஒருவனே

கொடுப்பான், கொல்லும் கூற்றினும் கொடிய—கொல்லாநின்ற இயமனைப் பார்க்கிலும் கொடிய, வாள்போர் படையுள்ளும் ஒருவன்என்று—வாளேந்திச்செய்யும்போர்த்தொழிலில் வல்லசேனையிலும் ஒருவனே வெல்வானென்று, பயம்கெழு நுண்பனுவல்—பிரயோசனமிக்க ஆராய்ச்சியையுடைய நுண்ணிய பொருளமைந்த, நூல்நடைஉள்ளார்சொல்லிற்றுஎல்லாம்—நூலினொழுக்கமுடையவர்சொல்லியதையெல்லாம், நம்பிசீவகன்கண்கண்டாம்என்று — இவ்விரண்டும் ஒருவனிடத்து நில்லாவாயினும் நம்பியாகிய சீவகனிடத்திற்பார்த்தோம் என்று, சொல்லுபுதொழுதுநிற்பார்—சொல்லித்தொழுதுநிற்பவரும்.

க - ரை. கோதாய், நுண்ணூல் வல்லார்கூறிற்று, கொடையிலுமொருவன்கொடுப்பான், படையிலுமொருவன்வெல்வான், இரண்டுமொருவனிடத்தேநில்லாவென்றேயாயினும், அவ்விரண்டுஞ் சீவகனிடத்தே கண்டாமென்று தம்மிற்கூறி அவனைத்தொழுதுநிற்பவரும்.

உம்மை இரண்டும் உயர்வுசிறப்புப்பொருளன, ஒன்றல்லனவெல்லாம் பலவாதலால் இரண்டினைஎல்லாம் என்றார். சொல்லிற்றெல்லாம் ஒருமைபன்மைமயக்கம். நம்பிச்சீவகன்இருபெயரொட்டுப்பண்புத்தொகைநிலைத்தொடராதலால்வருமொழிமுதல்வல்லெழுத்துமிகுதல் "இயல்பினும்விதியினுநின்றவுயிர்முன்" என்றசூ-ஆல். இன்உருபு உயர்வுகுறித்தலில்வந்தஎல்லைப்பொருட்டு. கோதை அண்மைவிளி. தொழிலுக்குந்தொழிலிக்குமொற்றுமையுண்மையால்தொழிலைத்தொழிலிமேலேற்றிட்பனுவனூல்எனவும்,குணத்துக்குங்குணிக்கும் ஒற்றுமையுண்மையால்குணத்தைக்குணிமேலேற்றி நுண்ணூல் எனவுங்கூறினார்.கொடையைக்கன்னனிடத்தும்வெற்றியையருச்சுனனிடத்துங்கொள்க.

(55) செம்மலைப்பயந்தநற்றாய்செய்தவமுடையளென்பார்
எம்மலைத்தவஞ்செய்தாள்கொலெய்துவம்யாமுமென்பார்.
அம்முலையமுதமன்னாரகம்புலர்ந்தயர்ந்துநோக்கித்
தம்முறுவிழுமவெந்நோய்தந்துணைக்குரைத்துநிற்பார்.

இ - ள். செம்மலைபயந்தநற்றாய்— பெருமையிற் சிறந்தசீவகனைப்பெற்றநற்றாயானவள், செய்தவம் உடையள் என்பார்—செய்தவமுடையாளென்பவரும், எமலைதவம்செய்தாள்கொல் — (இவனையடையவிருக்கின்றவள்) எந்தமலையிலிருந்து தவஞ்செய்தாளோ, யாம்உம் எய்துவம் என்பார்—நாமுந்தவஞ்செய்ய அம்மலையையடைவோமென்பவரும், அமுலை அமுதம் அன்னார் அகம்புலர்ந்து — அழகியதனத்தையுடைய அமுதத்தையொத்த பெண்கள்நெஞ்சுலர்ந்து, அயர்ந்துநோக்கி—சோர்ந்துபார்த்து, தம்உறுவிழுமம்வெம்நோய்—தம்முடையமிக்ககாமநோயை, தம்துணைக்கு உரைத்துநிற்பார் — தமதுதோழிக்குச்சொல்லிநிற்பவரும்.

க - ரை. இவனைப் பயந்தமையாற் றவமுடைய ளென்பாரும், இவனைப்பெறவிருக்கின்றவள் எம்மலையில் நின்று தவஞ்செய்தாள் யாமும் அதனைச் சேர்வேமென்பாரும், நெஞ்சுலர்ந்து தம்முடையமிக்க சீரியகாமநோயைத்தந் தோழியர்க்குக் கூறிநிற்பாரும்.

தவஞ்செய்தார்கொல் எனவும் பாடம். கொல்ஐயப்பொருளில்வந்தஇ

டைச்சொல். எய்துவம் தன்மைப்பன்மை யெதிர்காலவினைமுற்று எய்துபகுதி, வகரமெய்இடைநிலை, அம்விகுதி. குற்றியலுகரங் கெடாதியல்பாதல் "உயிர்வரினுக்குறள்" என்னுஞ்சூ — இல் "ஓடும்" என்றஇலேசால். அகம்புலர்ந்து உயர்திணையொடுசோர்ந்த அஃறிணையுயர்திணை முடிபேற்று நின்றது திணைவழுவமைதி, புலர்ந்து, அயர்ந்து, நோக்கி, உரைத்துஎன்னும் இறந்தகாலவினையெச்சங்கள் ஒன்றனையொன்று கொண்டுநிற்பார் என்னும் வினைமுற்றின் முதனிலைகொண்டன. அம்முலை யமுதமன்னார் இல்பொருளுவமையணி.

(56) சினவுநர்க்கடந்தசெல்வன்செம்மலரகலநாளைக்
கனவினிலருளிவந்துகாட்டியாங்காணவென்பார்
மனவிரியல்குலார்தம்மனத்தொடுமயங்கியொன்றும்
வினவுநரின்றிநின்றுவேண்டுவகூறுவாரும்.

இ - ள். மனவிரி அல்குலார் — இரத்தினமழுத்தியமேகலையையணிந்த பெண்கள், சினவுநர்கடந்தசெல்வன் —கோபிக்கும்பகையரசரைவென்றபோர்ச்செல்வத்தையுடைய சீவகனே, அருளி— இன்று எம்மைக்காத்து, நாளை— நாளைத்தினம், செம்மலர் அகலம்கனவின் இல்வந்து—செவந்தமலராகிய மாலையையணிந்த மார்பினைக்கனவில்வந்து, யாம்காணகாட்டி என்பார்—யாங்காணக் காட்டுவாயாக வென்பவரும், ஒன்றுஉம் வினவுநர் இன்றி — ஒன்றுந் தம்மைவினவுவோரில்லாமையால்; மயங்கிநின்று— மயக்கங்கொண்டுநின்று, தம்மனத்து ஒடுவேண்டுவகூறுவார்உம்—தமது மனத்தோடு அவனிடத்து விரும்பும் நுகர்ச்சிகளைச் சொல்லுகின்றவர்களும்.

ந - ரை. செல்வனே எம்மையருளி நாளைக்கனவிடத்தேவந்துநின்னகலத்தையாங்காணக் காட்டுவாயாகவென்பாரும், தாங்கூறுவனவொன்றுகேட்பாரின்றாகவுமயங்கிநின்று தாமிவனிடத்து விரும்புநுகர்ச்சிகளைத் தம்மனத்தோடு கூறுவாரும்.

சினவுநர், வினவுநர் எதிர்கால வினைமுற்றுப்பெயர் சினவு, வினவுபகுதிகள், நகரமெய் இடைநிலை, அர்விகுதி. இன் உருபிற்கு இன்சாரியையில்லாமையால் கனவினில் எனப்பாடங்கொள்க. செல்வன் அண்மைவிளி. காட்டிவியங்கோள் வினைமுற்று காட்டுபகுதி, உகரக்கேடுசந்தி, இவியங்கோள் விகுதி. (௫௬)

(57) விண்ணகத்துளர்கொல்மற்றிவ்வென்றிவேற்குரிசிலொப்பார்
மண்ணகத்திவர்களொவ்வார்மழகளிறனையதோன்றல்
பண்ணகத்துறையுஞ்சொல்லார்நன்னலம்பருகவேண்டி
அண்ணலைத்தவத்திற்றந்தார்யார்கொலோவளியரென்பார்.

இ - ள். மழகளிறு அனையதோன்றல்—இளமைதங்கிய யானையையொத்த இச்சீவகனை, மண் அகத்து இவர்கள் ஒவ்வார்—மண்ணுலகிலுள்ள இம்மனிதர்களொப்பாகாராதலால், இவென்றிவேல் குரிசில் ஒப்பார்—இந்தவெற்றியமைந்த வேலையேந்திய பெருமையிற் சிறந்தவனையொப்பவர்; விண் அகத்து உளர்கொல்மற்று—தேவருலகிலிருக்கின்றாரோ இல்லை, பண் அகத்து உறை

யும் சொல்லார்—இசையில் குடிகொண்ட சொல்லையுடைய பெண்கள், நல்நலம்பருகவேண்டி—இவ்வுலகிலில்லாத தோரின்பத்தைநுகர விரும்பி, அண்ணலேதவத்துஇல்தந்தார்—இந்த அண்ணலைத்தவத்தாற் பெற்றவர்கள், யார்கொல்ஓ—தேவரோமக்களோயாரோ, அளியர் என்பார்—அவரே எல்லாராலுங்காக்கத்தக்கவர் என்பாரும்.

ந - ரை. தோன்றலை மண்ணிடத்து இம்மக்களொவ்வாராதலாற் பின்னையிக்குரிசிலையொப்பார் விண்ணகத்துளரோ, அஃதறிகின்றிலேமென்பாரும், இவ்வுலகின் மகளிர் ஈங்கில்லாத தொருநலத்தை நுகரவெண்டி இவ்வண்ணலைத் தாஞ்செய்ததவத்தாற் றந்தவர் தேவரோ மக்களோ அவர் யாவராயினும் எல்லாராலு மளிக்கத்தக்கார் என்பாருமாய்.

அண்ணல் பெருமையிற்சிறந்தோன். அதன்முதலில் அகரச்சுட்டுத்தொகுத்தல். மற்று இல்லையென்னும் பொருள்மேல்நிற்றலால் வினைமாற்றுப்பொருளில்வந்தது. ஒப்பார் உடன்பாட்டில்வந்த உவமவுருபிடைச் சொல்லடியாகப்பிறந்த வினைமுற்றுப்பெயர்ஒ இடைச்சொற்பகுதி, பகரம்சந்தி, பகரமெய் இடைநிலை, ஆர்விகுதி. ஒவ்வார் எதிர்மறையில்வந்த உவமவுருபிடைச்சொல்லடியாகப்பிறந்த எதிர்மறைவினைமுற்றுஒ இடைச்சொற்பகுதி, வகரமெய்சந்தி, ஆஎதிர்மறைவிகுதி, தனிக்குறின்முன் ஒற்றுமிகுதல்சந்தி,அனைத்தும் ஒருபகுதி. முதற்குறையாய்நின்ற ஆர்பலர்பால்விகுதி. (௫௭)

(58) வட்டுடைப்பொலிந்ததானைவள்ளலைக்கண்டபோழ்தே
பட்டுடைசூழ்ந்தகாசுபஞ்சிமெல்லடியைச்சூழ
அட்டரக்கனையசெவ்வாயணிநலங்கருகிக்காமக்
கட்டழலெறிப்பநின்றார்கைவளைகழலநின்றார்.

இ - ள். வட்டுடைபொலிந்ததானை வள்ளலைகண்டபோழ்துஏ—வட்டுடையால்விளங்கிய காலாட்படையையுடைய சீவகனைக்கண்டகாலத்தே, பட்டுஉடைசூழ்ந்தகாசு—பட்டாடைமேற்சூழ்ந்த மேகலை, பஞ்சிமெல் அடியைசூழ—செம்பஞ்சுக்குழம்பூட்டிய மெல்லியகாலைச்சூழ, காமம்கட்டழல் எறிப்ப—காமத்தீயெரிய, அட்ட அரக்கு அனையசெவ்வாய் அணிநலம் கருகிநின்றார்—உருக்கிய அரக்கினையொத்த செவந்தவாயின் அழகுகருகிநின்றவர்கள், கைவளைகழலநின்றார்—கையிலணிந்தவளை சோரநின்றார்கள்.

ந - ரை. வள்ளலைக்கண்டபொழுதே காமத்தீயெரியவாய்கருகிநின்றவர்கள்பின்பு, மேகலைகழலவளை கழலநின்றார் என்க.

வட்டுடைமுழந்தாளளவும் வீரருடுக்கும் உடை. மாதுகு என்னுஞ் செய்யுள்முதல் இச்செய்யுள்காறும் ஒருதொடராதலால் மேலைச்செய்யுளின்கடையில் ஆய் என்னும் வினையெச்சந்தந்துருகின்றார் என்பதுகொண்டுமுடியநிற்றலால் குளகம். அட்டபெயரெச்சத்தி னீறுதொகுத்தல். (௫௮)

(59) வார்செலச்செல்லவிம்முவரிமுலைமகளிர்நோக்கி
ஏர்செலச்செல்லவேத்தித்தொழுதுதோகைக்கவிப்பாற்
பார்செலச்செல்லச்சிந்திப்பைந்தொடிசொரிந்தநம்பன்
தேர்செலச்செல்லும்வீதிபீர்செலச்செல்லுமன்றே.

இ - ள். நம்பன்தேர்செல இபால்வார்செல செல்லவிம்முவரிமுலைமகளிர் நோக்கி—சீவகன்தேர்செல்லுதலால் இப்புறம் கச்சுமேலேபோகப் போகவிம் மாநின்றசந்தனக்கோலமமைந்த தனத்தையுடைய பெண்கள் தேர்மறையுமளவும்பார்த்து, ஏர்செலசெல்ல—அழகுகழியாநிற்கக் கழியாநிற்க, ஏத்திதொழுது தோள்தூக்க — கைகூப்பித்தொழுது தோளைத்தொங்கவிட, பைந்தொடிபார் செல்ல செல்ல சிந்திசொரிந்த (அத்தோள்கள்) பசியதொடிகள் நிலத்திலேசெல்லும்படி செல்லும்படி சிதறிச்சொரிந்தன, செல்லும் வீதியீர்செல செல்லும்—(பின்பு அவனதுதேர்) செல்லும் வீதியில் (அப்பெண்களுக்கு) பசலைபரக்கச் செல்லாநிற்கும்.

ந - ரை. நம்பன்தேர் செல்லுதலாலே யிப்பாலுள்ள மகளிர், மறையுமளவுநோக்கிநின்று அழகுபோகா நிற்கப்போகாநிற்க ஏத்தித்தொழுது தோளைநாற்ற, அத்தோள்கள் செருகிக்சாத்தற்குரிய தொடிகளையுஞ் சொரிந்தன, பின்பு அவனதுதேர் செல்கின்றவீதியின் மகளிர்க்குப் பசப்புப்பரக்கத் தான் செல்லாநிற்குமென்க.

தொடிவளையலில் ஒருவகை. தொடுக்கப்படுவது என்னும் பொருள்மேல் நிற்றலால் செயப்படுபொருளில்வந்த தொழிற்பெயர் தொடுபகுதி, உகரக்கேடு சந்தி, இவிகுதி. வார்செலச்செல்ல மிகுதிப்பொருளில்வந்த அடுக்கு. ஏர்செலச்செல்ல, பார்செலச்செல்ல அவலப்பொருளில்வந்த அடுக்கு. ஏத்தி, தொழுது இறந்தகாலவினையெச்சங்கள் ஏத்து, தொழுபகுதிகள். (௫௯)

(60) வாண்முகத்தலர்ந்தபோலுமழைமலர்த்தடங்கண்கோட்டித்
தோண்முதற்பசலைதீரத்தோன்றலைப்பருகுவார்போல்
நாண்முதற்பாசந்தட்பநடுங்கினார்நிற்பநில்லான்
கோண்முகப்புலியோடொப்பான்கொழுநிதிப்புரிசைபுக்கான்.

இ - ள். தோள்முதல் பசலைதீர—(பெண்கள்) தமது தோளிடத்துப்பசப்புநீங்க, தோன்றலைபருகுவார்போல், சீவகனைப்பருகுவாரைப்போல, வாள்முகத்து அலர்ந்தமலர்போலும் மழைதட கண்கோட்டி—ஒளியமைந்த முகத்தில்மலர்ந்த மலரையொத்த குளிர்ந்த பரந்தகண்களைவளைத்துப்பார்த்து, நாண்முதல்பாசம்தட்ப—நாணுகிய முதற்றளைதடுத்தலால், நடுங்கினார்நிற்ப—நடுங்கிநிற்க, கோள்முகம்புலியோடு ஒப்பான்நில்லான் — கொலைத்தொழிலமைந்த முகத்தையுடைய புலியையொத்த அச்சீவகனில்லாது, கொழுநிதி புரிசைபுக்கான்—பெருஞ்செல்வம்வாய்ந்த மதிலுக்குள்ளே புகுந்தான்.

ந - ரை. அங்ஙனம் பசந்தவர்தம் தோளிற் பசலைதீரும்படி, தோன்றலைப்பருகுவார்போலே கண்ணாலேவளைத்துப்பார்த்து நடுங்கினராய் நாணாகிய முதற்றளைதடுத்தலாலேசெல்லமாட்டாதுநிற்ப, தான்நில்லானுய்க்கொல்லுமுகத்தையுடைய புலிபோல்வான்புரிசைக்குள்ளே புகுந்தான என்க.

பெண்களுக்குரிய நான்குகுணத்துள் நாணமுதற்குணமாதலால் நாண்முதற்பாசம் எனவும், வீட்டைச்சூழ்ந்த மதிலாதலால் கொழுநிதிப்புரிசை யெனவுங்கூறினார். தோள்முதல் என்றதில் முதல்இடம். நடுங்கினர், நில்லான் முற்றெச்சங்கள். கோட்டி இறந்தகாலவினையெச்சம் கோட்டுபகுதி. புக்கான்

இறந்தகாலவினைமுற்று புகுபகுதி, முதனிலையெழுத்தாய்த்தோன்றியககரமெய்இடைநிலை, உகரக்கேடுசந்தி, ஆன்விகுதி. (௬௦)

(61) பொன்னுகம்புரவிபூட்டுவிட்டுடன்பந்திபுக்க
மன்னுகவென்றியென்றுமணிவள்ளநிறையவாக்கி
இன்மதுப்பலியும்பூவுஞ்சாந்தமும்விளக்குமேந்தி
மின்னுகுசெம்பொற்கொட்டில்விளங்குதேர்புக்கதன்றே.

இ - ள். புரவிபொன்நுகம் பூட்டுவிட்டு உடன்பந்திபுக்க—குதிரைகள் பொன்னாற்செய்தநுகத்தினது பூட்டுதலைவிட்டு விரைந்துபந்தியிற் புகுந்தன, இன்மது மணிவள்ளம் நிறையவாக்கி (தேருக்கு) இனியமதுவினை அழகிய வட்டில் நிறையவார்த்து, பலிஉம் பூஉம் சாந்தம்உம் விளக்குஉம் — அம்மதுவாகிய பலியையும் பூவையுஞ் சந்தனத்தையும் விளக்கையும், வென்றிமன்னுக என்று ஏந்தி—எப்பொழுதும் வெற்றிபெறுகவென்றேந்த, விளங்குதேர்—விளங்காநின்றதேர், மின்உகு செம்பொன்கொட்டில் புக்கது—ஒளிவீசும் செவந்தபொன்னாலாகிய கொட்டிலிற் புகுந்தது.

ந - ரை. புரவிநுகம் பூட்டுதல்விட்டுப் பந்தியிலே புக்கன, பின்பு தேருக்கு மதுவைவட்டி னிறையவார்த்து, அம்மதுவாகிய பலிமுதலியவற்றைவென்றிமன்னுகவென்றேந்த, அத்தேர் மகிழ்ந்து கொட்டிலிலேபுக்கதென்க.

பூட்டுமுதனிலைத் தொழிற்பெயர். ஏந்திசெயவெனெச்சத்திரிபு. வாக்கி இறந்தகாலவினையெச்சம் வாக்குபகுதி. (௬௧)

(62) இட்டவுத்தரியமெல்லென்றிடைசுவல்வருத்தவொல்கி
அட்டமங்கலமுமேந்தியாயிரத்தெண்மரீண்டிப்
பட்டமுங்குழையுமின்னப்பல்கலனொலிப்பச்சூழ்ந்து
மட்டவிழ்கோதைமார்பின்மைந்தனைக்கொண்டுபுக்கார்.

இ - ள். ஆயிரத்தெண்மர் ஈண்டி— ஆயிரத்தெட்டுச் சுமங்கலப்பெண்கள் நெருங்கி, அட்டமங்கலம்உம் ஏந்தி—எட்டுமங்கலங்களையுமேந்தி, பட்டம்உம் குழைஉம்மின்ன—நெற்றிப்பட்டமுங் குண்டலமும் விளங்கவும், பல்கலன்ஒலிப்ப—பலஆபரணங்களுமொலிக்கவும், இட்ட உத்தரியம் மெல்லென்ற இடைசுவல்வருத்த—மேலேயிட்ட உத்தரியமானது மிருதுவாகிய இடையையும் பிடரியையும் வருத்தவும், மட்டு அவிழ்கோதைமார்பு இன்மைந்தனை—வாசனையோடலர்ந்தமலர் மாலையையணிந்த மார்பினையுடைய சீவகனை, ஒல்கிசூழ்ந்துகொண்டுபுக்கார் — எதிர்கொண்டு சூழ்ந்து வீட்டுள்ளே கொண்டு புகுந்தார்.

ந - ரை. ஆயிரத்தெண்மரீண்டியெட்டு மங்கலத்தையுமேந்தி, மின்ன, ஒலிப்ப, உத்தரியம் இடையையுஞ் சுவலையும்வருத்த எதிர்கொண்டு சூழ்ந்து மைந்தனையுள்ளேகொண்டுபுக்கார் என்க.

அட்டமங்கலங்கள்ஆவன சாமரை, தீபம், பொற்குடம், இணைக்கயல், கண்ணாடி, தோட்டி, கொடி, முரசு "சாமரைதீபந்த பனியப்பொற்குடம்—காமர்கயலினிணைமுதலாத்—தேமருவு—கண்ணாடிதோட்டி கதலிகைவெண்முரசம்—எண்ணிய மங்கலங்களெட்டு" என்பதனால் உணர்க. இணைக்கயல்,

முரசு, தீபம்,தோட்டி இவைகளை ஒழித்துச் சீவற்சம, சுவத்திகம், சங்கு, இடபம் இவற்றைக்கூட்டி எட்டென்பாரும் உண்டு. ஒல்கி இறந்தகாலவினையெச்சம். ஒல்குபகுதி. ஆயிரத்தெண்மர் ஆயிரவரும் எண்மரும் உம்மைத்தொகைநிலைத்தொடர். எண்மர் என்றதில் மகரம்பெயரிடைநிலை. முதல்சினைக்கொற்றுமையுண்மையால் சினைவினையைமுதல் மேலேற்றி மட்ட விழ்கோதையென்றார். மெல்லென்ற பெயரெச்சத்தி னீறுதொகுத்தல். (௬௨)

(63) தாயுயர்மிக்கதந்தைவந்தெதிர்கொண்டுபுக்குக்
காய்கதிர்மணிசெய்வெள்வேற்காளையைக்காவலோம்பி
ஆய்கதிருமிழும்பைம்பூணாயிரச்செங்கணான்றன்
சேயுயருலகமெய்தியன்னதோர்செல்வமுற்றார்.

இ - ள். தாய்உயர்மிக்க தந்தைவந்து எதிர்கொண்டுபுக்கு—தாயும்தன் பிள்ளையுயர்ச்சிமிகுதற்குக் காரணமானதந்தையும்வந்து எதிர்கொண்டுபுகுந்து' கதிர்காய் மணிசெய்வெள் வேல்காளையை—ஒளிவீசுங்கடைமணியையுடைய நிணந்தோய்ந்த வேலினையேந்திய சீவகனை, காவல்ஓம்பி — ஆலத்தி முதலியவற்றாற் கண்ணெச்சில்போக்கி, கதிர் உமிழும் ஆய்பைம்பூண்—ஒளியுமிழும் ஆராய்ந்தபசிய ஆபரணத்தையணிந்த, ஆயிரச்செங்கணான் தன் சேய்உயர் உலகம் எய்தியன்னது ஓர்செல்வம் உற்றார்—இந்திரனுடைய சேய்மையிலுள்ள உயர்ந்த விண்ணுலகத்தைப் பெற்றாலொத்ததொரு செல்வத்தை யடைந்தார்கள்.

ந - ரை. தாயுந்தந்தையும் பிள்ளையையெதிர்கொண்டுபுக்கு, ஆலத்திமுதலியவற்றாலே பரிகரித்து, உலகைப் பெற்றாலொத்ததோர் செல்வத்தைத் தாம் உற்றார் என்க.

சேய்மைதூரம். காவலோம்பி ஒருசொல். கதிருமிழும் வீசுதலேயன்றிஉமிழ்தலில்லாமையாற் குணவணி. எய்தியன்னது தொகுத்தல்விகாரம்.()

(64) தகைமதியெழிலைவாட்டுந்தாமரைப்பூவினங்கட்
புகைநுதியழலவாட்கட்பொன்னனாள்புல்லநீண்ட
வகைமலிவரைசெய்மார்பின்வள்ளலைக்கண்டுவண்டார்த்
தொகைமலிதொறுவையாளுந்தோன்றன்மற்றின்னகூறும்.

இ - ள். தகைமதி எழிலைவாட்டும் — பொலிவமைந்த சந்திரனுக்குத் தன்பொலிவுகெடாமல் அதன்பொலிவைக்கெடுக்கும், தாமரைபூவின் அங்கண்நுதி அழலபுகைவாள்கண் பொன்அன்னாள் — தாமரைமலரின்கண் வசிக்கும் நுனியில்நெருப்பெழப்புகையும் வாள்போன்ற கண்களையுடைய இலட்சுமி, புல்லநீண்டவகை மலிவரைசெய் மார்பின்வள்ளலைகண்டு—பொருந்தப் பருத்தபொருளின் பகுதிநிறைந்த மலையையொத்த மார்பினையுடைய சீவகனைப்பார்த்து, வண்தார்தொகை மலிதொறுவை ஆளும்தோன்றல்— செழித்தமுல்லைமலர் மாலையையணிந்த கூட்டமிக்க பசுக்களையாளும் நந்தகோன், இன்னகூறும்—இத்தன்மையாகிய சொற்களைக்கூறுவான்.

ந - ரை. தான்மதிக்குக்கெடாதே மதியைத்தான்கெடுக்கும் பொற்றாமரையிற் றிருப்பொருந்தும்படி பெருத்தமார்பினையுடைய வள்ளலைக்கண்டு

சிலமொழிகளைக் கூறுநிற்கும் கிளையையாளும் வண்டாரை யுடைய நந்த கோன் என்க.

வலைஎன்றது மலைபடுதிரவியங்களை. சந்திரனைக்கண்டு தாமரைகுவிதலால் இதுதெய்வத்தன்மையதென்பார் தகைமதியெழிலைவாட்டு மெனக்கூறினார். மற்றுஅசைநிலை. இன்னபண்பின்மேல்நின்ற சுட்டடியாகப்பிறந்த குறிப்புவினைமுற்றுப்பெயர். இசுட்டிடைச் சொற்பகுதி, னகரமெய்விரித்தல்விகாரம், னகரமெய்சந்தி, அவிகுதி.

(65) கேட்டிதுமறக்கநம்பிகேண்முதற்கேடுசூழ்ந்த
நாட்டிறைவிசயையென்னுநாறுபூங்கொம்பனாளை
வேட்டிறைபாரமெல்லாங்கட்டியங்காரன்றன்னைப்
பூட்டிமற்றவன்றனாலேபொறிமுதலடர்க்கப்பட்டான்.

இ - ள். நம்பிஇது கேட்டுமறக்க— ஆண்பிற்சிறவனே இதனைக்கேட்டுமறப்பாயாக. இன்னகேள்—இத்தன்மையையுடைய இரண்டுமொழிகளைக்கேளாய், விசயைஎன்னும்நாறுபூங்கொம்பு அன்னாளை—விசயையென்னு மணங்கமழும்பூங்கொம்பையொத்தவளை, வேட்டு—கல்லியாணஞ்செய்து. முதல்நாடு கேடு சூழ்ந்தஇறை—தனக்குமுன்னே நாட்டிற்குக் கெடுதிசூழ்ந்த சச்சந்தன், இறைபாரம்எல்லாம் கட்டியங்காரன் தன்னைப்பூட்டி— அரசியற் பாரத்தையெல்லாம் கட்டியங்காரனுக்குப்பூட்டி, அவன்தன் ஆல்பொறிமுதல் அடர்க்கப்பட்டான்—அக்கட்டியங்காரனால் உயிரைப்போக்கப் பட்டானாயினான்.

ந - ரை. வள்ளலைக்கண்டு கூறுந்தோன்றல், நம்பி, இதனைக்கேட்டுமறப்பாயாக, பின்னை இன்னகேட்பாயாக அவ்விரண்டும்யாவையென்னின், கொம்பனாளைவிரும்பிப் பல்லுயிரைக் காக்கின்றபாரத்தை யெல்லாங் கட்டியங்காரனைப்பூட்டி, தனக்குமுன்னே நாட்டிற்குக் கேடுசூழ்ந்தஇறை அவனாலேயுயிரைப்போக்கப்பட்டான் என்க.

இரண்டுமொழிகளாதலால்முன்பாட்டில் இன்னவென்னும்பன்மைப்பாற்சொல்லைக் கூட்டிக்கேள்எனவும், இருவினையையுஞ் செய்தற்குக்காரணமானவுயிர் ஆதலால் உயிரைப்பொறி முதலெனவுங்கூறினார். வேட்டு இறந்தகாலவினையெச்சம் வேள்பகுதி. மறக்கவியங்கோள்வினைமுற்று மறபகுதி, ககரமெய்சந்தி, கவிகுதி. எல்லாவுருபோடும் நான்காம்வேற்றுமையுருபு வருதலால்கட்டியங்காரன்றன்னைப்பூட்டியென இரண்டனுருபுதந்தார் "எல்லாவுருபொடுங்கொள்வோனெழுமே" என்பதுசூத்திரம் "செய்யவள்தவ்வையைக்காட்டிவிடும்" என்பதனால்அறிக. பொறிமுதல் என்றது தொல்காப்பியம் சொல்லதிகாரம் வேற்றுமை மயங்கியல் "வினையேசெய்வது" உகூ-ம்சூ — இல் "தொழின்முதனிலையே" என்றாற்போலவந்ததுஎன்றார். தொழின்முதனிலை என்றதற்குத் தொழிலைக்காரியத்திற்கு முன்னிற்குங் காரணம்என்பதுபொருள், அதுபோல இருவினையாகிய காரியங்களைச் செய்தற்குக் காரணமாய் உயிர்முன்னிற்றலால். அவன்றனால் பொறிமுதலடர்க்கப் பட்டான் செயப்படுபொருளால் முடிந்தமுடிபில் அவன்றனால் என்னும் மூன்றாம்வேற்றுமை வினைமுதலின் பயனிலையாகிய அடர்க்கவென்னும் வினையெச்சம் சச்சந்தனென்னும்

செயப்படுபொருளின் முடிபாகிய பட்டான் என்னும் வினைமுதலின் முடிபாகிய பயனிலையின் முதனிலையைக் கொண்டது. மற்றென்னும் இடைச்சொல்காத்தல் என்னும் வினையைமாற்றி நிற்றலால் வினைமாற்றுப் பொருளில்வந்தது. (சுரு)

(66) கோலிழுக்குற்றஞான்றேகொடுமுடிவரையொன்றேறிக்
காலிழுக்குற்றுவீழ்ந்தென்கருந்தலைகழியலுற்றேன்
மால்வழியுளதன்றாயின்வாழ்வினைமுடிப்பலென்றே
ஆலம்வித்தனையதெண்ணியழிவினுள்அகன்றுநின்றேன்.

இ - ள். கோல்இழுக்கு உற்றஞான்றுஎ—சச்சந்தன்செங்கோல்ஒழியக் கொடுங்கோல் தலையெடுத்த அப்பொழுதே, கொடுமுடிவரை ஒன்றுஏறி—சிகரத்தையுடைய மலையொன்றிலேறி, கால்இழுக்கு உற்றுவீழ்ந்து—காலோடி வீழ்ந்து, என்கருந்தலைகழியலுற்றேன்—எனதுஇழிந்ததலைசிதற உயிர்போக்கத்தொடங்கியயான், மால்வழி—திருமால்போன்றஅச்சச்சந்தன்வழியே, ஆலம்வித்துஅனையது—ஆலம்வித்தைப் போலத்தெறித்து மறைந்துபோய்த்தோன்றும் பிள்ளையொன்று, உளது அன்றுஆயின்—தோன்றுவதில்லையானால், வாழ்வின்ஐ முடிப்பல்என்று எண்ணி—உயிரைமுடிப்பேனென்றுகருதி, அழிவின்உள் அகன்றுநின்றேன்—வருத்தத்தில்மேம்பட்டுநின்றேன்.

க - ரை. அவனாலு யிரைப்போக்கப்பட்ட அன்றேவரையேறி வீழ்ந்து உயிரைப்போக்கலுற்றயான், மால்வழி ஆலம்வித்துப்போலத் தெறித்துப்போய்மறைந்து பின்தோன்றினதில்லையாயின் உயிரைப்போக்குவலென்றே யெண்ணி, வருத்தத்தேமிக்கு நின்றேனென்றானென்க.

கட்டியங்காரன், நந்தகோன்சச்சந்தனோடிறந்தானாதலாலிவன் அரசனோடு நட்புடையானென்று தன்சுற்றத்தையும் அழிப்பானேயென்று கருதிக் காலிழுக்குற்று வீழ்ந்தேனாகவென்றது வீழ்ந்துஎனவும், தேவிக்குப்பிள்ளையுண்டென்றறிதலால் ஆலம்வித்தனை யதுமால் வழியுளதன்றாயின் எனவும் இதனைமறக்க என்பான்கேட்டிது மறக்கவெனவுங்கூறினான். கருமையென்னும்பண்பு "வெள்ளைப்புத்தி, வெண்கலம் என்றாற்போல இழிவின்மேல்நின்றது, வெள்ளைஎன்பது மந்தத்தின்மேலும், வெண்மை என்பது கலப்பின்மைமேலுநின்றாற்போல. தலைகழியலுற்றேன் உயர்திணையொடுசார்ந்த அஃறிணை உயர்திணை முடிபேற்றது திணைவழுவமைதி. முடிப்பல் தன்மைபொருமையெதிர்காலவினைமுற்று முடிபகுதி, பகரமெய்சந்தி, பகரமெய் எதிர்காலவிடைநிலை, அல்விகுதி. (சுசு)

(67) குலத்தொடுமுடிந்தகோன்றன்குடிவழிவாராநின்றேன்
நலத்தகுதொறுவினுள்ளேனுமங்கோவிந்தனென்பேன்
இலக்கணமமைந்தகோதாவரியெனவிசையிற்போந்த
நலத்தகுமனைவிபெற்றநங்கைகோவிந்தைஎன்பாள்.

இ - ள். குலத்து ஒடுமுடிந்த கோன்தன் குடிவழி — தன்குலத்தோடு அழிந்த சச்சந்தனதுகுடியின்வழியே, வாராநின்றேன்—இடைவிடாதுவாராநின்றேன், நலம் தகுதொறுவின்உள்ளேன்—வளத்துக்குத்தக்க இடைநிலத்தி

லுள்ளேன், நாமம்கோவிந்தன் என்பேன்—பெயர்கோவிந்தனென்று சொல்லப்படுவேன், கோதாவரி என்ன இசைஇல்போந்த— கோதாவரிஎன்று புகழாலெங்கும்பரந்த, இலக்கணம் அமைந்த நலத்தகுமனைவி—இலக்கணங்களமைந்த என்செல்வத்துக்குத் தக்கமனைவியானவள், பெற்றநங்கை கோவிந்தையென்பாள்—பெற்றபெண்ணிற்சிறந்தவள்கோவிந்தைஎன்று சொல்லப்படுவாள்.

ந - ரை. யான், கோன்குடி வழிவாராநின்றேன், இடையிடத்தேன், பெயர்கோவிந்த னென்றுகூறப்படுவேன், கோதாவரியென்று கூறிப்புகழாலெங்கும்பரந்த இலக்கணமமைந்த என்மனைவிபெற்றநங்கைகோவிந்தையென்றுகூறப்படுவாள்.

தன்பெயரும் தன்மனையாள்பெயரும் புத்திரியின்பெயரும் இதனாற்கூறப்பட்டன. தொறுபசுக்கூட்டம். அதுதானியாகுபெயராய்த்தானமாகியமுல்லைநிலத்தின்மேல்நின்றது. குலந்தோன்று தலருமைபற்றி முடிந்தவெனவும், அரசன் கோற்கீழ்வாழுங் குடிதானாதலால் கோன்குடிவழியெனவும், தன்குடியெல்லாம் இப்பொழுது தானாய்நிற்றலால் வாராநின்றேன் எனவும், பெண்களுக்குக்கூறிய முப்பத்திரண்டிலக்கணமுமுடைமையால் இலக்கணமமைந்த வெனவுங்கூறினா னெனக்கூறினார். குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல்என்னும் ஐந்துநிலங்களுக்கு முல்லை, நடுநிலமாதலால் இடையிடம் எனக்கொள்க. இடையர்எனவந்த பெயர்க்காரணமுமது. வாராநின்றேன், நிகழ்காலத்தில்வந்த இறந்தகாலத்தன்மை யொருமைவினைமுற்று வா பகுதி, ரகரவுகரம் விரித்தல்விகாரம், உகரக்கேடுசந்தி, ஆநில்நிகழ்காலவிடைநிலை, அனைத்தும் ஒருபகுதி, றரமெய்இடைநிலை, லகரத்திரிபுசந்தி, ஏன்விகுதி, ஆசாரியையாகக்கொண்டு நில்என்பதை நிகழ்கால இடைநிலையாக்கலுமொன்று. (௬௭)

(68) வம்புடைமுலையினாளென் மடமகள்மதர்வைநோக்கம்
அம்படியிருத்திநெஞ்சத்தழுத்தியிட்டனையதொப்பக்
கொம்படுநுசுப்பினாளைக்குறையிரந்துழந்துநின்ற
நம்படைதம்முளெல்லாநகைமுகமழிந்துநின்றேன்.

இ - ள். வம்புஉடையமுலையினாள் என்மடமகள்மதர்வைநோக்கம்—கச்சினையணிந்ததனத்தையுடைய என்புத்திரியினதுமதர்த்தபார்வையானது, அம்புஅடிஇருத்தி—அம்பினைத்தோளினடியிலேசெல்லவைத்து, நெஞ்சத்து அழுத்தியிட்டனையதுஒப்ப—மனத்திலழுத்தியதன்மையையொத்தலால், கொம்புஅடுநுசுப்பினாளை குறைஇரந்து—பூங்கொம்பினையொத்த இடையையுடைய அக்கோவிந்தையைப்பெறத்தமதுகுறைகூறிவேண்டி, உழந்துநின்றநம்படைதம்உள் எல்லாம்—வருந்திநின்ற நமது ஆயரிடத்தெல்லாம், நகைமுகம் அழிந்துநின்றேன்—முகமலர்ச்சியில்லாமல் மறுத்துநின்றேன்.

ந - ரை. முலையினாளாகிய என்மகள்நோக்கம், எல்லார்க்கும் அம்பைத்தோளடியிலே செல்லவைத்து நெஞ்சிலேயழுத்திய தன்மையையொத்தலாலே, அந்நுசுப்பினாளைப்பெற வேண்டுமென்று வருந்திநின்ற நம்ஆயரிடத்தெல்லா முகச்செவ்வியின்றி மறுத்துநின்றேனென்க.

தான்சீவகனுக்குத் தன்மகளைக்கொடுக்க நேர்ந்ததால் அவனையுளப்படுத்தி நம்படை என்றதால் வழாநிலை. சீவகன் தன்மகளைவிரும்பி மணம்புரிதற்கு இவ்வாறு சிறப்பித்துத் தன்மகளைக் கூறினான் என்பதுகருத்து. மதர்வைதொழிற்பெயர் மதர்பகுதி, வைபுடைபெயர்ச்சிவிகுதி. நோக்கம் கருவிப்பொருளில்வந்த தொழிற்பெயர் நோக்குபகுதி, உகரக்கெடுசந்தி. அம்விகுதி. ஒப்பகாரணப்பொருள் மேல்நிற்றலால் இறந்தகாலவினையெச்சமொ இடைச்சொற்பகுதி, பகரமெய்விரித்தல்விகாரம், பகரமெய்சந்தி, ஆவிகுதி. உழந்து இறந்தகாலவினையெச்சம் உழபகுதி. முதல்சினைக் கொற்றுமை யுண்மையால் சினைவினையைமுதல் மேலேற்றிமுகமழிந்துநின்றேன் என்றார். (௬௮)

(69) பாடகஞ்சுமந்தசெம்பொற்சிலம்படிப்பரவையல்குல்
சூடகமணிந்தமுன்கைச்சுடர்மணிப்பூணினாளை
ஆடகச்செம்பொற்பாவையேழுடன்றருவனைய
வாடலில்வதுவைகூடி மணமகனாகவென்றான்.

இ - ள். ஐய—சீவகனே, பாடகம்செம்பொன்சிலம்பு சுமந்தஅடி—பாடகத்தையுஞ் செவந்த பொன்னாலமைந்த சிலம்பினையுமணிந்த காலையும், பரவைஅல்குல்—பரந்தஅல்குலையும்,சூடகம் அணிந்தமுன்கை—வளையலையணிந்த முன்கையையுமுடைய, சுடர்மணிபூணினாளை—விளங்குமிரத்திரமழுத்திய ஆபரணத்தையுடைய என்புத்திரியினை, ஆடகம் செம்பொன்பாவை ஏழ்உடன்தருவன்—ஆடகம்என்னுஞ் செவந்தபொன்னாற்செய்த பதுமையேழுடனேகொடுப்பேன், வாடல்இல்வதுவைகூடி மணமகன்ஆகஎன்றான்—குறைவற்றமணஞ்செய்து மணமகனாகக் கடவாயென்று நந்தகோன்கூறினான்.

க - ரை. ஐயனே, அடிமுதலியவற்றையுடைய கோவிந்தையைப் பாவையேழுடனே தருவேன், குறைவற, மணம்பொருந்தி மணமகனாவாயாகவென்றானென்க.

முன்னர் இன்னகேள் என்றது இச்செய்யுளின்கருத்தையெனக்கொள்க. ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம் என்னும்நால்வகைப்பொன்னுள் ஆடகம் ஒருவகையாதலால் ஆடகச்செம்பொன் என்றார். இது ஆடகமென்னுஞ் சிறப்புப்பெயர் பொன்என்னும் பொதுப்பெயரை விசேடித்துவந்த இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடர். (௬௯)

வேறு.

(70) வெண்ணெய்போன்றூறினியள்மேம்பால்போற்றீஞ்சொல்லள்
உண்ணவுருக்கியவாநெய்போன்மேனியள்
வண்ணவநமுலைமாதர்மடநோக்கி
கண்ணுங்கருவிளய்போதிரண்டேகண்டாய்.

இ - ள். வநம் வண்ணம் முலைமாதர் மடமைநோக்கி—சந்தனக்கோலத்தின் வண்ணமமைந்த தனத்தையும் விருப்பஞ்செய்யு முதிராத பார்வையையுமுடைய என்புத்திரி, வெண்ணெய்போன்று ஊறு இனியள் — வெண்ணெயைப்போலக் குழைந்து இனியபரிசத்தையுடையவள், மேவும்பால்போல் தீஞ்சொல்லள் - விரும்புமபாலையொத்த இனியசொல்லையுடையவள், உண்ண

உருக்கியஆம் நெய்போல் மேனியள்—உண்ணும்படி யுருக்கிய அமைந்த புத்துருக்கு நெய்போலநறுமணங்க மழுமேனியையுடையவள், கண்டம் (இவையன்றி) அவள் கண்களும், கருவிளம்போது இரண்டு ஏகண்டாய்—கருவிளமலரிரண்டே காணாய்.

க - ரை. முலையிணையுங் காதலிணையுமுடைய மடநோக்கி, வெண்ணெய் போற்குழைந்தினியள், சொல்லள், மேனியள், அவையன்றி யவள்கண்களும் பூவிரண்டேகாண்.

கண்டாய் தெளிவுபற்றிவந்த காலவழுவமைதி. ஊறு இனியள் விகுதி பிரித்து இனிய ஊறள் எனக்கொள்க. "கொடிச்சேவலான்" என்றாற்போல் மேவும் என்னும் பெயரெச்சத்தி னீற்றயலுயிர் மெய்யோடுகெட்டு மேம்பால் எனநின்றது. மேவல் விரும்பல். (எ0)

(71) குலநினையல்நம்பிகொழுங்கயற்கண்வள்ளி
நலனுகர்ந்தானன்றேநறுந்தார்முருகன்
நிலமகட்குக்கேள்வனுநீணிரைநப்பின்னை
இலவலர்வாயின்னமிர்தமெய்தினானன்றே.

இ - ள். நம்பி—சீவகனே, நறுந்தார்முருகன்—நறுமணங்க பழுமாலையணிந்த முருகக்கடவுள், கொழுங்கயல் கண்வள்ளிநலன் நுகர்ந்தான் அன்றே—கொழுவியகயல்போன்ற கண்களையுடைய வள்ளிநாச்சியாரின்பத்தை நுகர்ந்தானல்லவா, நிலமகட்கு கேள்வன் உம்—பூதேவிக்கு நாயகனாகிய திருமாலும், நீள்நிரைநப்பின்னை இலவு அலர்வாய்இன் அமிர்தம் எய்தினான் — மிக்கபசுக்கூட்டத்தையுடைய சிறந்தபின்னைப் பிராட்டியின் முள்ளிலவின் மலர்போன்றவாயிலுள்ள இனிய அமிர்தத்தை நுகர்ந்தானல்லவா, குலம்நினையல்—குலத்தில் உயர்வுதாழ்வு கருதாதொழிக

ந - ரை. யாமறிய முருகன் வள்ளி நலநுகர்ந்தானன்றே, திருமால்பின்னையைப் புணர்ந்தானன்றே, குலத்திற் றாழ்வுகருதாதொழிக.

நச்சென்னை, நப்பாலத்தன், நக்கீரன் என்பவற்றில்நகரம் சிறப்புப்பொருளையுணர்த்தும் ஓரிடைச்சொல்லாய்நிற்றல்போல நப்பின்னையென்பதில் நகரமும் சிறப்புப்பொருளையுணர்த்தும் ஓரிடைச்சொல்லாய் நின்றது. நமது பின்னையென்னும் பொருள்மேல்நின்றால்நம்பின்னை என்றதுநப்பின்னையென வலிக்கும் வழிவலித்தல் எனக்கொள்க. நினையல் எதிர்மறைவியங்கோள்வினைமுற்று நினைபகுதி, யகரமெய்சந்தி, அல்விகுதி. முன்னிலையொருமையெதிர்மறையேவலில்வரின் நினையாதேயெனப் பொருள்கொள்க. (எக)

(72) சேதாநறுநெய்யுந்தீம்பாற்சுமைத்தயிரும்
பாதாலமெல்லாநிறைத்திடுவன்பைந்தாரோய்
போதார்புனைகோதைசூட்டுன்னடித்தியை
யாதாவதெல்லாமறிந்தருளியென்றான்.

இ - ள். பைந்தாரோய்—பசியமாலையையுடையாய், ஆவதுயாது (நீமணம்புரிந்தால்) இதனால் வருந்தீங்குயாது, எல்லாம் அறிந்தருளி—நான்சொல்லியதையெல்லாந் திருவுளம்பற்றி, உன் அடித்தியைபோது ஆர் புனைகோ

தைசூட்டு—உன்னடிச்சியை மலரால்நிறைய அலங்கரித்த மாலைசூட்டாய் (சூட்டுமிடத்துக் கல்யாணஞ்செய்தற்குச் சிறிதும்நானல்லேன்) சேதாநறுநெய் உம் தீம்பால் சுவைதயிர்உம்—பசுவினது மணங்கமழுநெய்யையும் இனியபாலையும் ஆடையையுடைய தயிரையும், பாதாலம் எல்லாம்நிறைத்திடுவன் என்றான்—பாதாளங்களையெல்லாம் நிறைப்பேனென்று கூறினான்.

ந - ரை. யாது ஆவது, யான்கூறினவெல்லாந் திருவுளம்பற்றி நின்னடிச்சியைக் கோதைசூட்டுவாயாக, சூட்டுமிடத்துக் கல்யாணஞ் செய்தற்குச் சிறியேனல்லேன், நெய்யும் பாலுந் தயிரும் பாதாளமெல்லா நிறைப்பேனென்றானென்க.

மணமகளைக் கடவாயென்ற விடத்துச் சிவகனுக்கு முகமலர்ச்சி காணாமையாலிது கூறியுடம்படுத்தினானென்பது கருத்து.

சேதாவென்றசெய்யுள் குலநிலையல் என்னுஞ் செய்யுளுக்கு முதலிலுள்ளது, அதனைப்பின்னேவைத்தது பொருளியைபுநோக்கி. சுவை ஆடை. அடித்தி அடிமைபகுதி, தகரமெய் பெயரிடைநிலை, தகரமெய்சந்தி, இவிகுதி. அடிச்சியென்றவிடத்துச் சகரம்பெயரிடை நிலையாகக்கொள்க. சேதா செந்நிறமமைந்தபசு,வருமொழி உயிரானவழிசெம்மையென்னும்பகுதி, ஈறுகெட்டு முதனீண்டுமகரம் தகரமெய்யாகத்திரிந்து நின்றது. நிறைத்திடுவன் எதிர்காலத்தில்வந்த பிறவினைத்தன்மை யொருமை வினைமுற்று நிறைத்து பிறவினைப்பகுதி, உகரக்கேடுசந்தி, இடுபகுதிப் பொருள்விகுதி, அனைத்தும் ஒருபகுதி, வகரமெய் எதிர்காலவிடைநிலை, அன்புதியனபுகுதலால்வந்த தன்மையொருமைவிகுதி. நின் உன்னென வந்தது மரூஉ. (எஉ)

வேறு.

(73) கன்னியர்குலத்தின்மிக்கார்கதிர்முலைக்கன்னிமார்ப
முன்னினர்முயங்கினல்லால்முறிமிடைபடலைமாலைப்
பொன்னிழைமகளிரொவ்வாதவரைமுன்புணர்தல்செல்லார்
இன்னதான்முறைமைமாந்தர்க்கெனமனத்தெண்ணினானே.

இ - ள். முறிமிடை படலைமாலை பொன்இழைமகளிர் (நம்குலத்தோர்) தளிரால்நெருங்கிய மாலையினையும் மலராற்றொடுத்த மாலையினையும் பொன்னாற்செய்த ஆபரணத்தையுமுடைய பெண்களை மணஞ்செய்யுமிடத்து, கன்னியர் குலத்துஇன் மிக்கார்கதிர் முலைகன்னிமார்பம் — கன்னிப்பெண்களுள் மேம்பட்ட குலத்திற்றோன்றிய பெண்களது முத்துவடத்தால் விளங்குந்தனத்தையுடைய அழியாதமார்பை, முன்னினர்முயங்கின் அல்லாமல்—எதிர்ப்பட்டுக்கலந்தாலல்லாமல், ஒவ்வாதவர்ஐ முன்புணர்தல் செல்லார்—தங்குலத்திற்கு ஒவ்வாதவரைமுற்படமணஞ்செய்யமாட்டார்கள், மாந்தர்க்குமுறைமை இன்னதுஎன (தேவர்க்கொழிய) மக்கட்பிறப்பினர்க்குமுறைமையித்தன்மையதாயிருந்ததுஎன்று, மனத்துஎண்ணினன்-தன்மனத்தினிடத்தேபதுமுகனை நினைத்தான்.

ந - ரை. நங்குலத்தோர்வகைமாலையினையும் இழையினையுமுடையமகளிரைவரையுமிடத்து, கன்னியரிற்குலத்தின் மிக்காருடைய அழியாதமார்பத்

தையெதிர்ப்பட்டாராய் முயங்கினல்லது, தங்குலத்திற்கு ஒவ்வாதாரை முற்ப
டவரையார், அதுவும் அன்றித்தேவரையொழிய மக்கட்கு முறைமை இத்
தன்மையாயிருந்ததெனக் கருதிப்பின்பு, தன்மனத்தினிடத்தேபது முகனுக்
குக் கொடுப்பதாக எண்ணினன் என்க.

தேவர்க்கு முறையில்லையென்பார் தேவரையொழிய என்றார். கதிர் என்
றகுறிப்பால் முத்துவடம் வருவிக்கப்பட்டது. முன்னினர் முற்றெச்சம்.
அல்லாமல் மகரம் இடைக்குறை. மாந்தர் பன்மைச்சொல், ஒருமையில்
வாராது. (௭௩)

(74) கோட்டிளங்களிறுபோல்வானந்தகோன்முகத்தைநோக்கி
மோட்டிளமுலையினின்மடமகளெனக்குமாமான்
சூட்டொடுகண்ணியன்றேயென்செய்வானிவைகள்சொல்லி
நீட்டித்தல்குணமோவென்றுநெஞ்சகங்குளிர்ப்பச்சொன்னான்.

இ - ள். கோடு இளங்களிறுபோல்வான் — கொம்பினையுடைய இள
மைதங்கிய யானையையொத்த சீவகன், நந்தகோன் முகத்தைநோக்கி—நந்த
கோன் முகத்தைப்பார்த்து, மோடு இளமுலையினாள் நின்மடமகள் — உயர்ந்த
முதிராத தனத்தையுடைய உனது புத்திரி, மாமான் எனக்கு சூட்டொடு கண்
ணி அன்றுஎ—மாமான் எனக்குச்சூட்டினோடு கண்ணியல்லவா, இவைகள்
சொல்லிநீட்டித்தல் செய்வான்என்—இவைகளைப்பேசிக் காலத்தைப்போக்கு
வானேன், குணம்ஓ என்று—இவை குணமாவென்று, நெஞ்சு அகம் குளிர்ப்
பசொன்னான்—நெஞ்சிடங்குளிரும்படி சொன்னான்.

ந - ரை. களிறுபோல்வான், நந்தகோன் முகனைப்பார்த்து, முலையினா
ளாகிய நின்மகள் மாமான் எனக்குச்சூட்டொடு கண்ணியல்லவோ, இவைகள்
சொல்லி நீட்டித்தல் செய்வானேன், அது குணமோவென்று நெஞ்சிடங்கு
ளிரும்படி கூறினான் என்க.

பதுமுகனுக்குக் கொடுப்பதாகத் தன்மனத்தேகருதுதலால் நின்மடமகள்
மாமான் எனவும், இடுந்தன்மையன்றிச்சூட்டுந் தன்மையோடுகூடிய கண்ணி
யல்லவோவென்றும், நெற்றிச்சூட்டுங் கண்ணியுமல்லவோவென்று மிரண்டு
பொருள்படச் சூட்டொடு கண்ணியன்றேயென்றுங் கூறினான். இவ்வாறுகூ
றவே "மார்பிற்கு மாலையிடுகவென்றுந் தலைக்குக் கண்ணிசூட்டுக வெனவுங்
கூறினான். இவ்வாறுகூறவே "மார்பிற்கு மாலையிடுகவென்றுந் தலைக்குக்
கண்ணிசூட்டுகவென்றும்" பெருமபான்மையும் வழக்குநடத்தலின். தலைமேல்
சூட்டப்படுங் கண்ணியல்லவோவென்று சொன்னானாக நந்தகோன் நினைத்
தான் எனவும், நெற்றிச்சூட்டுப் புருடர்க்கு ஆகாததன்மையும் கண்ணி புருட
ர்க்கு ஆகுந்தன்மைபோலத் தன்குலத்திற்கு அவளைமணஞ்செய்தல் சிறிதும்
பொருந்தாமையால் சூட்டின்தன்மையும், பதுமுகன் குலத்திற்குச்சிறிதுபொ
ருந்துதலால் கண்ணியின் தன்மையுமுடையளென்று சீவகன் நினைத்தான்
எனவும் பொருள்படுதல்காண்க. பதுமுகன் வணிகர்குலமாதலால் ஆயரிலும்
வாணிகஞ்செய்வாரிருத்தலின் பதுமுகன்குலத்திற்குச் சிறிதுபொருந்தும் என்
றது. மாமான் எனக்குச்சூட்டொடு கண்ணியன்றே யென்றதற்குத் தனக்கு

ஆகாமையால் எனக்குப்புலாலும், பதுமுகற்கு ஆதலால் பூமாலையுமல்லவா எனப்பொருள்கொள்ளுதலும் ஒன்று. எனக்கும் ஆமான்சூட்டு இனியென்க்கும் காட்டுமோட்டின்சூட்டு எனப்பொருள்கொள்ளுதலும் ஒன்று. நெஞ்சகம் நெஞ்சினது இடமெனவிரிதலால் ஆறும்வேற்றுமைத்தொகைநிலைத்தொடர். உபமேயத்தையுணர்த்துஞ்சொற்களாற்குறித்தறிதற்குத்தகுதியாகச்சூட்டோடு கன்னியன்றே என்றது குறிநிலையணி.   (எ௪)

(75) தேன்சொரிமுல்லைக்கண்ணிச்செந்துவராடையாயர்
கோன்பெரிதுவந்துபோகிக்குடைதயிர்குழும்பப்புக்கு
மான்கறிகற்றகூழைமௌவல்சூழ்மயிலைப்பந்தர்க்
கான்சொரிமுல்லைத்தாரான்கடிவினைமுடிகவென்றான்.

இ - ள். தேன்சொரிமுல்லை கண்ணிசெந்துவர் ஆடை ஆயர்கோன்— தேனைச்சிந்து முல்லைமலர் மாலையையும் செவந்தது வருட்டிய ஆடையையுமுடைய இடையர்க்கரசனாகிய, கான்சொரிமுல்லைதாரான்—வாசம்வீசு முல்லைமாலையையணிந்த நந்தகோன், பெரிது உவந்துபோகி — மிகவு மகிழ்ந்து சென்று, மான்கறிகற்ற கூழைமௌவல்சூழ் மயிலைபந்தர்—மான்கள் கடித்த லைக்கற்ற சிறுபுதலாகிய மல்லிகைசூழ்ந்த இருவாட்சிப்பந்தலில், குடைதயிர் குழும்பபுக்கு—கடையுந்தயிர்கலங்கவொலிக்கப்புகுந்து, கடிவினைமுடிக என்றான்—கல்யாணமுடிவதாகவென்று கூறினான்.

ந - ரை. முல்லைத்தாரானாகிய ஆயர்கோன் உவந்துபோய்ப்புக்குப்பந்தரிலே கடிவினைமுடிவதாக வென்றானென்க.

தயிர்முழங்கப்போதல் நன்னிமித்தம் ஆதலால் குடைதயிர் குழும்பப்புக்குஎன்றார். குடைதயிர் குழுமப்புக்கு என்னும் பாடத்துக்குத் தயிர்கடைதலால் ஓசைநெருங்க என்பதுபொருள். தயிர் உடையும்போது ஓசையெழுதலால் தயிர்குழும்ப என்றார். குடைதல் கடைதல். பந்தல் பந்தர் இறுதிநிலைப்போலி. குழும்ப நிகழ்காலவினையெச்சம் குழும்புபகுதி.   (எ௫)

(76) கனிவளர்கிளவிகாமர்சிறுநுதல்புருவங்காமன்
குனிவளர்சிலையைக்கொன்றகுவளைக்கண்கயலைக்கொன்ற
இனியுளரல்லராயரெனச்சிலம்பரற்றத்தந்து
பனிவளர்கோதைமாதர்பாவையைப்பரவிவைத்தார்.

இ - ள். கனிவளர்கிளவி — சுவைபழுத்துவளருஞ் சொல்லையுடைய கோவிந்தையின், காமர்சிறுநுதல் புருவம் — விருப்பஞ்செய்யுஞ் சிறியநெற்றியும் புருவமும், காமன்குனிவு வளர்சிலையைகொன்ற— மன்மதனது வளைந்த வில்லைக்கெடுத்தன, குவளைகண் கயலைகொன்ற—குவளைமலர்போன்ற கண்கள் கயலைக்கெடுத்தன, ஆயர் இனி உளர் அல்லர் என்னசிலம்பு அரற்ற — ஆயர்கள் இவற்றைக்கண்டு இனியுயிரோடிருப்பாரல்லரென்று சிலம்புகளொலிக்க, பாவையைபனிவளர் கோதைமாதர்தந்து—பதுமைபோன்ற அக்கோவிந்தையைக் குளிர்ந்த கூந்தலையுடைய தோழிப்பெண்கள் கொண்டுவந்து, பரவிவைத்தார்—தெய்வத்தைவணங்கி மஞ்சனச்சாலையில்வைத்தனர்.

ந - ரை. மாதர், கனிந்தமைதோற்றுகின்ற கிளவியையுடையாளுடை

யநுதலும் புருவமுஞ் சிலையைக் கெடுத்தன, கண்கயலைக் கெடுத்தன, இப்பருவங்கண்டு ஆயருயிர் கொண்டிருப்பாரல்லரென்று சிலம்பொலியாநிற்கப் பாவையைத்தந்து பரவிவைத்தார் என்க.

காமமருவு காமர்தொகுத்தல். குனிவு குனிதொகுத்தல் விகாரம். அரற்றுநிகழ்காலவினையெச்சம் அரற்றுபகுதி. (எசு)

(77) நாழியுளிழுதுநாகான்கன்றுதின்றொழிந்தபுற்றோய்த்
தூழிதோறாவுந்தோழும்போன்றுடன்மூக்கவென்று
தாழிருங்குழலினாளைநெய்தலைப்பெய்துவாழ்த்தி
மூழைநீர்சொரிந்துமொய்கொளாய்ச்சியராட்டினாரே.

இ-ள். மொய்கொள் ஆய்ச்சியர்—நெருங்கிய இடைப்பெண்கள், தாழ்இருங்குழலினாளை—தாழ்ந்துநீண்டகூந்தலையுடைய கோவிந்தையை, ஆஉம் தோழூஉம்போன்று-பசுவுந்தொழுவும்போல, ஊழிதோறு உடன்மூக்க என்று வாழ்த்தி—ஊழிதோறு முன்கணவனு நீயுஞ்சேர மூப்படையக் கடவீரென்று ஆசிவசனங்கூறி, நாழிஉள் இழுதுநாகு ஆன்கன்றுதின்று ஒழிந்தபுல்தோய்த்து—நாழியிலிருந்த நெய்விழுதை நாகாகிய பசுவின்கன்றுதின்றுகழித்தபுல்லினால்தோய்த்து, நெய்தலைபெய்து—அந்நெய்யைத் தலையிலேவார்த்து, மூழை நீர்சொரிந்து ஆட்டினார் — முகவையால் நீர்முகந்து பெய்துமங்கள நானஞ் செய்வித்தார்.

க-ரை. ஆய்ச்சியர், குழலினாளைப் பசுவுந்தொழுவும்போலே யூழிதோறும் நீயும் உன்கணவனுஞ்சேர மூப்பீராகவென்று வாழ்த்தி, நாழியுளிருந்த நெய்விழுதை நாகாகிய பசுவின்கன்றுதின் றொழிந்தபுல்லாலே தோய்த்து, அந்நெய்யைத் தலையிலேவார்த்து. மூழையாலே நீரைச்சொரிந்தாட்டினார் என்க.

மூழைமுகவை. இது நெய்யளக்கும் ஒருவகைக்கருவி. இதனால் மங்களநானஞ்செய்வித்தார் என்பதுகூறப்பட்டது. மங்களநானஞ்செய்விக்கும்போது இவ்வாறுசெய்வித்தல் அவர்கள்மரபுக்குரிய இலக்கணமாதலால் இது சாதித்தன்மையணி. நெய் என்பதன்முதலில் அகரச்சுட்டுத் தொகுத்தல். மூக்கவியங்கோள் வினைமுற்று மூபகுதி, ககரமெய்சந்தி, கவிகுதி. நாகுஆன் கன்று நாகென்னும் பொதுப்பெயர் ஆன்கன்றென்னுஞ் சிறப்புப்பெயரை விசேடித்துவந்த இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடர். நாகு என்பது, ஓரறிவுயிர்முதல் ஐயறிவுயிர்க்குஞ்செல்லும் இளமைப்பெயர். (எஎ)

(78) ஏறங்கோண்முழங்கவாயரெடுத்துக்கொண்டேகிமூதூர்ச்
சாறெங்குமயரப்புக்குநந்தகோன்றன்கையேந்தி
வீறுயர்கலசநன்னீர்சொரிந்தனன்வீரனேற்றான்
பாறுகொள்பரிதிவைவேற்பதுமுககுமரற்கென்றே.

இ-ள். ஏறங்கோள்முழங்க—முல்லைநிலப்பறைமுழங்க, ஆயர் எடுத்துக்கொண்டு—ஆயர்களவளைச் சிவிகையிலெடுத்துக்கொண்டு, மூதூஊர் எங்குஉம் சாறு அயரஏகி—தொன்றுதொட்டுள்ள ஊரெங்கும் விழவுசெய்ய ஊர்க்கோலஞ்செய்து, புக்கு (கந்துக்கடன்வீட்டில்) புகுதலால், நந்தகோன் வீறு

உயர்கலசம் தன்கைஏந்தி—நந்தகோனவன் நிகரில்லாத அழகில்மிக்க கலசத்தைத் தன்கையிலேந்தி, நல்நீர்சொரிந்தனன்—தாரைவார்த்தனன், பாறுகொள் பரிதிவைவேல்பதுமுக குமரற்குஎன்று வீரன்ஏற்றான் — பருந்துகள் சுழலும் சூரியனைப்போலும் ஒளிவாய்ந்தகூரியவேலையேந்திய பதுமுகனுக்கு நின்மகள் உரியவளென்று சீவகன்சொல்லியேற்றனன்.

ந - ரை. ஆயர் ஏறுகோட்பறை முழங்காநிற்க, அவளையெடுத்துக் கொண்டு மூதூரொங்குஞ் சாற்றயரவேகிப் பின்பு கந்துகன் மனையிலே புகுதலின், நந்தகோன் தன்கையிலே கலசத்தையேந்தி நீரைச்சொரிந்தான், வீரனும்பதுமுகற்கென்றுகூறி யேற்றானென்க.

வீறுவேறொன்றிற்கு இல்லாதஅழகு. இதனால் கல்யாணஞ்செய்தது கூறினார். புக்கு என்னும் இறந்தகாலவினையெச்சம் காரணகாரியப்பொருள் மேல்நின்றது. பகைவரூன்செறிதலால் பாறுகொள் எனவும், சூரியன்புறவிருளையோட்டுதல் போற்பகையிருளோட்டுதலால்பரிதிவேல் எனவுங்கூறினார்.

(79) நெய்விலைப்பசும்பொற்றோடுநிழன்மணிக்குழையுநீவி
மைவிரிகுழலினாளைமங்கலக்கடிப்புச்சேர்த்திப்
பெய்தனர்பிணையன்மாலையோரிலைச்சாந்துபூசிச்
செய்தனர்சிறுபுன்கோலந்தொறுத்தியர்திகைத்துநின்றார்.

இ - ள். மைவிரிகுழலினாளை—மேகம்போலக் கருநிறம்பரந்த கூந்தலையுடைய கோவிந்தையை, நெய்விலை பசும்பொன்தோடுஉம் — நெய்விலையால் வந்த பசியபொன்னாலாகிய தோட்டையும், நிழல்மணி குழைஉம்நீவி—ஒளியமைந்த இரத்தினங்களிழைத்த குண்டலத்தையுநீக்கி, மங்கலம்கடிப்புசேர்த்தி—மங்கலத்திற்குரிய குதம்பையையிட்டு, பிணையல் மாலைபெய்தனர் — மாலைசூட்டி, ஓர் இலைசாந்துபூசி சிறுபுன்கோலம்செய்தனர் — ஓரிலையிற்கொண்டு வந்த சந்தனத்தையும்பூசிச் சிறியமங்கலக் கோலஞ்செய்தார்கள், தொறுத்தியர் திகைத்துநின்றார் (அதுகண்டு) ஆய்ச்சியர் மயங்கிநின்றார்கள்.

ந - ரை. கருமைவிரிந்த குழலினாளை, நெய்விலையாலுண்டான பொற்றோட்டையுங் குழையையுநீக்கி மங்கலமான கடிப்பிணையையிட்டு மாலையையிட்டனராய், ஓரிலையிலிடுவித்துவந்தசந்தனத்தையும்பூசிக்கோலஞ்செய்தார், அதுகண்டு ஆய்ச்சியர் திகைத்துநின்றார் என்க.

"சந்திரபாணித்தகைபெறு கடிப்பிணை" என்றார்பிறரும். பெய்தனர் முற்றெச்சம். நீவி இறந்தகாலவினையெச்சம் நீபகுதி, பகுதியல்லாதனவெல்லாம் இடைச் சொல்லாதலால் "இடையுரிவடசொலின்" என்ற சூ—ஆல் வந்த வகரமெய்சந்தி, இஎச்சவிகுதி. இதனடியாக நீத்தல், நீத்த, நீத்து, நீத்தான் என வினைவிகற்பங்கள் வரும். (௭௧)

(80) தீம்பாற்கடலைத்திரைபொங்கக்கடைந்துதேவர்
தாம்பாற்படுத்தவமிர்தோதடமாலைவேய்த்தோள்
ஆம்பாற்குடவர்மகளோவென்றரிவைநைய
வோம்பாவொழுக்கத்துணர்வொன்றிலனாயினானே.

இ - ள். தேவர் தீம்பால்கடலை திரைபொங்க கடைந்து—(பதுமுகன்) தேவர்கள் இனியபாற்கடலை அலையெழக்கடைந்து, தம்பால்படுத்த அமிர்துஓ—தம்மிடத்தகப்படுத்திய அமிர்தமோ, அம்பால் குடவர்மகள்ஓ என்று—அழகிய பாலையுமுடைய ஆயர்மகளோவென்று நயப்புரைகூறி, தடமாலை வேய்தோள் அரிவை (இரண்டாயிரம் பசுக்களோடும் பொற்பாவையேழோடும்வந்த) பெருமைவாய்ந்தமலர்மாலையினையு மூங்கிலையொத்ததோளையுமுடையகோவிந்தை, ஓம்பாத ஒழுக்கத்துநைய—நீக்கவொண்ணாதபுணர்ச்சியொழுக்கத்திலவசமாக, உணர்வுஒன்றுஇலன் ஆயினான்—தானும்அறிவுமயங்கினான்.

ந - ரை. இவன் தேவர்கடலைக்கடந்து தம்மிடத்தே யகப்படுத்த அமுதமோ, அன்றி அழகியபாலையுடைய இடையர்மகளோ, என்று நயப்புரைத் துப்பின்னும் பரிகரிக்கவொண்ணாத புணர்ச்சியொழுக்கத்திலே மாலையிணையுந் தோளிணையுமுடைய அரிவை அவசமாகத் தானும் அறிவுமயங்கினான் என்க.

கடைகிறகாலத்தில் அலையெழுதலால் திரைபொங்க எனவும், தன்மனத்திற் கழிபெருங்காதலுடையவனாய்த் தன்னயப்புரைத்தலால் நயப்புரையென்னுந் துறைதோன்றத் தாம்பாற்படுத்த வமிர்தோவெனவும், ஆம்பாற்குடவர்மகளோ வெனவுங்கூறினார். திரைவிணைமுதற்பொருளில்வந்த இகரவிகுதியொடுபுணர்ந்து குன்றிய தொழிற்பெயர். தம் தாம், அம் ஆம் நீட்டும் வழி நீட்டல். அமிர்து மரணநீக்குவது. வேய்த்தோள் வடிவத்திற்கு அன்றிநிறத்திற்கும் உவமையாய் நிற்றலால் சமுச்சயவணி. "நலத்தகையவட்கு நாகாாயிரத்திரட்டிநன்பொன் - இலக்கணப்பாவையேழுங் கொடுத்தனன்போக" எனமுன்னர்கூறுதலால் இரண்டாயிரம் பசுக்களோடும்பொற்பாவையேழோடும்வந்த எனவருவித்தாம். (அ௦)

தொடர்ச்சி.

"சில்லரிச்சிலம்பின்" "ஆகமுமிடையும்" "நலத்தகையவட்கு" "கள்வாய்விரிந்த" என்னு முதற்குறிப்புகளையுடைய செய்யுள்கள் பரீட்சைக்கு விலக்குகளாதலால் விலக்கப்பட்டன.

கோவிந்தையார் வரலாற்றுச்சுருக்கம்.

சிலநாள்கழிந்து சீவகனுக்குப்பதினெந்தாண்டுசென்றபின், ஒருநாள் இளவேனிற்காலத்தில்அரசன்பசுக்கள் இங்குள்ளமலையில்மேயும், அப்போதுநாம் கவர்வோமென்று அம்மலையில் வேடர்கள்வந்து நெருங்கி யவ்வரசன் பசுக்களைக்கவர்ந்துசெல்ல, அப்பசுக்களைக் காக்கும் ஆயர்கள் அவ்வேடர்களோ டெதிர்த்துப்போர்செய்யும் வலிமைதமக்கு இல்லாமையால் மனம்வருந்தித் துணுக்குற்றுக் கட்டியங்காரனிடத்து விரைந்துவந்து முறையிட்டார்கள், அப்போது அக்கட்டியங்காரன் சினந்து தன்புதல்வர் நூற்றுவரையும் தன்மைத்துனன்மதனனையும் நோக்கிநீங்கள் சேனையுடன் சென்று அவ்வேடர்களை வென்று பசுக்களைமீட்டுவாருங்களெனக் கட்டளையிட, அவர்கள்சேனையோடு சென்று போர்செய்து அவ்வேடரால் முறியடிக்கப்பட்டுப் புறங்காட்டிவந்தனர்கள். அந்த ஆயர்கள் மீளவந்து நடந்தசெய்தியை அக்கட்டியங்காரனுக்குக்கூற அதுகேட்டு அவன்வாளா இருந்தனன்; அதனை யவ்வாயர்தலைவன் நந்தகோன் தெரிந்து வருத்தங்கூர்ந்து இப்பசுமந்தையை மீட்டுவருவோர் யாராயினுமாக, அவர்க்கே என்கன்னிகையைக் கொடுப்பேன் என்று எங்கும்பறைசாற்றினன், அதுகேட்டுப் பலவீரர்களும் அவ்வேடருக்கு அஞ்சிவாளாவிருந்தனர்கள், அதனையறிந்த அச்சீவகன் வஞ்சினங்கூறி யுத்தசன்னத்தனாய்த்தன்தோழருடன்சென்று அவ்வேடர்கள் ஐம்பத்தாறுயிரவரும் தனக்கு ஒருவகையாலும் பகைவரல்லாமையாலவர்களுயிரைச்சூறையாடாது தன்கைவில்லாலச்சுறுத்தி அந்நிரையைமீட்டுவந்து அந்நந்தகோன் வேண்டுகோளின்படி, அவன் மகளை மணம்புரிதல் தன்மரபிற்குப்பொருந்தாதாதலால்தன்தோழனாகிய பதுமுகனுக்கு வாணிபத்தால் ஒருவாறியைதலால் மணஞ்செய்வித்தனன்.

பதுமுகன், சீவகன் தோழர்கள் சீதத்தன், புத்திசேனன், தேவதத்தன், பதுமுகன் என்னும் நால்வருளொருவன்.

MAHAMAHOPADHYAYA ... LIBRARY